AR
28

வேளச்சேரி

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008.
2017, திருவள்ளுவர் ஆண்டு - 2048.

வேளச்சேரி

தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டம்
(TANII) 2017-2018-ஆம் ஆண்டு
நிதியின் கீழ் வெளியிடப்பட்டது

வேளச்சேரி

ஆசிரியர்
க.ஆ. கவிதா

பதிப்பாசிரியர்
முனைவர் டி. ஜகந்நாதன், இ.ஆ.ப.,
ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008.
திருவள்ளுவர் ஆண்டு 2049.

BIBLIOGRAPHICAL DATA

TITLE	:	**VELACHERY**
Editor	:	**Dr. D. JAGANNATHAN, I.A.S.** Commissioner (FAC)
Author	:	**K.A. Kavitha**
Copyright	:	Tamilnadu State Department of Archaeology
Subject	:	History
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	295
Year	:	2018
No. of Copies	:	1000
Type Point	:	13
No. of Pages	:	176
Paper Used	:	80Gsm Maplitho
Publisher	:	State Dept. of Archaeology, Tamil Valarchi Valaagam, Thamizh salai, Egmore, Chennai - 600 008.
Price	:	Rs. 51/-

பொருளடக்கம்

பதிப்புரை

பக்கம்

1. ஊரும் பேரும் ... 1
2. கோயில் அமைப்பும், இலக்கியமும் ... 7
3. கவின்மிகு கலைகள் ... 23
   அ. கட்டடக்கலை
   ஆ. சிற்பக்கலை
   ஈ. செப்புத் திருமேனிகள்
4. கல்வெட்டுச் செய்திகள் ... 73
   அ. அரசியல் வரலாறு
   ஆ. கல்வெட்டில் நாட்டுப்பிரிவு
   இ. சமயம்
   ஈ. சமுதாயம்
   உ. பொருளியல் வாழ்க்கை
5. திருவிழாக்கள் ... 132

பிற்சேர்க்கை

துணைநூற்பட்டியல்

கல்வெட்டு வாசகம்

நிழற்படம்

முனைவர் **டி. ஜகந்நாதன்,** இ.ஆ.ப.,
ஆணையர் (மு.கூ.பொ)

தொல்லியல் துறை,
தமிழ்வளர்ச்சி வளாகம்,
தமிழ்ச் சாலை,
சென்னை-600 008.

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, தமிழகத்திலுள்ள கல்வெட்டுகள், தொல்லியல், அகழாய்வு, தமிழகக் கோயில்களின் கட்டடம், கலை, சிற்பம், ஓவியம், செப்புத்திருமேனிகள் ஆகியவற்றைப் பற்றி விரிவாக மாணவர்கள் கற்க வேண்டி 1973-74-ஆம் ஆண்டு கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஒன்றினை நிறுவியது. இக்கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஆண்டுதோறும் முதுகலைப் பட்டம் பெற்ற எட்டு (8) மாணவர்களுக்கு கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் என்னும் முதுநிலைப் பட்டயம் ஒன்றினை வழங்குகிறது. இதுவரை இப்பயிற்சி நிறுவனத்தில் 234 மாணவர்கள் பயின்றுள்ளனர்.

இம்மாணவர்களது பயிற்சிக் காலத்தில் ஒரு குறிப்பிட்ட கோயிலைத் தேர்வு செய்து அவ்வூர் அமைந்துள்ள கோயில்களைப் பற்றி விரிவாக ஆய்வு செய்து ஆய்வேடு ஒன்றினைச் சமர்ப்பிக்கின்றனர். இவ்வாய்வெடுகளில் இதுவரை 45 ஆய்வேடுகள் நூல் வடிவம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் 2008-2009-ஆம் ஆண்டு பயின்ற செல்வி. க.ஆ. கவிதா அவர்கள் எழுதிய வேளச்சேரி திருக்கோயில்கள் என்னும் ஆய்வேடு தற்போது 46-ஆவது நூலாக வெளிவருகின்றது.

இந்நூல் சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை வட்டத்தில் அமைந்துள்ள வேளச்சேரி எனும் ஊரிலுள்ள தண்டீஸ்வரர் கோயிலின் கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவை பற்றியும், செல்லியம்மன் கோயிலின் கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவை பற்றியும் மற்றும் யோக நரசிம்மர் கோயிலின் கட்டடக்கலை, சிற்பக்கலை பற்றியும், அக்கோயில்களின் கல்வெட்டுகளின் மூலம் அறியப்படும். பல்லவர், பாண்டிய மற்றும் சோழர் காலகலை, அரசியல், சமூகப் பொருளாதாரச் செய்திகளையும் விரிவாக விளக்குகிறது. குறிப்பாக வரிவிதிப்பு, வரி நீக்கங்கள், இசையும் கூத்தும் இறைவழிபாட்டில் பெற்றிருந்த முக்கியத்துவம், பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள், நீர்பாசன முறைகளை தெரிவிக்கும் வாய்க்கால்கள், வணிகக்குழுக்கள், கோயிலில் நிகழ்ந்தப்பெற்ற திருவிழாக்கள் ஆகியன பற்றி இக்கோயில் கல்வெட்டுகளின் மூலம் விரிவாக அறிய முடிகின்றது.

வேளச்சேரி கோயில்கள் என்னும் இந்நூல் பதிப்பிக்கும் பணியினை மேற்கொண்ட திரு. பொ. பாஸ்கர் அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள்.

இந்நூலினை நல்ல முறையில் கணினியில் ஒளி அச்சு (D.T.P) செய்து அட்டை படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர் திருமதி. கு. கோகிலா அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

2017-2018-ஆம் ஆண்டில் தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் கீழ் நிதியுதவி நல்கி சிறப்பிக்கும் தமிழ்நாடு அரசுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூல் வரலாற்று மாணவர்களுக்கும், தொல்லியல் மாணவர்களுக்கும் தொல்லியல் ஆர்வலர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆணையர்

ஊரும் பேரும்

ஊர் அமைப்பு

சென்னை மாநகரில் அமைந்துள்ள வேளச்சேரி ஊரானது கிண்டிக்கு மேற்கிலும் திருவான்மியூருக்கு அருகிலும் அமைந்துள்ளது. தமிழ் நாட்டின் ஆளுநர் மாளிகை இராஜ்பவனுக்கு பின்புறம் வேளச்சேரி உள்ளது. சைதாப்பேட்டையிலிருந்து கிழக்கு தாம்பரம் செல்லும் நெடுஞ்சாலை வேளச்சேரி வழியாக செல்கிறது, சாலை தற்போது நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. வேளச்சேரியை சுற்றிக் கல்வி நிலையங்கள், வணிக நிறுவனங்கள், கணிப்பொறி மையங்கள், அரசு அலுவலகங்கள் போன்றவை இடம்பெற்றுள்ளன. வேளச்சேரியிலும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் அடுக்கு மாடிகளையுடைய குடியிருப்புகள் அதிக அளவில் உருவாகியுள்ளன. சென்னை பாரிமுனையிலிருந்து அடையார் வழியாக பறக்கும் மின்தொடர் வண்டி வேளச்சேரியை சென்றடைகிறது.

ஸ்ரீமத் சிதம்பர பெரிய சுவாமிகள் ஜீவ திருக்கோயில்

இவ்வாலயம் வேளச்சேரி பிதான சாலையில் காந்தி சாலை திருப்பம் அருகில் அமைந்துள்ளது. இக்கோயிலின் நுழைவுவாயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. வாயிலை கடந்தவுடன் புதிதாக கட்டப்பட்ட சன்னதிகளைக் காணலாம். சர்வேஸ்வரர் பஞ்சமுகலிங்க வடிவில் அருள் பாலிக்கிறார். அருகே யோகேஸ்வரி அம்மனும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இக்கோயிலை தவிர பிற சன்னதிகளின் தெய்வ சிலைகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

ஊரும் பேரும்

ஊர்ப் பெயர்களில் பொதுக் கூறாக அமையும் பின் ஒட்டு, ஒரே ஒரு பொதுக் கூறுபெற்றுத் தனியாகவும், ஒன்றுக்கும் மேற்பட்ட பொதுக் கூறுகள் பெற்றுத் தொகையாகவும் அமைந்துள்ளன. தனியாக அமைந்த பொதுக் கூறு தனிப்பொதுக்கூறு என்றும், ஒன்றுக்கும் மேற்பட்டுத் தொகையாக அமைந்த பொதுக்கூறு தொகைப்பொதுக்கூறு என்றும் இடப்பெயர் ஆய்வாளர்களால் சுட்டப் பெறுகின்றன.[1] இதன் அடிப்படையில் வேளச்சேரி என்பது தனிப்பொதுக்கூறு கொண்ட ஊர் பெயராகும்.

நில அமைப்பு

தன்னிடம் அமைந்த நிலங்களின் தன்மையால் நான்கு வகையான அமைப்பைக் கொண்டிருந்தது தமிழகம். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என்னும் வகையாகவும், காடும் காடு சார்ந்த இடமும் முல்லை என்னும் வகையாகவும், வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என்னும் வகையாகவும், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் என்னும் வகையாகவும் பெயர் பெற்று விளங்கியது. முல்லையும், குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை ஆனது. காலப்போக்கில் பாலை வனமும் ஒரு தனி வகையான அமைப்பாக 'பாலை' என்னும் பெயர் பெற்றது. இவ்வகையான பெயர்களை தம்முள் அடக்கி ஊர்கள் பெயர் பெற்று இருந்தமையை கல்வெட்டில் காணும் ஊர்ப் பெயர்கள் மூலம் அறியலாம்.

குறிஞ்சி நில ஊர்ப்பெயராயின் குறிச்சி, குன்றம், கோடு, பாறை, மலை போன்ற சொற்கூறுகளைக் கொண்டு முடியும் பெயர்களாக இருந்தன.

முல்லை நில ஊர்ப்பெயராயின் காடு, பட்டி, பாடி, வனம் போன்ற சொற்கூறுகளைக் கொண்டு முடியும் பெயர்களாக இருந்தன.

நெய்தல் நில ஊர்ப்பெயராயின் பட்டினம், பாக்கம் போன்ற சொற்கூறுகளைக் கொண்டு முடியும் பெயர்களாக இருந்தன.

மருதநில ஊர்ப்பெயராயின் கா, குடி, சேரி, புரம், புரி, வயல் போன்ற சொற்கூறுகளைக் கொண்டு முடியும் பெயர்களாக இருந்தன.[2]

கா ---------- திருவானைக்கா

குடி ---------- திருவேள்விக்குடி

சேரி ---------- ***வேளச்சேரி,*** *கீழைச்சேரி*

புரம் ---------- அநபாயபுரம்

புரி ---------- சிவபுரி, வடபுரி,

வயல் ---------- புல் வயல்

பாலை நில ஊர்ப்பெயர்களாயின் பெரும்பாலும் குறுப்பு போன்ற சொற்கூறு கொண்டு முடியும் பெயராக இருந்தன.

சேரி

காஞ்சிபுரம் மாவட்ட ஊர்ப்பெயர்களில் பல 'சேரி' என்னும் பொதுக் கூறுபெற்று அமைந்துள்ளன. மாவட்டத்தின் எல்லா வட்டங்களிலுமே சேரி என்று முடியும் ஊர்கள் உள்ளன.

சேரி என்பது தமிழ்ச்சொல். மக்கள் சேர்ந்து வாழும் இடங்கள் சேரிகள் என்று அழைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் நீர்நிலைகளையொட்டிய பகுதிகளிலேயே சேரிகள் அமைந்துள்ளன. சில ஊர்கள் உள் நாட்டிலும், கடற்கரை நீர் நிலைகள் இல்லாத பகுதிகளிலும் கூட அமைந்திருக்கலாம்.

செய்யுளில் சேரி

வேளச்சேரி என்னும் சொற்றொடரில் உள்ள சேரி என்ற இரண்டாம் சொல் தொல்காப்பிய பழமையானது. அகத்திணை இயலிலும், செய்யுள் இயலிலும் உள்ள நூற்பாக்களில் இடம் பெற்றுள்ளன. இச்சொல்லுக்குத் தெரு, குடியிருப்பு என்று இருவேறு பொருட்கள் தரப்பட்டுள்ளன.

"ஏமப் பேரூரச் சேரியும் சுரத்தும்

தாமே செல்லும் தாயரும் உண்டு"

என்ற நூற்பாவிற்கு விளக்கம் தருமிடத்து நச்சினார்க்கினியர் சேரியைத் தெரு என்ற பொருளில் பார்க்கிறார். இது பொருந்துவதாகத் தெரியவில்லை.

செய்யுளில் நூற்பா, "ஊரும் அயலும் சேரி யோரும்" என்று சொல்லுமிடத்து, "ஊரும்" என்ற சொல் வழி ஊரிலுள்ள தெருக்களையும் அங்கு வாழ் மக்களையும் உள்ளடங்கக் கூறியிருப்பதால் சேரி, ஊர் சார்ந்து அதன் புறத்தேயிருந்த குடியிருப்புப் பகுதியென்பதும், தெரு அல்ல என்பதும் புலனாகும். இக்கருத்துக்குப் பல சங்கப் பாடல்கள் அரணாகின்றன.

"ஊரும் சேரியும் உடனியைந்து அலரெழ" என்னும் அகநானூற்று அடி ஊரையும் சேரியையும் இரண்டு தனிப்பகுதிகளாகக் காட்டுவது எண்ணத்தக்கது.

"கல்லகத்ததுஎம் ஊரே அம்பற்சேரி அலராங் கட்டே" என்னும் ஐங்குறுநூற்று அடிகளுக்கு உரையெழுதுமிடத்து உரைவேந்தர் அவ்வை. சு. துரைசாமி, "சேரி" என்ற சொல்லுக்கு, "ஊர்க்குப் புறமாய்ச் சேர இருப்பது சேரி" என்று பொருள் கூறுகிறார். "கையதை சேரிக்கிழவன் மகளேன் யான்" என்னும் கலித்தொகை அடி இவ்விளக்கத்திற்குத் துணை நிற்கிறது.[3]

நற்றிணையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் ஏழு பாடல்களிலும் சேரி, குடியிருப்பையே பொருளாய்ச் சுட்டுகிறது.

"வாலிழை மகளிர் சேரித் தோன்றும்"

'மல்லல்அம் சேரி கல்லெனத் தோன்றி'

'தமர்தம் அறியாச் சேரியும் உடைத்தே'

என்னும் நற்றிணை அடிகளுள் இறுதிக் காட்டு சிறப்புடையதாகும். இதன் வழி, பெரிய அளவிலான குடியிருப்புகள் ஊர்ப்புறத்தே இருந்தமையும் அவை சேரியென்று அழைக்கப்பட்டமையும் மிகத் தெளிவாகத் தெரிகின்றது.[4]

பல குடிகள் சேர்ந்து வாழும் இடம் சேரி என்று பெயர் பெற்றது. பள்ளர் வாழும் சேரி 'பள்ளர் சேரி' என்றும், பறையர் வாழுமிடம் 'பறைச்சேரி'; ஆயர் வாழுமிடம் 'ஆயர்சேரி'; பிராமணர் வாழுமிடம் 'பார்ப்பனச்சேரி' என்றும் அழைக்கப்பட்டும் வந்தது. எனவே சேரி என்னும் சொல் ஒரு குலத்தோர் சேர்ந்து வாழும் இடத்தினை முற்காலத்தில் குறிப்பதாயிற்று என்ற விளக்கம் தமிழகத்தில் முன்பு சேரிகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை எடுத்துக் காட்டுகின்றது.[5]

இயற்கை பொருட்களான மரப் பெயர்களைப் பெரும்பாலான சேரிகள் முன் ஒட்டுகளாகப் பெற்றுள்ளமையினைக் காண முடிகிறது.

பனங்காட்டுச்சேரி

எருக்கஞ்சேரி

வேலச்சேரி

பூஞ்சேரி

போன்ற பல ஊர்கள் செங்கை மாவட்டமெங்கும் காணப்படுகின்றன. தோட்டம், பூ, தண்டலை போன்ற முன் ஒட்டுகளுடன் சேரிகள் அமைந்துள்ள நிலை அவை செழிப்பான, நீர் வளமுள்ள பகுதிகள் எனக் காட்டும். பனை, முருங்கை, கருவேலம், வேம்பு, எலந்தை, எருக்கம், அத்தி போன்ற மாறுபட்ட சூழ்நிலைகளில் உருவாகும் மரங்களை நோக்கும் போது, பல்வேறு புவியியல் அமைப்புள்ள பகுதிகளிலும் சேரிகள் செங்கற்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ளன.[6]

பண்டைய காலத்தில் வேளச்சேரி என்ற ஊர் வெளிச்சேரி என்று அழைக்கப்பட்டிருந்தது. வெளிச்சேரி என்ற சொல்லிலிருந்து மருவி வேளச்சேரி என்று தற்போது அழைக்கப்படுகிறது.

அடிக்குறிப்புகள்

1. ஆளவந்தார், ஆர். "கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள்", ப.9.
2. மேலது, ப.20.
3. முனைவர் கலைக்கோவன், இரா. முனைவர். நளினி, மு. "தளிச்சேரிக் கல்வெட்டு", பக்.17-18
4. மேலது, ப.18.
5. "செங்கல்பட்டு மாவட்ட ஊர்ப்பெயர்கள்", ப.99.
6. மேலது, பக்.100-101.

கோயில் அமைப்பும், இலக்கியமும்

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பே ஆலயம்
வள்ளற் பிரானுக்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே"

திருமூலர் திருமந்திரம்

இப்பாடல் கோயிலை மனித உடலுடன் ஒப்பிடுகிறது. இறைவனின் சரீரமாக கோயில்கள் உள்ளன என்பதை எடுத்துரைக்கிறது. ஈசனின் தலையாக கருவறையும், கழுத்தாக அந்தராளம் அல்லது அர்த்த மண்டபமும், தோளாக முக மண்டபமும், வயிறாக மகா மண்டபமும், கால்களாக பிரகாரமும், பாதமாக கோபுரமும் உள்ளன என்பதை ஆகமத்தின் மூலம் அறியலாம்.

ஆகமத்தின் முறையை பின்பற்றி கருவறை, கொடிமரம், பலிபீடம், நந்தி, கோபுரம் ஆகியன ஒரே நேர் கோட்டில் வரிசையாக அமைக்கப்பட்டிருக்கும்.

விஸ்வகர்மிய வாஸ்து சாஸ்திரம் என்ற நூலில் மனித உடலின் நின்ற நிலையை விமானத்துடன் ஒன்று சேர்த்துக் கூறப்பட்டுள்ளது.

விமானம்		**மனித உறுப்பு**
ஸ்தூபி / கலசம்	----	தலைமுடி
சிகரம்	----	தலை
கிரீவம்	----	கழுத்து

பிரஸ்தரம்	----	தோள்
பித்தி	----	கால்
அதிட்டானம்	----	பாதம்

இதனை எடுத்துக்காட்டும் வகையில் திருமூலரின் பாடலை கூறலாம். இப்பாடலில் மனித உடலை நடமாடும் கோயிலாகக் குறிப்பிட்டுள்ளது. இங்கு ஒப்பிடத்தக்கது.

"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்
றுடம்பினை யானிருந்த தோம்புகின்றேனே".

சர்வஞானோத்தராகமம் என்ற ஆகம நூல் ஆலயத்தின் பல்வேறு பகுதிகள் ஆத்மாவின் பல்வேறு நிலைகளை குறிப்பதாக உள்ளது.

கோபுரம்	-----	பூதாத்மா
பலிபீடம்	------	அந்தராத்மா
துவஜஸ்தம்பம் (கொடிமரம்)	------	தத்வாத்மா
லிங்கம்	------	ஜீவாத்மா
குரு	-----	மந்தராத்மா
விமானத்தில் உள்ள பிரம்மராந்திரம்	-----	பரமாத்மா

என்ற ஆத்மாக்கள் ஆலயத்தின் பகுதிகளோடு இணைந்து கூறப்பட்டுள்ளது. 'லய' என்ற சொல் மறைந்திருத்தலை குறிக்கும். (ஆ+லயம்) இதில் இருந்துதான் ஆலயம், லிங்கம் போன்ற சொற்கள் உருவாயின. ஏனெனில் லிங்கம் தன்னுள் பல பொருளை மறைத்து வைத்திருக்கின்றது. ஆலயம் என்பது இறைவனுடன் ஆன்மா

ஒன்றியிருப்பதாகும். மூலமூர்த்தியாக லிங்கமே சிவாலயங்களில் இருக்கின்றது. ஈசன் லிங்கமாக ஆலயத்தின் பல பகுதிகளில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

கருவறையிலுள்ள மூலலிங்கம்	-----	சூக்ஷமலிங்கம்
ஆன்மாவைக் கரைசேர்க்கும் விமானம்	-----	ஸ்தூலலிங்கம்
பலிபீடம்	-----	பத்ரலிங்கம்
துவஜஸ்தம்பம் (கொடிமரம்)	-----	காரணலிங்கம்

இவ்வாறு ஆலய அமைப்பை நோக்கும்போது பல அரிய தத்துவங்கள் புலப்படுகின்றன. இந்த நெறிமுறைகளுக்கு உட்பட்டு தண்டீஸ்வரர் திருக்கோயில், செல்லியம்மன் திருக்கோயில் மற்றும் யோக நரசிம்மர் திருக்கோயில் அமைப்பை அறியலாம்.

தண்டீஸ்வரர் திருக்கோயில் அமைப்பு

தண்டீஸ்வரர் கோயில் சுமார் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பை கொண்டுள்ளது. இக்கோயிலில் மதில்கள், கோபுரங்கள், இரண்டு பிரகாரங்கள் ஆகியவற்றுடன் தோற்றமளிக்கிறது. மேற்கு, கிழக்கு ஆகிய இரு திசைகளிலும் சிறிய கோபுரங்களுடன் கூடிய வாயில்கள் உள்ள போதிலும் அவை மூடப்பட்டுள்ளன. தெற்கு வாயிலே பிரதான வாயிலாக விளங்குகிறது.

கிழக்கு வாயிலுக்கு முன்னர் நந்தி, கொடிமரம், பலிபீடம் ஆகிய மூன்றும் ஒரே வரிசையில் அமைந்துள்ளன. கிழக்கு வாயில் மகாமண்டபத்திற்கு வெளியே சிறு சன்னதிகளில் விநாயகரும், முருகப் பெருமானும் இடம் பெற்றுள்ளனர். மூலவர் சன்னதி கிழக்கு நோக்கியவாறும், அம்மன் சன்னதி தெற்கு நோக்கியவாறும் அமைந்துள்ளன. அர்த்த மண்டபத்துடன் கூடிய கருவறையில் மூலவரான தண்டீஸ்வரர் லிங்க வடிவில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்.

அர்த்த மண்டப நுழைவாயிலின் இரு புறங்களிலும் இரண்டு துவாரபாலகர் சிற்பங்கள் காணப்படுகின்றன. ஒரு புறத்தில் விநாயகரும், மறுபுறத்தில் சுப்பரமணியர், வள்ளி, தெய்வானை ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இவ்வாறு ஒரே இடத்தில் சிவபெருமான், உமை, விநாயகர், சுப்பிரமணியர் ஆகிய அனைவரும் காட்சியளிப்பது இக்கோயிலுக்கு உரிய சிறப்பாகும். இக்காட்சியினை குடும்ப சமேதர காட்சி என்றழைப்பர்.

கருவறை, அர்த்த மண்டபம் ஆகியவற்றின் புறச் சுவர்களில் தேவ கோட்டச் சிற்பங்கள் உள்ளன. அவை அர்த்த மண்டப தென்புறச் சுவரில் நடன விநாயகர், கருவறையின் தென்புறச் சுவரில் தென்முகக் கடவுளான தட்சணாமூர்த்தி, கருவறையின் மேற்கு புறத்திலுள்ள தேவ கோட்டத்தில் அண்ணாமலையாரான லிங்கோத்பவரும், கருவறையின் வடப்புற தேவகோட்டத்தில் பிரம்மாவும், அர்த்த மண்டப வடபுற தேவகோட்டத்தில் துர்கை ஆகிய தெய்வங்களின் சிற்பங்கள் உள்ளன.

உட்திருச்சுற்று

உட்திருச்சுற்றின் மேற்கு பகுதியில் சோமாஸ்கந்தர், சந்திரசேகரர் மூர்த்தி படிமங்கள், லட்சுமி, சரஸ்வதியின் சிற்பங்களும், வடபகுதியில் மூன்று சன்னதிகளில் வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியர், விநாயகர், சண்டேஸ்வரர் திருமேனியும், சம்பந்தர் படிமமும் காணப்படுகின்றன. இதனையடுத்து திருவனந்தல் பள்ளியறையில் அம்மன் திருவுருவம் உள்ளது. காலியாக உள்ள சன்னதியை அடுத்துள்ள அம்பலவாணர் சபையில் நடராஜர், சிவகாமி, திருமேனியும் மாணிக்கவாசகர் ஆகிய செப்புப் படிமங்கள் இடம் பெற்றுள்ளன.

துர்கைக்கு அருகே சிறு சன்னதியில் சண்டேஸ்வரர் தெற்கு திசையை நோக்கியுள்ளார். நடராஜர் சன்னதிக்கு அடுத்து வெளியே

சுவர் ஓரமாக பைரவர், திருச்சுற்றின் கிழக்கு பகுதியின் மாடத்தில் திருமாலின் திருவுருவம், மற்றொரு மாடத்தில் சூரியன் ஆகியோர் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திருச்சுற்றின் தென்பகுதியிலுள்ள மாடத்தில் சுப்பிரமணியரின் சிறிய சிற்பம் இடம் பெற்றுள்ளது. அம்மன் சன்னதிக்கு எதிராக உள்ள வாயிலின் இருபுறங்களிலும் விநாயகர், பாலசுப்பிரமணியரின் சிற்பங்கள் உள்ளன.

அம்மன் சன்னதிக்கு எதிரே உள்ள நுழைவாயிலிலிருந்து சிறிது தொலைவில் அலங்கார மண்டபமும், அதனுள்ளே வேத விநாயகர் சிற்மும் உள்ளது. வெளிப்பிரகாரத்தின் மேற்கு பகுதியில் இராஜகோபுரத்தை அடுத்து நாயன்மார்களின் சிற்பத் தொகுதி காணப்படுகிறது. இத்தொகுதியின் தொடக்கத்தில் விநாயகரும் இறுதியில் சேக்கிழாரும் சிற்பங்களாக உள்ளனர். இடையே அறுபத்து மூன்று நாயன்மார்களும் ஒன்பது தொகையடியார்களும் சிற்பங்களாக இடம்பெற்றுள்ளனர். இத்திருச்சுற்றின் வடக்கு பகுதியின் துவக்கத்தில் ஒரு லிங்கமும், அதன் இருபுறங்களிலும் விநாயகரும் சுப்பிரமணியரும் சிற்பங்களாக இடம்பெற்றுள்ளனர். இவர்களை அடுத்து வைத்தீஸ்வரர் எனும் லிங்கம் வில்வ மரத்தடியில் க்காணப்படுகிறது. இவ்வடபகுதியின் மூலையில் உள்ள சிறு சன்னதியில் சொக்கநாதரும் (லிங்கம்), மீனாட்சி அம்மனும், தென்கிழக்கு மூலையில் நவகிரகங்கள், நாகேஸ்வரரின் சன்னதி ஆகியவை காணப்படுகின்றன. கிழக்கு கோபுரத்திற்கு அருகே மடப்பள்ளியும், யாகசாலையும் இடம் பெற்றுள்ளன. வெளித்திருச்சுற்றை சுற்றி வருவதற்காக மூடிய சுற்றுப்பாதையை எழிலாக அமைந்துள்ளனர். இத்தலத்திற்குரிய புனித மரமாக ‘வில்வமரம்’ விளங்குகிறது.

குளம்

ஆலயத்திற்கு பின் புறத்தில் திருக்குளம் ஒன்று அமைந்துள்ளது. இதுவே தண்டீஸ்வரர் கோயிலின் அமைப்பாகும்.

செல்லியம்மன் கோயில் அமைப்பு

செல்லியம்மன் கோயில் வடக்கு நோக்கி கருவறை, அர்த்த மண்டபம், முன் மண்டபம், மகா மண்டபம், திருச்சுற்று என்ற அமைப்பில் உள்ளது. கருவறையில் வீரபத்திரரை அடுத்து பிராமி, மாகேஸ்வரி, வைஷ்ணவி, கௌமாரி, இந்திராணி, வாராகி, சாமுண்டா ஆகிய சப்தமாதர்களும் இறுதியில் விநாயகர் உருவமும் வழிபாட்டில் உள்ளன. சப்த மாதர்களில் சாமுண்டியின் வடிவத்தை செல்லியம்மனாக வழிப்பட்டு வருகின்றன. வாயிலை காத்து நிற்கும் துவாரசக்தி (துவாரபாலகியின்) உருவங்ககள் உள்ளன. மகா மண்டபத்தின் நுழைவாயிலின் இருபுறமும் விநாயகர், சுப்பிரமணியர் சன்னதிகள் உள்ளன.

கருவறையின் தெற்கு வெளிப்புறச் சுவரில் தட்சிணாமூர்த்தி சிற்பம் உள்ளது. திருச்சுற்றின் வடக்கு மூலையில் நவகிரகங்களின் சன்னதி, மேற்கில் ஆத்மலிங்கம், கன்னி சன்னதி, நாகேஸ்வரன் சன்னதி, வடக்கில் சூலம், பலிபீடம் ஆகியவை உள்ளன. மகாமண்டபத்திலும் ஒரு சூலம் உள்ளது. செல்லியம்மன் கோயில் கருவறை மேல் விமானமும், கோயில் வாயிலை கோபுரமும் அலங்கரிக்கின்றன. இதுவே செல்லியம்மன் கோயலின் அமைப்பாகும்.

யோக நரசிம்மர் கோயில் அமைப்பு

இக்கோயிலில் மூலவரான யோக நரசிம்மர் மேற்கு நோக்கியுள்ளார். கருவறை, அர்த்த மண்டபம், திருச்சுற்று என்ற அமைப்பில் இக்கோயில் உள்ளது. கருவறையில் யோக நரசிம்மரும், கருவறையின் நுழைவாயிலில் வடக்குபுறம் ஸ்ரீ ஆண்டாள் சன்னதியும், தெற்குபுறம் ஸ்ரீவேத நாராயணர் சன்னதியும் உள்ளன. கருவறைக்கு எதிராக திருச்சுற்றில் ஸ்ரீ பிரகலாத ஆழ்வார் சன்னதியும், வடக்கில் ராமர் சன்னதியும், தென்மேற்கு மூலையில் ஸ்ரீ அமிர்த பவள வள்ளி தாயார் சன்னதியும் உள்ளன. கொடிமரம், பலிபீடம், பிரகலாதர் சன்னதி, கருவறை இவை நான்கும் ஒரே நேர்கோட்டில் உள்ளன. இதுவே யோக நரசிம்மர் கோயில் அமைப்பாகும்.

வடகிழக்கில் சிவன் கோயில், மேற்கில் பெருமாள் கோயில் மற்றும் வடக்கே பிடாரி கோயில் ஆகிய கோயில்கள் உள்ளன. வேளச்சேரியில் உள்ள தண்டீஸ்வரர் கோயில், யோக நரசிம்மர் கோயில் மற்றும் செல்லியம்மன் கோயில் ஆகியவை மிகவும் பழமை வாய்ந்த கோயில்களாக உள்ளன. எனவே முறையான திசையில் அமைந்த கோயிலையும், கோயில் அமைப்பினையும் வைத்து இவ்வூர் மிகவும் பழமை வாய்ந்த ஊராக கருதப்படுகிறது. எனவே இவ்வூர் மிகவும் பழமை வாய்ந்த ஊராகும்.

தல வரலாறு

தண்டீஸ்வரர் கோயில் தலவரலாறு

தண்டீஸ்வரர் கோயில் பற்றிய தலவரலாறு எழுதப்படவில்லை. திருவான்மியூர் தலபுராணத்தில் வேளச்சேரி தண்டீஸ்வரர் கோயிலுடன் தொடர்புடைய இரண்டு சம்பவங்கள் செவிவழிச்செய்திகளாகச் சில மாறுதல்களுடன் இத்தலத்தில் கூறப்படுகின்றன.

நான்கு யுகங்கள்

இறைவன் உலகைப் படைத்தபோது நான்கு யுகங்கள் எனும் கால அளவைகளை நிர்ணயம் செய்தான். அவை 1. க்ருதாயுகம், 2. திரேதாயுகம், 3. துவாபரயுகம், 4. கலியுகம்.

க்ருதாயுகம்

இந்த யுகம் தேவ யுகம். இதில் முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெட்டாயிரம் ரிஷிகளும் சேர்ந்து வாசம் செய்தார்கள்.

திரேதாயுகம்

இந்த யுகத்தில் தேவர்களும், அசுரர்களும் வாசம் செய்த காலமாகும். இக்காலகட்டத்தில் இறைவனை தரிசிக்கும் போது தேவர்களுக்கும், அசுவர்களுக்கும், சர்ச்சைகளும், போட்டிகளும் ஏற்பட்டன. அசுரர்களின் அட்டகாசம் மேலோங்கியது. இதனால் தேவர்கள் இறைவனை அணுகி எங்களுக்கு தனியாக தரிசனம் தந்தருளுமாறு வேண்டி முறையிட்டனர். தேவர்களின் வேண்டுதலுக்கிணங்க அவர்களுக்கு தனி தரிசனம் தருவதாக வாக்களித்து, நான் இந்த யுகத்தில் மலைகள், காடுகள், சமுத்திரம் மற்றும் ஆறுகளின் கரையோரங்களில் சுயம்புவாகத் தோன்றி காட்சியளிப்பேன். அங்கு வந்து என்னை தரிசிக்கலாம் என்று கூறி அருளினார். தேவர்கள் அனைவரும் இறைவனை நோக்கி சுவாமி, பூலோகத்தில் பூப்பரிசம் எங்களுக்கு கிடையாதே? என வினவினார்கள். அதற்கு இறைவன், நான் சுயம்புவாக காட்சியளிக்கும் இடங்கள் அனைத்தும் பூக்கைலாயமாகும். அங்கு அசுரர்கள் தவிர, தேவர்களுக்கும் மற்றவர்களுக்கும் எனது திவ்ய தரிசனம் கிடைக்கும் என்று அருளாசி வழங்கினார்.

திரேதாயுகத்தில் சோமுகாசூரன் என்ற அசுரன் தனது தவவலிமையால் பூலோகம் மற்றும் தேவலோகத்தையும் வென்று பிரம்மலோகம் சென்றான். பிரம்மலோகத்தில் பிரம்மா மற்றும் நான்கு வேதங்கள் மட்டுமே வாசம் செய்தனர். சோமுகாசுரன் வருவதை அறிந்த பிரம்மதேவன் வேதங்களை புத்தக வடிவமாக மாற்றிவிட்டு தான் மட்டும் மறைந்திருந்து கவனித்தார். பிரம்மலோகத்தில் யாரும்

இல்லாததை கண்ட சோமுகாசூரன் கோபமுற்று நான்கு வேத புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு சமுத்திரத்தில் தனக்கென்று ஒரு இருப்பிடத்தை அமைத்துக் கொண்டான். இதனைக் கண்ணுற்ற பிரம்மா, கைலாயம் சென்று இறைவனிடம் நடந்தவற்றை கூறி முறையிட்டார். வேதங்களை மீட்டு வரும் பணியை மகாவிஷ்ணுவிடம் இறைவன் (சிவன்) ஒப்படைத்தார். மகாவிஷ்ணு மச்ச அவதாரம் எடுத்து சோமுகாசுரனை வதம் செய்து வேதங்களை மீட்டு பிரம்மலோகத்தில் பிரம்மாவிடம் ஒப்படைத்தார். பிரம்மா புத்தக வடிவமாக இருந்த வேதங்களை பழைய நிலைக்கு மாற்றினார்.

அசுரனின் கையில் சிலகாலம் சிக்கியிருந்ததாலும் சேற்றில் புதைக்கப்பட்டிருந்ததாலும் மாசுபட்டுவிட்டதாக வேதங்கள் உணர்ந்தன. தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்வதற்குச் சிவ வழிபாடே சிறந்தது எனவும், தென்திசையில் கீழைக்கடலோரத்தில் அமைந்துள்ள திருவான்மியூரே ஈசனைத் துதிப்பதற்கு ஏற்ற இடம் என நான்முகன் வழிகாட்டினார். வேதங்கள் நான்கும் மனித வடிவம் பூண்டு திருவான்மியூர் நோக்கி சென்றன. திருவான்மியூருக்கு அருகே சோலைகள் நீர் நிலைகள் ஆகியன நிரம்பியிருந்ததால் அமைதியாக விளங்கிய ஒரு இடத்தில் தவக்குடில் ஒன்றை நிறுவி அங்கு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தனர். நாள்தோறும் தாங்கள் நிறுவிய லிங்கத்தை வழிபட்டனர். தினமும் திருவான்மியூருக்குச் சென்று அங்கு எழுந்தருளியுள்ள சுயம்பு லிங்கத்தை முறைப்படி பூசித்தனர். வேதங்கள் புரிந்த வழிபாடு முழுமையாக நிறைவுற்றவுடன் சிவபெருமான் நேரில் காட்சியளித்து அவர்கள் விரும்பும் வரத்தைக் கொடுப்பதாக உறுதியளித்தார்.

“பெருமானே எங்களைச சூழ்ந்துள்ள மாசும் அசுர தோஷமும் நீங்க வேண்டும். நாங்கள் பூசை நிகழ்த்திய இத்தலம் (திருவான்மியூர்) வேதபுரி எனவும் பெயர் பெறவேண்டும்,

நாங்கள் தங்கி தவநெறியில் நாட்டம் செலுத்திய இடம் வேத சிரேணி எனப்பெயர் பெறவேண்டும். உன்னை இவ்விரு தலங்களிலும் வழிபடுவோர் குறைநீங்கி மன நிறைவு பெற வேண்டும்”, எனவும் வேதங்கள் வேண்டிக்கொண்டன. ஈசனும் அவர்களது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார். வேதங்கள் தங்கி தவமியற்றிய இடம் வேத சிரேணி என்றும் வேளச்சேரி என்றும் அழைக்கப்படுகிறது.

துவாபரயுகம்

இந்த யுகத்தில் மிருகண்டு என்னும் தவசிரேஸ்டர் தனக்கு பிள்ளைப்பேறு வேண்டுமென்று ஈஸ்வரனை குறித்து தவம் செய்தார். இவரது தவத்தின் மேன்மையைக் கண்டு அவருக்கு காட்சியளித்து “நீண்ட ஆயுள் உடைய அறிவிலி, அற்ப 16 வயது ஆயுளுடைமை குணவான் ஆகிய இருவரில் எவரை மகனாக பெற விரும்புகிறீர்கள்?” என ஈசன் கேட்டார். மிருகண்டு முனிவர் புத்தி கூர்மையுடைய மகனை விரும்ப இறைவனும் அவ்வாறே ஆசிபுரிந்தார். மிருகண்டு முனிவர் அவருடைய மகனுக்கு மார்கண்டேயன் என்று நாமம் சூட்டினார். மார்கண்டேயனுக்கு 16 வயது நெருங்கும் சமயத்தில் பெற்றோர் மிகக் கவலை அடைந்தனர். இதை கண்டு நிலைமையறிந்த மார்கண்டேயன் காலனால் உண்டாகும் அச்சத்தை நீக்கும் மார்கத்தை நான் அறிவேன். எனக்கு நல்லாசிகள் கூறி வழியனுப்புங்கள் என மார்கண்டேயன் கூறினான். பெற்றோரிடம் விடைபெற்றுக் கொண்டு தென்திசையிலுள்ள திருக்கடவூர் திருத்தலத்திற்குச் சென்றான்.

திருக்கடவூரில் எழுந்தருளியுள்ள அமிர்தகடேஸ்வரர் எனும் சிவதிருமேனியைப் புனித நீரால் சுத்தம் செய்து பலவகையான வாசனை மலர்களால் பூஜித்தான். இவ்வாறு மனதாரப் பூசித்து

வருகையில் மார்கண்டேயரின் ஆயுள் முடியும் நேரம் வந்தது. சிவபக்தியில் திகைத்த பக்தரின் கண்களுக்கு யமதேவனின் உருவம் புலப்பட்டது. சிவபெருமானே கதியென சிவலிங்கத்தை இறுகத் தழுவினார். இருப்பினும் சிவலிங்கத்தை தழுவிய மார்கண்டேயனின் உயிரை கவர முயன்ற போது சிவ லிங்கத்தையும் சேர்த்து பாசக்கயிற்றால் பிணைத்து இழுக்க முற்பட்டது அடாத செயலாகும். உடனே சிவன் லிங்கத்திலிருந்து தோன்றி யமனை உதைத்து தள்ளி யமனின் தண்டத்தை பரித்துக் கொண்டார். யமன் செயலற்றவனாகி விட்டான். சிவன் மார்கண்டேயனுக்கு என்றும் சிரஞ்சீவியாக வாழக்கடவாய் என்று அருள்பாளித்தார்.

தண்டத்தை இழந்த யமன் திக்பிரமை அடைந்து இதற்கு பிராயசித்தமாக கைலாயம் சென்று ஈசனை தியானித்து இறையருள் பெற்று பாவ விமோச்சனம் பெற வேண்டி புறப்பட்டான். வழியில் நாரதரைச் சந்தித்து நடைபெற்ற சம்பவத்தைக் கூறினார். கயிலைக்கு நேராக செல்வதைவிட பூவுலகில் வேதங்கள் பூசித்தருள் பெற்ற வேதசிரேணியில் எழுந்தருளியுள்ள சிவனின் லிங்கத்தை பூசிப்பதே ஏற்றது என நாரதர் அருளினார். யமதர்மனும் ***வேதசிரேணி*** சென்று ஒரு திருமேனியை அபிஷேக ஆராதனைகளுடன் முறைப்படி வழிபட்டான். யமனின் பூசையை ஏற்ற ஈசன் நேரில் காட்சியளித்தார். யமனிடமிருந்து பறித்த தண்டத்தை மீண்டும் வழங்கினார். தனக்கு தரிசனம் அளித்து தண்டத்தை மீண்டும் வழங்கிய ஈசனுக்கு தண்டீஸ்வரர் எனப் பெயர் வழங்கப்பட வேண்டும் எனவும் யமன் வரம் வேண்டிப் பெற்றான். இதுவே தண்டீஸ்வரர் கோயிலின் தல வரலாறு.

திருவான்மியூர் தலபுராணத்தில் இச்சம்பவம் சிறிது மாறுதல்களுடன் கூறப்பட்டுள்ளது. சிவபெருமான் யமனை உதைத்து தள்ளினார். தண்டத்தை கவர்ந்ததாகக் கூறப்படவில்லை.

சிவபக்தனின் உயிரை பறிக்க முயன்ற பாவத்துடன் கைலாயம் நோக்கி சென்றபோது வழியில் நாரதரை சந்தித்து சிவபெருமானின் உண்மையான பக்தனின் உயிரை ஈசனின் விருப்பத்திற்கு மாறாகக் கவர முயன்று தண்டனை பெற்றதாக நாரதரிடம் யமன் உரைத்தான். தான் செய்த தவறுக்குக் கழுவாய் செய்யக் கயிலை செல்ல விரும்பினான். சிவபக்தனுக்கு தீங்கு செய்ய முயன்றதால் ஏற்பட்ட பழியைப் போக்கக் கயிலை செல்வதற்குப் பதில் பூவுலகில் சிவவழிபாடு செய்வதே ஏற்றது என நாரதர் கூறினார்.

கீழைக் கடற்கரையருகே அமைந்துள்ள வேத சிரேணியை அடைந்தான். அங்கே தனது தண்டத்தையே நிலத்தில் ஊன்றினான். தண்டத்தையே லிங்கமாகப் பாவித்து முறைப்படி பூஜைகள் நடத்தினான். இரவில் திருவான்மியூருக்கு சென்று வான்மீகர் பூசித்த லிங்கத்தைத் தொழுது யமன் பூசித்தான். யமனின் பூசைக்கு சிவன் அருள் பாவித்து லிங்கத்திலிருந்து வெளிவந்து யமனது கோரிக்கையை கேட்டார். இறைவா! உன் திருவடிகளை முழுமனதுடன் தஞ்சமடைந்தவர்களுக்கு என்னால் எந்த ஆபத்தும் நேராது என அறிந்தேன். மார்கண்டேயரால் அடைந்த படிப்பினையே என்றென்றும் மறக்க மாட்டேன். என்னை அடைந்த பழியும் பாவமும் நீங்க வேண்டும். வேதசிரேணியில் நான் நிறுவிப் பூஜித்த லிங்கத்திற்கு (தண்டம்) *தண்டபாணி* என்ற பெயர் வழங்கப்பட வேண்டும். தங்களை மெய்யன்புடன் வழிபடும் அடியார்களுக்கு மறந்தகாசம், வயிற்று உளைவு, மேகம், குட்டம், வாதம், காமாலை போன்ற நோய்களால் பாதிப்பு ஏற்படாமல் காக்க வேண்டும் என்று யமன் வேண்டினான். திருவான்மியூர் ஈசனும் இவ்வரங்களை அளித்து மறைந்தார்.

யமனும் வேதசிரேணி சென்று மணிகளால் அணி செய்யப்படும் தூண்கள், மணியொலிக்கும் மண்டபங்கள், வானுயர் கோபுரங்கள் போன்றவற்றால் அணி செய்யும் கோயிலை

அமைத்தான். வானுலகத்தில் உள்ள தேவர்கள், முனிவர்கள், மன்னர்கள் பலரையும் கோயிலுக்கு அழைத்தான். நல்ல நாளில் இடபக் கொடியை ஏற்றிப் பெருவிழாவை நடத்தினான். ஏழாம் நாளன்று தேரோட்டம் விமர்சையாக நடைபெற்றது. தீர்த்தவாரி முடிந்தபின் கொடியை இறக்கி விழாவை முடிவுறச் செய்தான்.

விழா முடிந்தவுடன் மயன் அருட்குறியான சிவலிங்கத்தின் முன்நின்று கண்களில் அருவிபோல நீர் சொரிய துதித்தான்.

"நெடிய மாலயன் போகிக்காதலியர் மங்கல நூனிலைக் கவன்று
மடியலை பாற்சலதியினிலெழு காலந்தனை மிடற்று வைத்தாய் போற்றி
யடியவர் செயலாப மதையிலாபமதாகக் கொண்டரு ளுமமல போற்றி
படிவேத சிரேணியினிலென் பொருட்டா லெழுந்தருளும் பரமபோற்றி",

(திருவான்மியூர் தலபுராணம்)

கலியுகம்

இந்த யுகத்தில் ஔவை போன்றவர்கள் தோன்றி அறம், நீதி மற்றும் பக்தி மார்க்கத்தை வளர்த்தார்கள். 16-ஆம் நூற்றாண்டின் சிறந்த சிவபக்தரான அப்பைய தீக்ஷிதர் அவர்கள் ஆரணிக்கு அடுத்த அடையபலம் என்ற ஊரில் பிறந்தார். இவர் சிவத்தலங்களுக்கு சென்று சிவதரிசனம் பெற்று வந்தார். அவ்வாறு தரிசனம் பெற வேண்டி வேதசிரேணி வந்து சிவனை வழிபட்டார். அப்பைய தீக்ஷிதர் இத்தலத்தில் மாபெரும் வேள்வியை நடத்தினார். யாகத்தின் போது புனித சடங்குகளுக்காகப் புண்ணிய தீர்த்தம் ஒன்றை உருவாக்கினார். இதுவே "அப்பைய தீர்த்தம்" (தற்போது அப்ளாங்குளம்) என பெயர் பெற்றுள்ளது. தீக்ஷிதர் இத்தலத்தில் அம்மனின் சன்னதியில் ஸ்ரீ சக்கரம் ஒன்றை உருவாக்கினார். இச்சக்கரம் அம்மன் உருவத்திற்கு அருகே காணலாம். இத்தலத்தில் அப்பைய தீக்ஷிதருக்கு

அம்பிகையின் கருணைக் கடாட்சம் கிடைத்தமையால் அம்பிகைக்கு ***"கருணாம்பிகை"*** என்ற பெயர் பெற்றது. ஆகவே இவ்வாலயம் ***"ஸ்ரீ கருணாம்பிகை சமேத தண்டீஸ்வரர் ஆலயம்"*** என வழங்கி வருகிறது. இதுவே தண்டீஸ்வரர் கோயிலின் தல வரலாறாகும்.

செல்லியம்மன் கோயில் தல வரலாறு

அசுரன் ஒருவனை அழிக்கச்சென்ற சப்த கன்னியர், தவறுதலாக ஒரு மகரிஷியை அழித்து விட்டனர். தங்களை அழிக்க ஏழு கன்னிகள் புறப்பட்டிருக்கும் செய்தியை அந்த அசுரனும் அறிந்து கொண்டான்.

முனிவரை கொன்ற தோஷம் ஒருபுறம், அசுரனின் மிரட்டல் மறு புறமுமாக இருந்த வேளையில் சிவபெருமான் அவர்களைக் காக்க தனது அம்சமான வீரபத்திரரை அனுப்பி வைத்தார். வீரபத்திரர் கன்னியரை காத்ததோடு அசுரனையும் அழித்தார். அதன் அடிப்படையில் இத்தலத்தில் சப்த கன்னியர் அருகில் வீரபத்தரர் காவல் தெய்வமாக இருக்கிறார். இதுவே செல்லியம்மன் கோயிலின் தலவரலாறாகும்.

இலக்கியங்கள்

'புராதனம்' என்ற சொல்லிலிருந்து '*புராணம்*' என்ற சொல் தோன்றியது. இறைவனின் செயல்களை மட்டும் விளக்கும் புராணங்கள், இறைவனின் அருட்செயல்களை ஒரு தலத்துடன் இணைத்து அத்தலத்தின் சிறப்புக்களை எடுத்துக்கூறும் புராணங்கள், சான்றோர்களின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் புராணங்கள் என மூன்று வகையாகப் பாகுபாடு செய்துள்ளனர்.

இறைவனும் இறைவியும் ஒரு தலத்தில் தவம் புரியும் தேவர்கள், முனிவர்கள், விலங்கினங்கள், மானுடர்கள் போன்றோர்

முன் காட்சியளித்து அவர்களது விருப்பங்களை ஈடேற்றிவிட்டு அங்கு நிரந்தரமாக எழுந்தருள்வதைச் சிறப்பிப்பதே இத்தலபுராணங்களின் நோக்கமாகும். இத்தகைய புராணத்தை இலக்கியத்தோடு அளிப்பது தமிழர்களின் சிறந்த கலையாகும்.

திருவான்மியூர் தலபுராணம் ஆசிரியர்

திருவான்மியூர் தலபுராணத்தின் ஆசிரியர் அஷ்டாவதானம் பூவை கலியாண சுந்தர முதலியாராவார். இவர் யதீந்திரர் (யதி–முனிவர், இந்திரன் - தலைவன்) என்ற பெயரையும் ஏற்றார். சான்றோர்கள் நிறைந்த அவையில் எட்டுவிதமான வெவ்வேறு செயல்களை ஒரே நேரத்தில் நடத்தி 'அஷ்டாவதானம்' என்ற பட்டத்தைப் பெற்றார். சித்தாந்தத்தில் தேர்ச்சி பெற்று 'சித்தாந்த சரபம்' என்ற பெயரை ஏற்றார்.

அஷ்டாவதானம் பூவை கலியாண சுந்தரர் இயற்றிய திருவான்மியூர் தலபுராணம் 19 படலங்களும், 1022 விருத்தங்களும் உடையது. 1895–ஆம் ஆண்டில் (மன்மத ஆண்டு, வைகாசி மாதம்) சென்னை இந்து யூனியன் அச்சுக்கூடத்தில் இந்நூல் அச்சிடப்பட்டது. இந்நூலிலுள்ள வேதம் பூசை புரிபடலம், யமன் பழிதீர் படலம் ஆகிய பகுதிகளில் வேளச்சேரியின் தலபுராணம் பற்றிய செய்திகள் உள்ளன.

வேளச்சேரி பெரிய சுவாமிகள் எனும் சிதம்பர சுவாமிகள்

சிதம்பர சுவாமிகள் வேளச்சேரி தண்டீஸ்வரர் கோயில் பல திருப்பணிகளை நடத்தியுள்ளார். பழுதுபட்டு இருந்த ஆலயத்தைப் புதுப்பித்து அக்கோயிலில் நாள்தோறும் வழிபாடுகளை முறைப்படி நடக்க ஏற்பாடு செய்தார். இவ்வாலயத்தில் பிரம்மோற்சவம் நடக்க வழிசெய்தார். கோயிலில் விழாக் காலங்களில் பயன்படுத்துவதற்காகத் தேர் ஒன்றை உருவாக்கினார். இவர் தண்டீஸ்வரர் கோயில்

திருப்பணிகளில் பங்கு பெற்ற பணியாளர்களுக்கு, சுவாமிகள் திருநீற்றையே கூலியாக அளிப்பாராம். அதுவே அவரவர்களின் உழைப்புக்கு ஏற்ப பணமாக மாறும். சுவாமிகள் தண்டீஸ்வரர் கோயிலில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது ஒரு பெரிய பாம்பு படமெடுத்தவாறு வெயில் சுவாமிகள் மீது படாதவாறு தடுத்து வந்தது. இக்கோயிலில் திருப்பணிகளை நிறைவேற்றியபின் வேறு கோயிலுக்குச் செல்ல எண்ணியபோது கோபுரவாயில் முன்பு பாம்பு படமெடுத்து நின்றவாறு அவரைத் தடுத்தது. தான் இக்கோயிலைவிட்டுச் செல்வதை இறைவன் விரும்பவில்லை என உணர்ந்த சுவாமிகள் தனது இறுதிக் காலத்தை இத்தலத்திலேயே கழித்தார். காளயுக்தி ஆண்டு கார்த்திகை மாதம் பதினாறாம் தேதி அமரபக்ஷம், சதுர்தசி விசாக நட்சத்திரம், சனிக்கிழமையன்று (டிசம்பர் 1858) சுவாமிகள் ஜீவசமாதி அடைந்தார்.

சிதம்பர சுவாமிகள் பல பாடல்களை இயற்றியுள்ளார். அவர் இயற்றிய தண்டபாணியார் பதிகம், உபதேச உண்மை, உபதேச உண்மை கட்டளை, பூங்குயிற் கண்ணி, ஆனந்தக் களிப்பு தோத்திரமாலை, எந்நாட்கண்ணி என்னையோ என்கண்ணி ஆகிய பாடல் திரட்டுக்களைத் தொகுத்து உபதேச உண்மை என்ற நூலாக வெளியிட்டுள்ளனர்.

கவின்மிகு கலைகள்

தமிழக கோயில்கள், கட்டடக் கலை நுணுக்கங்களில் தனிச் சிறப்பு வாய்ந்தவையாகும். சோழர் காலத்தில் கோயிற் கட்டடக்கலை உன்னத வளர்ச்சி அடைந்தது எனலாம். சோழர் ஆட்சி ஏறத்தாழ நான்கு நூற்றாண்டு காலம் நடைபெற்றது (கி.பி. 850-1250). இந்த நீண்ட காலத்தில் தமிழ்நாடு முழுவதும் சிறியதும் பெரியதுமாகக் கற்கோயில்கள் கட்டப்பெற்று, குமிழ்கள் போல அவை தமிழ் நாட்டின் நிலப்பரப்பை அலங்கரித்தன. அடித்தளம் முதல் உச்சிப் பகுதி வரை (உபானம் - ஸ்தூபி) கோயில் முழுவதும் கல்லாலேயே கட்டப்படும் கோயிலுக்கு ‘கற்றளி’ என்று பெயர். கற்றளிகளை கட்டுவதே பெருமைக்குரியதாகக் கருதப்பட்டது. சோழருடைய கட்டடக்கலைப் பாணியைப் பின்பற்றி தமிழ்நாட்டிற்கு அப்பாலும் பல கோயில்கள் கட்டப்பட்டன.

பல்லவர் சோழர் பாணிகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பல சிறு கோயில்களும் நடுத்தரக் கோயில்களுமாகக் கட்டப்பட்டன. இவற்றில் வெவ்வேறு அளவுகளில், பல்லவ சோழர் காலக் கட்டடக்கலை முறைகள் கையாளப் பெற்றிருக்கின்றன. இம்முறையிலேயே வேளச்சேரியில் உள்ள தண்டீஸ்வரர் கோயில் முந்தைய சோழர் கால கட்டடக்கலையில் அமைந்துள்ளது. அவற்றை இனி ஆய்வு செய்வோம்.

தண்டீஸ்வரர் கோயில் கட்டடக்கலை

கருவறை

சதுர வடிவிலான கருவறை கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இதில் மூலவர் தண்டீஸ்வரர் லிங்க வடிவில் அமைந்துள்ளார். இதனை அடுத்து அர்த்த மண்டபம், முக மண்டபம் உள்ளன.

அதிட்டானம்

கருவறையின் அடிபாகம் உபபீடத்திலிருந்து தொடங்குகிறது. உபபீடத்தையடுத்து அதிட்டானம் காணப்படுகிறது. இதில் உபானம், ஜகதி, முப்பட்டை குமுதம், கண்டம், பட்டிகை ஆகிய உறுப்புகளைக் கொண்டு அமைந்துள்ளன.

பித்தி (அ) கால் (அ) சுவர்

அதிட்டானத்தின் மேல் பகுதியே சுவராகும். இப்பகுதியில் சதுர வடிவ அரைத்தூண், தாடி, பத்ம இதழ், பலகை, வீர கண்டம், தரங்க போதிகை ஆகியவை அமைந்துள்ளன. சுவர்களில் மகர தோரணங்களுடன் கூடிய தேவகோட்டங்கள் காணப்படுகின்றன. இத்தேவகோட்டத்தில் மூன்று திசைகளில் இறையுருவம் அமைந்துள்ளன. தெற்கில் தட்சிணாமூர்த்தி, மேற்கில் லிங்கோத்பவர், வடக்கில் நான்முகன் ஆகிய திருவுருவங்கள் தேவகோட்ட மாடத்தில் இடம்பெற்றுள்ளன.

பிரஸ்தரம் (அ) கூரை (அ) தோள்

சுவரின் மேல் வரும் கூரையே பிரஸ்தரம் ஆகும். இவை கருவறையின் அறையை மூடும் கூரையாகும். இவை கருங்கல்லால் அமைந்துள்ளன. இதில் பூதவரி, கொடுங்கை, யாளிவரி ஆகிய மூன்று பகுதிகள் உள்ளன. இங்குள்ள கொடுங்கை பகுதியில் பறவை உருவங்களுடன் கூடியக் கர்ணக் கூடுகள் உள்ளன.

கிரீவம் (அ) கழுத்து

பிரஸ்தரத்தின் மேலுள்ள பகுதியே கிரீவமாகும். இப்பகுதி சிகரத்தை விடச்சற்று உள்ளடக்கி உள்ளது. இக்கோயில் கிரீவம் சதுர அமைப்பில் இடம்பெற்றுள்ளது. இக்கிரீவ கோட்டத்தில் நான்கு திசைகளிலும் இறையுருவங்கள் அமைந்துள்ளன. தெற்கில் தட்சிணாமூர்த்தி, மேற்கில் விஷ்ணு, வடக்கில் பிரம்மா, கிழக்கில்

சிவன் ஆகிய உருவங்கள் உள்ளன. கிரீடத்தின் நான்கு மூலைகளிலும் சிவனின் வாகனமான நந்தி வைக்கப்பட்டுள்ளன.

சிகரம் (அ) தலை

கிரீவத்தின் மேலே சிகரம் அமைந்துள்ளது. இக்கோயில் சிகரம் சதுர அமைப்பில் உள்ளதால் இதனை நாகர சிகரம் என்றழைக்கிறோம். கபோதங்ளில் கூடு அமைந்துள்ளது போல் சிகரத்தின் நான்கு பக்கங்களிலும் மகாநாசிகள் உள்ளன. இச்சிகரத்தின் மேல் சுற்றிலும் விரிந்த பத்ம இதழ்கள் இரண்டு அடுக்காக உள்ளன.

குடம் (அ) ஸ்தூபி

சிகரத்தின் மேல் உலோகத்தால் ஆன ஒரு ஸ்தூபி அமைந்துள்ளது.

அர்த்த மண்டபம்

கருவறையையொட்டி அர்த்த மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. கருவறையின் அதிட்டானம் முதல் பிரஸ்தரம் வரை உள்ள கட்டட அமைப்பும், அர்த்த மண்டபத்தின் அதிட்டானம் முதல் பிரஸ்தரம் வரை உள்ள கட்டட அமைப்பும் ஒன்றையொன்று ஒத்துள்ளது. அர்த்த மண்டபத்தின் வெளிப்புறத் தெற்கு தேவகோட்டத்தில் விநாயகரும், வடக்கு தேவகோட்டத்தில் துர்கையின் திருவுருவங்கள் உள்ளன. இத்தேவகோட்டங்கள் மகர தோரணங்களுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

கோயில் கட்டப்பட்ட காலம்

இக்கோயிலில் கிடைக்கும் கல்வெட்டுகளில் காலத்தால் முந்தையது மதுரை கொண்ட இராசகேசரிவர்மனான சுந்தர சோழனின் கல்வெட்டாகும். இவனுடைய ஐந்தாம் ஆட்சி ஆண்டு கல்வெட்டே காலத்தால் மிகவும் முற்பட்டதாகும். இக்கோயில் கி.பி.10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. எனவே இக்கோயில் 1000 ஆண்டுகளுக்கு பழமை வாய்ந்தது எனலாம்.

மகா மண்டபம்

மகா மண்டபத்தில் வரிசைக்கு மூன்று வீதம், இரண்டு வரிசையாக ஆறு தூண்கள் காணப்படுகின்றன. இம்மண்டபத்தில் நந்தி, விநாயகர், இரு தேவியருடன் கூடிய சுப்பிரமணியர் ஆகியோர் சிற்பங்கள் உள்ளன. இம்மண்டபத்தில் எண்(எட்டு) பட்டைகளை கொண்ட தூண்களும், அதற்குமேல் வெட்டு போதிகையும் காணப்படுகின்றன. இப்போதிகையின் அமைப்பைக் கொண்டு ஆராய்ந்தால் மகா மண்டபத்தின் காலம் கி.பி.11,12-ஆம் நூற்றாண்டு எனக்கணக்கிடலாம்.

அம்மன் சன்னதி

அம்மனுக்கென்றுத் தனிச் சன்னதி ஒன்று அமைந்துள்ளது. இச்சன்னதியின் கட்டடக்கலையில் ஆறு அங்கங்கள் உள்ளன. அதாவது அதிட்டானம், பித்தி, பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி, ஆகிய அங்கங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

அதிட்டானம்

அதிட்டானப் பகுதியில் உபானம், ஜகதி, முப்பட்டை குமுதம், கண்டம், பட்டிகை ஆகிய உறுப்புக்களைக் கொண்டுள்ளது.

சுவர்

சுவரில் அரைத்தூண், குடம், பத்மம், பலகை, கண்டம், வெட்டுபோதிகை ஆகிய அங்கங்களுடன் கட்டப்பட்டுள்ளது. பஞ்ச கோட்ட தெய்வங்கள் வைப்பதற்கென்று மாடங்கள் உள்ளன. ஆனால் அதில் இறை உருவங்கள் ஏதும் இல்லை.

பிரஸ்தரம்

பிரஸ்தரத்தில் கர்ணக் கூடுகளுடன் கூடிய கபோதம், அதற்கு மேல் யாளி வரியும் காணப்படுகின்றன.

கிரீவம்

கிரீவத்தில் நான்கு திசைகளிலும் இறை உருவங்களும், நான்கு மூலைகளிலும் அம்மனின் வாகனமான சிங்கமும் காணப்படுகின்றன.

சிகரம்

சிகரத்தில் மனித தலையுடன் கூடிய யாளி கூடுகள் உள்ளன. இவ்விமானம் "சால விமானமாகும்".

ஸ்தூபி

உலோகத்தால் ஆன ஐந்து ஸ்தூபிகள் வரிசையாக சிகரத்தின் மேல் வைக்கப்பட்டுள்ளன. ஸ்தூபியின் கீழ் தாமரை இதழ்கள் காணப்படுகின்றன.

இதன் கட்டட அமைதியைக் கொண்டு ஆராய்ந்தால் இதனின் காலம் கி.பி.16-ஆம் நூற்றாண்டு எனக் கூறலாம்.

முதல்திருச்சுற்று

இக்கோயிலில் கருவறையைச் சுற்றி வலம்வர திருச்சுற்று அமைக்கப்பட்டுள்ளது. திருச்சுற்றில் உள்ள தூண்களில் சதுர பகுதி, நாகபந்தம், அறுகோண பகுதி, சதுர பகுதி, வெட்டு போதிகையுடன் காணப்படுகின்றன. இந்நாகபந்தம் கி.பி.11-ஆம் நூற்றாண்டு வரை எந்த கோயிலிலும் இடம்பெற்றதாக தெரியவில்லை. ஆதலால் இத்திருச்சுற்றின் காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டு எனக் கூறலாம்.

இரண்டாம் திருச்சுற்று

இரண்டாம் திருச்சுற்றில் 86 தூண்கள் நிறுவப்பட்டுள்ளன. தூண்களின் மேல் கூரை வேயப்பட்டு மூடிய சுற்றுப்பாதை அமைப்பட்டுள்ளது. இது கி.பி.20-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும்.

கி.பி.1968-ஆம் ஆண்டு துவஜஸ்தம்பம் பிரதிஷ்டை செய்யப்பட்டு குட முழுக்கு விழா நடத்தப்பட்டுள்ளது.

கோபுரங்கள்

இக்கோயிலில் மூன்று கோபுரங்கள் உள்ளன. கிழக்கு மற்றும் மேற்கில் சிறிய கோபுரமும், தெற்கில் இராஜகோபுரமும் உள்ளன. இவை கி.பி.18,19-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டவை. இதுவே தண்டீஸ்வரர் கோயிலின் கட்டடக்கலை அமைப்பாகும்.

செல்லியம்மன் கோயில் கட்டடக்கலை

கருவறை

கருவறையின் கட்டடக் கலையில் ஆறு அங்கங்கள் அமைந்துள்ளன. அவை அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம் ஸ்தூபி ஆகிய அங்கங்கள் ஆகும்.

அதிட்டானம்

அதிட்டானத்தில் உபானம், ஜகதி, பூமிக்குள் புதைந்துள்ளது. முப்பட்டை குமுதம், கண்டம், பட்டிகை ஆகிய உறுப்புகள் வெளியே காணப்படுகின்றன.

சுவர்

அதிட்டானத்தின் மேல் இரண்டாவது அங்கமாக சுவர் அமைந்துள்ளது. இதில் அரைத்தூண், குடம், தாடி, கண்டம், பத்மம், பலகை, வீரகண்டம் ஆகிய உறுப்புகள் காணப்படுகின்றன.

பிரஸ்தரம்

பிரஸ்தரத்தில் கபோதம், யாளிவரி, ஆகிய உறுப்புக்கள் உள்ளன. இது ஏக தள பிரஸ்தரமாகும்.

கிரீவம்

பிரஸ்தரத்தின் மேல்பகுதி கிரீவமாகும். இதன் நான்கு திசைகளிலும் கடவுளின் திருவுருவங்கள் காட்டப்பட்டுள்ளன. அவை

சுதையால் செய்யப்பட்டதால் இவ்வுருவங்கள் சிதைந்து காணப்படுகின்றது.

சிகரம்

சாலை வகை சிகரமான இது நீண்ட வண்டிக் கூரையை ஒத்து அமைந்துள்ளது. சிகரத்தின் மேல் மகாபத்மமும், அதன் மேல் ஸ்தூபிகளும் அமைந்துள்ளன. சிகரத்தின் பக்கவாட்டில் மகாநாசிகள் வேலைப்பாட்டுடன் நேர்த்தியாக அமைந்துள்ளன.

அர்த்த மண்டபம்

கருவறையின் அமைப்பை போலவே அர்த்த மண்டபத்தில் அதிட்டானம், பித்தி, பிரஸ்தரம் ஆகியன அங்கங்கள் ஒன்றாக உள்ளது.

கோயில் கட்டப்பட்ட காலம்

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளையும், சப்தமாதர் சிற்பங்களையும் கருத்தில் கொண்டு, இக்கோயில் கி.பி.9,10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தொன்மை மிக்கது என அறிகிறோம். இதை உறுதிபடுத்தும் வகையில் பல்லவர் கால சிற்றரசனான பார்த்திவேந்திரவர்மனுடைய கல்வெட்டும், அவன் நண்பன் ஆதித்த கரிகாலன் என்னும் சோழர் கால இளவரசன் கல்வெட்டும் உள்ளன. கல்வெட்டுகளையும் கட்டடக்கலையின் அமைப்பையும் ஒப்பாய்வு செய்ததில் இக்கோயிலின் காலம் கி.பி.10-ஆம் நூற்றாண்டு எனக் கூறலாம்.

முன் மண்டபம்

அர்த்த மண்டபத்தை அடுத்து முன் மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபம் கி.பி.19,20-ஆம் நூற்றாண்டின் கட்டட அமைதியில் உள்ளது.

மகா மண்டபம்

முன் மண்டபத்தையடுத்து மகா மண்டபம் அமைந்துள்ளது. இதில் நான்கு தூண்கள் உள்ளன. இதனின் காலம் கி.பி.19,20-ஆம் நூற்றாண்டாகும்.

நுழைவு வாயில்

மகா மண்டபத்தை அடுத்து திருச்சுற்றும், இதனையடுத்து நுழைவுவாயில் அமைந்துள்ளது. இதுவே செல்லியம்மன் கோயிலின் கட்டடக் கலை அமைப்பாகும்.

யோக நரசிம்மர் கோயில் கட்டடக்கலை

கருவறை

சதுர வடிவிலான கருவறை மேற்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கருவறையின் கட்டடக்கலையில் ஆறு அங்கங்கள் அமைந்துள்ளன. அவை அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம் மற்றும் ஸ்தூபி ஆகிய பகுதிகளாகும்.

அதிட்டானம்

அதிட்டானத்தில் உபானம், ஜகதி, முப்பட்டை குமுதம், கண்டம், பட்டிகை ஆகிய பகுதிகள் உள்ளன. இதில் உபானம் மண்ணில் புதைந்துள்ளது.

சுவர்

சுவரில் அரைத்தூண், குடம், பத்மம், பலகை, வீரகண்டம், வெட்டு போதிகை ஆகிய உறுப்புகள் உள்ளன.

பிரஸ்தரம்

பிரஸ்தரத்தில் கொடுங்கை அமைந்துள்ளது. இது ஏக தள பிரஸ்தரமாகும்.

கிரீவம்

பிரஸ்தரத்தின் மேல் பகுதியாக கிரீவம் அமைந்துள்ளது.

சிகரம்

இக்கோயில் விமானம் "வேசர சிகரமாகும்".

ஸ்தூபி

சிகரத்தின் மேல் உலோகத்தால் ஆன ஒரு ஸ்தூபி உள்ளது. இதற்கு கீழே பத்ம இதழ்கள் காணப்படுகின்றன.

அர்த்த மண்டபம்

அர்த்த மண்டபக் கட்டடக்கலை கருவறையின் கட்டடக்கலையோடு ஒத்துள்ளது. இம்மண்டபத்தில் நான்கு தூண்கள் உள்ளன. இத்தூண்களில் வெட்டு போதிகை காணப்படுகின்றன.

கோயில் கட்டப்பட்ட காலம்

இக்கோயிலில் இரண்டு சிதைந்துள்ள கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் ஒரு கல்வெட்டு முதலாம் இராசராசனின் 26-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டாகும். இக்கல்வெட்டில் பகுதி மெய்க்கீர்த்தி மட்டும் உள்ளது.

மற்றொரு கல்வெட்டும் முழுமை பெறாமல் உள்ளது. இதிலும் முதலாம் இராசேந்திரனின் மெய்க்கீர்த்தியில் வரும் சொற்கள் மட்டும் காணப்படுகின்றன. முழுமை பெறாத இக்கல்வெட்டில் சாவா மூவா பேராடு கொடையாக அளித்தச் செய்தியை கூறுகிறது.

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளை கொண்டும், கட்டடக்கலை மற்றும் அதில் உள்ள தூணின் அமைப்பைக் கொண்டும் பார்த்தோமானால் இக்கோயில் கி.பி.11-ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியைச் சார்ந்ததாக கூறலாம்.

கோபுரம்

இக்கோயிலில் மூன்று நிலைகளைக் கொண்ட கோபுரம் உள்ளது. இக்கோபுரத்தில் விஷ்ணுவின் அவதாரங்கள் சிற்பங்களாக காணப்படுகின்றன.

நுழைவு வாயில்

இக்கோயிலில் நுழைவு வாயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இதில் யோக நரசிம்மரின் சிற்பமும், சயண நிலையில் உள்ள பெருமாளின் சிற்பமும காணப்படுகின்றன.

இதுவே யோக நரசிம்மர் கோயிலின் கட்டடக்கலை அமைப்பாகும்.

ஆ) சிற்பக் கலை

கலையும் அழகும் எப்பொழுதும் இணைந்தே இருக்கும். ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது. கலை என்பது எந்த நாட்டில் தோன்றுகிறதோ அந்நாட்டின் பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்துவதாக அமையும். இக்கலையானது வடிவம், வண்ணம், கோடுகள், நிலை என்ற புறவடிவங்களைக் கொண்டு திகழ்ந்தாலும் அதில் மாபெரும் அழகுணர்ச்சி ததும்பக்காட்டப்பட்டிருந்தாலும் அக்கலையின் அகவடிவமே கலைத்துறையில் அல்லது முருகியலில் பெரிதும் விரும்பப்படுகிறது. மனிதன் தனது வாழ்வின் கூறுகளை இறைவனுக்கும் அப்படியே ஏற்றிப்படைக்கிறான். அவ்வாறு படைக்கப்பட்ட இறையுருவங்கள் மீது சமூகம் சார்ந்த, குறிப்பாகச் சமயம் சார்ந்த பார்வையைத்தான் கொண்டிருக்கிறோம்.

அத்தகைய சிற்பங்கள் கோயில்களில் விமானம், கோபுரம், மண்டபத்தூண்கள், தேர் முதலிய இடங்களில் இடம் பெறுகின்றன.

இவற்றில் விமானம், மற்றும் கோபுரங்களில் இடம்பெறும் சிற்பங்கள் சுதையால் செய்யப்பட்டிருக்கும். மண்டபத்தூண்களில் இடம் பெற்றுள்ள சிற்பங்கள் கல்லினாலும், தேர்களில் இடம்பெற்றுள்ள சிற்பங்கள் மரத்தினாலும் செய்யப்பட்டிருக்கும். விமானத்தின் அதிட்டான கண்டத்திலும், சிற்பங்கள் செதுக்கப்படுவதுண்டு.

தமிழகத்தில் ஆட்சிபுரிந்த ஆட்சியாளர்களில் ஒவ்வொரு அரசபரம்பரையினருக்கும் அவர்களுக்கெனத் தனித்தனிக் கலைப்பாணி உண்டு. இவற்றை முற்கால பல்லவர் கலைபாணி, பிற்காலப் பல்லவர் கலைப்பாணி, முற்கால மற்றும் பிற்கால சோழர் கலைப்பாணி, முற்காலப் பாண்டியர் மற்றும் பிற்காலப் பாண்டியர் கலைப்பாணி என்றும் விசயநகர கலைப்பாணி மற்றும் நாயக்கர் கலைப்பாணி என்றும் வகைப்படுத்தலாம்.

பல்லவர் கலைப்பாணியில் அகன்ற தோளும், கீழ் தாடையில் ஒரு வெட்டும், கம்பீரமான தோற்றமும் இருக்கும். இச்சிற்பங்களின் மகுடமானது கூம்பு வடிவமாக நீண்டு இருக்கும். இவர்களின் பூணூல் வலதுகையின்மேல் ஏறிச்செல்வதாக அமையும். ஆபரணங்கள் எளிமையாக இருக்கும். பெண் சிற்பம் அடிவயிற்றுப் பகுதி முன்பக்கம் சற்றுபருத்தும் இருக்கும்[1].

சோழர்களது சிற்பங்கள் அழகும் உயிரோட்டமும் கொண்டவையாகும். பல்லவரது வளர்ச்சியே சோழர் சிற்பம் எனலாம். மெல்லிய உடலமைப்பு, பல புரிகளை கொண்ட பூணுல், சிம்மமுக அரைக்கச்சு, ஆடையில் வரிசை அல்லது பூவேலைப்பாடு மற்றும் தேவகோட்டத்தில் இறைவுருவம் அதனோடு தொடர்புடைய வேறு சிற்பங்கள் தேவகோட்டத்தின் இருபக்கங்களிலும் இடம் பெற்றிருக்கும்[2].

பாண்டியரது சிற்ப கலைப்பாணி குறுகியதாக இருக்கும், மகுடம் உயர்ந்து காணப்படும் இவர்கள் காலத்தில் தேவகோட்டங்களில் சிற்பங்கள் வைக்கவில்லை. பதிலாக விமானத்தின் மேல் தளங்களிலும், கோபுரங்களிலும் சிற்பங்களை அமைத்தனர். பல்லவர், சோழர் சிற்பங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம் எனில் பாண்டியரது சிற்பம் சற்று அழகு குறைந்தவையாகும்[3].

விசயநகரர் கலைப்பாணி சிற்பங்கள் அளவான உயரத்துடன் அமையும். அதிகமான ஆபரணங்களும், விசிறி மடிப்பினைப் போன்ற ஆடை அமைப்புடனும் விளங்கும்[4].

நாயக்கர்காலச் சிற்பக்கலை என்பது விசயநகர் கலைபாணியின் வளர்ச்சியாகும். இவர்கள் கால சிற்பங்கள் மிக உயரத்துடனும், கை விரல்கள் மற்றும் கால் விரல்களில் நகங்கள் கூர்மையாக காட்டப்பட்டிருக்கும். உடலைப்பு சதைப்பற்றுடன் காணப்படும். இவர்களது கலைப்படைப்புகளில் அக்கால வட்டாரம் பழக்கவழக்கங்களின் தாக்கம் அதிக அளவில் இடம் பெற்றிருக்கும்[5].

இத்தகைய குறிப்புக்களை கொண்டு வேளச்சேரியில் உள்ள தண்டீஸ்வரர் கோயில், செல்லியம்மன் கோயில் மற்றும் யோக நரசிம்மர் கோயிலின் சிற்பங்களை இனி காண்போம்.

தண்டீஸ்வரர் கோயில் சிற்பங்கள்

கருவறையினுள் உள்ள லிங்கம் சுயம்பு லிங்கம் என்கின்றனர். இந்த லிங்கத்தில் ஆவுடையாரும், ருத்ரபாகம் மட்டுமே தெரிகிறது. விஷ்ணு பாகமும், பிரம்ம பாகமும் அடியில் புதையுண்டு இருக்கின்றது. இறைவனுக்கு உருவம் உண்டு என்றும், உருவம் இல்லை என்றும் ஒரு சாரார் கருதுகிறார்கள். சிவலிங்கம் இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையான அருவுருவமாக விளங்குகிறது. உடல் உறுப்புக்கள் இல்லாததால் அருவமாகக் கொள்ளலாம்.

கண்ணுக்குப் புலப்படும் பிழம்பாகத் தோன்றியதால் உருவமாகவும் கொள்ளலாம். இக்கருத்தையே சேக்கிழார் வலியுறுத்துகிறார்.

"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்"

(சாக்கிய நாயனார் புராணம்)

இத்தகையப் பெருமைகளையுடைய சிவலிங்கமே இக்கோயிலில் தண்டீஸ்வரர் என்ற பெயரை பெற்று விளங்குகின்றது. இந்த லிங்கத்தின் ஆவுடை வட்டமாக உள்ளது. இடது பக்கம் பிரநாளம் காணப்படுகிறது. ஆவுடையாருக்கு கீழே பத்ர பீடமும், அதற்கு கீழே மற்றொரு பத்ர பீடமும், அதற்கு கீழே வட்டமாக ஒரு பீடமும், அதற்கு கீழே சதுரமாக ஒரு பீடமும் காட்டப்பட்டுள்ளன. கருவறை லிங்கத்தை சூக்ஷ்மலிங்கம் என்றழைப்பர்.

துவார பாலகர்கள் (வாயிற் காவலர்கள்)

அர்த்த மண்டப நுழைவாயிலின் இருபுறமும் பல்லவருக்கும் பிற்காலச் சோழருக்கும் இடைப்பட்ட கலமான முற்கால சோழர் காலத்தை சேர்ந்த இரு துவாரபாலகர்கள் சிற்பம் உள்ளன. இச்சிற்பங்களின் காலம் கி.பி.10-ஆம் நூற்றாண்டாகும்.

தென்புறமுள்ள துவார பாலகர் நேர் பார்வையோடும் நான்கு கரங்களோடும் உள்ளார். தலையில் கரண்ட மகுடம் காணப்படுகிறது. வலது பின் கரம் விஸ்மயத்திலும், இடது பின் கரம் தாடக ஹஸ்தத்திலும்; வலது முன் கரம் இடது பக்கம் உள்ள வாலின் மீதும், இடது முன் கரம் தர்ஜனி முத்திரையிலும் காட்டப்பட்டுள்ளன. கையில் கேயூரமும் வளையல்களும் உள்ளன. வலது காதில் கர்ணக் குண்டலமும், இடது காதில் ஆந்தை குண்டலமும் அமைக்கப்பட்டுள்ளன. கழுத்தில் ஆரம் அணிந்து உள்ளார். முப்புரிநூலும், உதர பந்தமும் உள்ளன. இடுப்பில் தொடையோடு

ஒட்டிய ஆடை அணிந்துள்ளார். ஆடைக்கட்டு கணுக்கால் வரை தொங்குகிறது. காலில் பாதசரம் உள்ளது. இடது கால் நேராகவும், வலது கால் மடித்தவாறும் வைத்துள்ளார். இவருடைய வாயின் இரு பக்கமும் கோரப்பற்கள் காட்டப்பட்டுள்ளன.

வலதுபுறமுள்ள துவாரபாலகர் பரந்த தோளும், கம்பீரமான தோற்றமும், நேர்ப்பார்வையும் கொண்டுள்ளார். தலையில் கரண்ட மகுடமும், வலது காதில் ஆந்தை குண்டலமும், இடது காதில் பறவை குண்டமும், கழுத்தில் ஆரமும், இடது கையில் கேயூரமும், வலது கரத்தில் பாம்பை கேயூரமாகவும் காட்டப்பட்டுள்ளன வளையல்கள் அணிந்துள்ளார். வலது பின் கரம் தாடக ஹஸ்தத்திலும், இடது பின் கரம் விஸ்மய ஹஸ்தத்திலும், வலது முன் கரம் கதையின் மீது தாங்கலாகவும், இடது முன் கரம் தர்ஜனி ஹஸ்தத்திலும் காட்டப்பட்டுள்ளன. மார்பில் பூணூலும் அதில் பிரம்ம முடிச்சு உள்ளது. உதர பந்தம் காட்டப்பட்டுள்ளது. தொடையோடு ஒட்டிய ஆடையும் அதில் பட்டிகை முடிச்சும், கணுக்கால் வரை உள்ளது. காலில் பாதசரம் அணிந்துள்ளார். வலது கால் நேராகவும், இடது கால் கதையின் மீது வைத்துள்ளார்.

நந்தி

முன் மண்டபத்தில் நந்தி மூலவரை நோக்கியவாறு உள்ளது. இந்நந்தி தருமதேவதையின் வடிவமாகும். லிங்கத்தின் பீடத்தின் உயரமளவுக்கு நந்தி பீடம் அமைந்துள்ளது. நந்தி அமர்ந்தவாறு உள்ளது. கழுத்தில் சலங்கையும், மணியும் காட்டப்பட்டுள்ளன. உடம்போடு ஒட்டிய ஆடை முதுகின் மீது உள்ளது. காலில் கண்டிகை உள்ளது. நந்திக்கு பின்னே நின்று அறவழியில் ஈசனை அடைய அருளுமாறு துதிக்க வேண்டும். அதுபோலவே நந்தியின் உதவியின்றி ஈசனை தரிசிக்க இயலாது.

பலிபீடம்

முன்மண்டபத்தில் நந்திக்கு பின்னே பலிபீடம் உள்ளது. கருவறையில் உள்ள லிங்கத்தின் பீடத்தின் உயரமளவுக்கு பலிபீடம் உள்ளது. இந்த பலிபீடம் கல்லால் அமைந்துள்ளது. இந்த பலிபீடத்தை பத்ர லிங்கம் என்பர்.

விநாயகர்

அர்த்த மண்டப நுழைவாயிலின் ஒரு புறத்தில் விநாயகரின் திருவுருவம் காணப்படுகிறது. தலையில் கரண்ட மகுடமும், கைகளில் கேயூரம், வளையல்கள் உள்ளன. வலது பின் கரம் கடக ஹஸ்தத்தில் அங்குசமும், இடது பின் கரம் கடக ஹஸ்தத்தில் பாசத்தையும், வலது முன் கரம் கடக ஹஸ்தத்தில் தந்தமும், இடது முன் கரம் மோதகம் இருப்பதை காட்டப்பட்டுள்ளன. மார்பில், முப்புரிநூல், உதரபந்தம் உள்ளன. இவர் லலிதாசனத்தில் உள்ளார். இவரது வலது காலுக்கு கீழே எலி உள்ளது. இவரது வடிவம் ஓம்காரமான பிரணவத்தை உணர்த்துகிறது.

சுப்பிரமணியர், வள்ளி, தெய்வானை

அர்த்த மண்டப நுழைவாயிலுக்கு வலதுபுறத்தில் சுப்பிரமணியப் பெருமாள், வள்ளி, தெய்வானை ஆகியோர் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. பத்ர பீடத்தின் மேல் சுப்பிரமணியர் சமபங்கத்திலும், தேவியர் இருவரும் த்ரிபங்க நிலையிலும் உள்ளனர். சுப்பிரமணியரின் வலது பின் கரம் கடக ஹஸ்தத்தில் வேல்படையும், இடது பின் கரம் கடக ஹஸ்தத்தில் வஜ்ரத்தையும், வலது முன் கரம் அபய ஹஸ்தத்திலும், இடது முன் கரம் வரத ஹஸ்தத்திலும் காட்டப்பட்டுள்ளன. கையில் கேயூரமும் வளையல்களும் உள்ளன. மார்பில் முப்புரிநூல், மேல் வயிற்றில் உதர பந்தம் உள்ளன. இடைக்கச்சு அணிந்துள்ளார். காலில் பாதசரம் அணிந்துள்ளார். காதில் மகர குண்டலங்கள் உள்ளன.

வள்ளி கரண்ட மகுடத்தையும், கையில் கேயூரம், வளையல்களும் அணிந்துள்ளார். காதில் மகர குண்டலமும், கழுத்தில் சவடி அணிந்துள்ளார். மார்பு கச்சு அணிந்துள்ளார். இடைக்கச்சு அணிந்துள்ளார். வலது கரம் டோல ஹஸ்தத்திலும், இடது கரம் கடக ஹஸ்தத்தில் தாமரை மலரையும் பிடித்துள்ளார். காலில் பாதசரம் உள்ளது. இவர் பத்ர பீடத்தின் மேல் நின்றவாறு காணப்படுகின்றார்.

தெய்வானை சுப்பிரமணியரின் இடதுபுறம் நின்றுள்ளார். தலையில் கரண்ட மகுடம், காதில் மகர குண்டலமும், கழுத்தில் சவடியும், கையில் கேயூரம், வளையல்கள் உள்ளன. வலது கரம் கடக ஹஸ்தத்தில் நீலோத்பவ மலரும், இடது கரம் டோல ஹஸ்தத்தில் உள்ளன. இடையில் இடைக்கச்சு உள்ளது. காலில் பாதசரம் அணிந்துள்ளார். இவரை பத்ர பீடத்தில் மேல் நின்றவாறு அமைத்துள்ளனர்.

கருணாம்பிகை

பத்ம பீடத்தின் மேல் திரிபங்க நிலையில் நின்றுள்ளார். தலையில் கரண்ட மகுடம், காதில் மகர குண்டலம், கழுத்தில் சவடியும், கையில் கேயூரம், வளையல்கள் அணிந்துள்ளார். தோள் மாலை உள்ளது. மார்பு கச்சு காணப்படுகின்றது. இடையில் தொடையோடு ஒட்டிய கீர்த்தி முக ஆடை அணிந்துள்ளார். காலில் பாதசரம் காணப்படுகிறது. வலது பின் கரம் கடக ஹஸ்தத்தில் பாசத்தையும், இடது பின் கரம் கடக ஹஸ்தத்தில் அங்குசத்தையும், வலது முன் கரம் அபய ஹஸ்தத்திலும், இடது முன் கரம் வரத ஹஸ்தத்திலும் காட்சியளிக்கிறார். மார்பில் முப்புரிநூல் அணிந்துள்ளார். இச்சிற்பம் கி.பி.16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

நர்த்தன கணபதி

பத்ம பீடத்தின் மேல் கணபதி நர்த்தன வடிவில் காட்சியளிக்கிறார். வலது காலை தரையில் நன்றாக ஊன்றியும், இடது கால் நுனி விரல் மட்டும் தரையில்படும்படி சற்று மடித்தவாறும் காட்டப்பட்டுள்ளார். இடையில் இடைக்கச்சு அணிந்துள்ளார் மார்பில் முப்புரிநூல் அணிந்துள்ளார். உதர பந்தம் காணப்படுகின்றன. இவருடைய வலது பின் கரம் கடக ஹஸ்தத்தில் அங்குசத்தையும், இடது பின் கரம் கடக ஹஸ்த்தத்தில் பாசத்தையும், வலது முன் கரம் கடக ஹஸ்தத்தில் தந்தத்தையும், இடது முன் கரத்தில் மோதகத்தை வைத்துள்ளார். இவருடைய தும்பிக்கை இடப்பாக்கம் வளைந்து உள்ளதால் நர்த்தன இடம்புரி கணபதி என்று இவருக்கு பெயர் உண்டு. கேயூரமும், வளையல்களும் காட்டப்பட்டுள்ளன. தலையில் கரண்ட மகுடம் உள்ளது. இச்சிற்பம் கருணாம்பிகை சந்ததியின் வலதுபுறச் சுவரில் உள்ளது. இது 12,13-ஆம் நூற்றாண்டை சேர்ந்தது எனலாம்.

தேவகோட்ட சிற்பங்கள்

கருவறை, அர்த்த மண்டபம் ஆகியவற்றின் புறச்சுவர்களிலுள்ள தேவகோட்டங்களில் சில குறிப்பிட்ட இறை உருவங்களை அமைக்கும் வழக்கம் பல்லவ மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் துவங்கியது. சோழர்கள் காலத்தில் இதனை பஞ்ச கோஷ்டம் என்று அழைத்தனர். வேளச்சேரி தண்டீஸ்வரர் கோயிலில் இதுபோன்ற உருவங்கள் முறைப்படி அமைத்து பஞ்ச கோஷ்டங்கள் என்று அழைப்பர்.

இடம்புரி விநாயகர்

அர்த்த மண்டபத்தின் தென்புறச் சுவரில் யானையுடன் கூடிய மகர தோரணத்தின் கீழுள்ள தேவகோட்டத்தில் இடம்புரி விநாயகர்

காட்சியளிக்கிறார். பத்ம பீடத்தின் மேல் அமர்ந்த நிலையில் உள்ளார். லலிதாசனத்தில் உள்ளார். மார்பில் புரிநூல், உதரபந்தம் அணிந்துள்ளார். தும்பிக்கை இடது பக்கம் வளைந்து உள்ளது. வலது பின் கரம் கடக ஹஸ்தத்தில் அங்குசத்தையும், இடது பின் கரம் கடக ஹஸ்தத்தில் ருத்ராட்சமாலை, வலது முன் கரம் கடக ஹஸ்தத்தில் தந்ததையும், இடது முன் கரத்தில் மோதகத்தையும் வைத்துள்ளார். கையில் கேயூரமும், வளைகளும் காட்டப்பட்டுள்ளன. தலையில் கரண்ட மகுடம் உள்ளது. தலை லேசாக வலதுபுறம் திரும்பியுள்ளது. இச்சிற்பத்தின் காலம் கி.பி.10-நூற்றாண்டின் பிற்பகுதி.

தக்ஷிணாமூர்த்தி

கருவறையின் தென்புற சுவரில் யானையுடன் கூடிய மகரதோரணத்தின் கீழ் உள்ள தேவக்கோட்டத்தில் நான்கு கரங்களுடன் உத்குடியாசனத்தில் தென்முகக் கடவுளான தக்ஷிணாமூர்த்தி சிற்பம் காணப்படுகின்றது. பத்மபீடத்தின் மேல் முயலகன் மீது இடது காலை வைத்து, வலது காலை மடித்து இருக்கையின் மீது கிடத்திய வாறும் காட்டப்பட்டுள்ளது. பாதத்தின் இரண்டு பக்கமும் இரண்டு முனிவர்கள் மாணவர்கள் போல் காட்டப்பட்டுள்ளனர். காலில் பாதசரம் உள்ளது. இடையில் கீர்த்தி முக ஆடை அணிந்துள்ளார். ஆடை தொடையோடு ஒட்டியுள்ளது. மார்பில் முப்புரிநூல், பிரம்ம முடிச்சு, உதரபந்தம் மற்றும் கழுத்தில் ருத்ராட்சமாலை உள்ளன. கையில் கேயூரம், வளையல்கள் உள்ளன. வலது பின் கரம் கடக ஹஸ்தத்தில் ருத்ராட்ச மாலை, இடது பிகரம் கடக ஹஸ்தத்தில் மானையும், வலது முன் கரம் சின்முத்திரையிலும், இடது முன் கரம் புஸ்தக ஹஸ்தத்தில் ஏடும் காட்டப்பட்டுள்ளன. இடது காதில் பத்ர குண்டலமும், வலது காது நீள் காதாக உள்ளன. தலையில் ஜடாபாரம், அதன் நடுவில் கபாலம்

காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் காலம் கி.பி.10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

லிங்கோத்பவர்

கருவறையில் மேற்குபுறச் சுவரில் யானையுடன் கூடிய மகர தோரணத்தின் கீழுள்ள தேவகோட்டத்தில் அடிமுடிகாணா அண்ணல் எனப் போற்றப்படும் லிங்தோத்பவர் சிற்பம் உள்ளது. இவருடைய காலின் வலது புறத்தில் பிரம்மா மூன்று தலையுடனும், நான்கு கரங்களுடனும் இறைவனை வணங்கியவாறு சமபங்கத்தில் நின்றுள்ளார். முன் இருகரங்கள் அஞ்சலி ஹஸ்தத்திலும், பின் இருகரங்கள் அட்சர மாலை, கெண்டி பிடித்துள்ளார். கழுத்தில் ருத்ராட்ச மாலை, இடையில் இடைக்கச்சு உள்ளது. லிங்கோத்பவரின் இடது பக்கம் காலருகே விஷ்ணு நான்கு கரங்களுடன் சமபங்கத்தில் நின்றுள்ளார். இரு பின் கரங்கள் சங்கு, சக்கரத்தையும், இரு முன் கரங்கள் அஞ்சலி ஹஸ்தத்திலும் உள்ளன. இடையில் இடைக்கச்சு உள்ளது. லிங்கத்தின் கீழ் விஷ்ணுவின் வராக அவதாரமும், லிங்கத்தின் மேல் வலது பக்கம் பிரம்மாவின் அன்ன வடிவமும் காட்டப்பட்டுள்ளன. லிங்கோத்பவர் கீர்த்தி முக ஆடை அணிந்துள்ளார். இந்த ஆடை தொடையோடு ஒட்டியுள்ளது. மார்பில் முப்புரிநூலும் அதில் பிரம்ம முடிச்சும் காட்டப்பட்டுள்ளது. உதர பந்தம் அணிந்துள்ளார். கழுத்தில் சவடியும், கையில் கேயூரம், வளையல்கள் அணிந்துள்ளார். வலது பின் கரம் கடக ஹஸ்தத்தில் மானையும், இடது பின் கரம் கடக ஹஸ்தத்தில் மழுவையும், வலது முன் கரம் அபய ஹஸ்தத்திலும், முன் இடது கரம் கட்டிய வலம்பித ஹஸ்தத்திலும் காட்டப்பட்டுள்ளார். வலது காதில் பத்ம குண்டலம், இடது காதில் பத்ர குண்டலம் காட்டப்பட்டுள்ளன. தலையில் ஜடா மகுடம் அணிந்துள்ளார். இச்சிற்பத்தின் காலம் கி.பி.10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

பிரம்மா

கருவறையின் வடக்குபுறச் சுவரில் யானையுடன் கூடிய மகர தோரணத்தின் கீழுள்ள தேவகோட்டத்தில் பிரம்மா நான்கு, கரங்களுடனும், மூன்று தலையுடனும் பத்ம பீடத்தின் மேல் சமபங்கத்தில் நின்றுள்ளார். காலில் பாதசரம், முழுநீள ஆடை உள்ளது. ஆடையானது இடுப்பின் இருமருங்கிலும் பரந்து விரிந்து காட்டப்பட்டுள்ளன. கீர்த்தி முக ஆடை, பாதம் வரை தடித்து உள்ளது. முப்புரிநூல் இரண்டு பிரிவாக உள்ளது. அதில் பிரம்ம முடிச்சு காட்டப்பட்டுள்ளது. உதர பந்தம் உள்ளது. கழுத்தில் சவடியும், சரப்பள்ளியும் காட்டப்பட்டுள்ளன. கையில் கேயூரமும், வளையல்களும் அணிந்துள்ளார். இரு காதிலும் மகர குண்டலங்கள் உள்ளன. வலது பின் கரம் கடக ஹஸ்தத்தில் அட்சமாலையும், இடது பின் கரம் கடக ஹஸ்தத்தில் கெண்டியும், வலது முன் கரம் அபய ஹஸ்தத்திலும், இடது முன் கரம் கட்டிய வலம்பித ஹஸ்தத்திலும் காட்டப்பட்டுள்ளன. தலையில் கரண்ட மகுடம் அணிந்துள்ளார். இச்சிற்பத்தின் காலம் கி.பி.10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

துர்கை

அர்த்தமண்டப வடக்குபுறச் சுவரில் யானையுடன் கூடிய மகர தோரணத்தின் கீழுள்ள தேவகோட்டத்தில் விஷ்ணு துர்கை நான்கு கரங்களுடன் சமபங்கத்தில் பத்ம பீடத்தின் மேல் நின்றுள்ளார். காலில் பாதசரம், இடையில் கீர்த்தி முக ஆடை உள்ளன. ஆடை தொடையோடு ஒட்டியுள்ளது. ஆடையானது இருமருங்கிலும் பரந்து விரிந்து காட்டப்பட்டுள்ளது. மார்பில் மார்பு கச்சு அணிந்துள்ளார். ஸ்தன சூத்ரம் உள்ளது. கழுத்தில் சவடியும், சரப்பள்ளியும் காட்டப்பட்டுள்ளன. இரண்டு காதிலும் பத்ர குண்டலங்கள் உள்ளன. கையில் கேயூரமும், வளையல்களும் அணிந்துள்ளார். வலது பின் கரம் கடக ஹஸ்தத்தில் பிரயோக சக்கரமும், இடது பின் கரம் கடக

ஹஸ்தத்தில் சங்கும், வலது முன் கரம் அபய ஹஸ்தத்திலும், இடது முன் கரம் கட்டிய வலம்பித ஹஸ்தத்திலும் காட்டப்பட்டுள்ளார். நெற்றியில் கண்டிகையும், தலையில் கரண்ட மகுடமும் காட்டப்பட்டுள்ளன. இச்சிற்பத்தின் காலம் கி.பி.10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

சண்டிகேஸ்வரர்

துர்கைக்கு எதிராக உட்திருச்சுற்றில் சண்டிகேஸ்வரருக்கு தனி சன்னதி உள்ளது. பத்ர பீடத்தில் வலது காலை தொங்கவிட்டும், இடது காலை மடக்கியும் சுகாசனம் அமர்ந்துள்ளார். காலில் பாதசரம், இடையில் இடைக்கச்சும் மார்பில் முப்புரிநூலும், உதரபந்தமும், பிரம்ம முடிச்சும், கழுத்தில் ருத்ராட்ச மாலையும், தோளில் தோள் மாலையும், வாகு வளையமும், கேயூரமும், வளையல்களும் அணிந்துள்ளார். வலது கரம் கடக ஹஸ்தத்தில் மழுவையும் இடது கரம் தொடை மீதும் வைத்துள்ளார். காதுகளில் பத்ர குண்டலம், தலையில் ஜடாபாரம் காட்டப்பட்டுள்ளது. சண்டேசர் என்பதற்கு காப்பவன் என்று பொருளாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த சண்டேசுவரரின் சிற்பம் காலம் கி.பி.10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

பைரவர்

நடராஜர் சன்னதிக்கு வெளியே சுவர் ஓரமாக பைரவர் சமபங்கத்தில் ஆடை அணியா அழகராக நின்றுள்ளார். காலில் பாதசரம் காட்டப்பட்டுள்ளது. பின்னால் வாகனமாகக் நாய் காட்டப்பட்டுள்ளது. இடையில் சர்ப்பத்தாலான அரைஞாண் காணப்படுகிறது. மார்பில் பாம்பு புரிநூலாக சுற்றியுள்ளது. கழுத்தில் மணிமாலையும், வலது காதில் மகர குண்டலம், இடது காதில் பத்ர குண்டலம், தலையில் ஜுவாலா மகுடம் காட்டப்பட்டுள்ளன. வலது பின் கரம் கடக ஹஸ்தத்தில் டமருவும், இடது பின் கரம் கடக

ஹஸ்தத்தில் பாசத்தையும், வலது முன் கரம் கடக ஹஸ்தத்தில் சூலத்தையும், இடது முன் கரம் கபாலம் கொண்டும் காட்டப்பட்டுள்ளன. ஆணவத்துடன் எக்காளமிட்ட பிரம்ம தேவனின் ஐந்தாவதுத் தலையைக்கிள்ளி எறிந்து புத்தி புகட்டுவதற்காக ஈசனால் உருவாக்கப்பட்ட வடிவமே பைரவராகும். இச்சிற்பத்தின் காலம் கி.பி.10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

முருகன்

மகா மண்டபத்தின் வெளிப்புறச் சுவரில் தெற்கு பார்த்து முருகன் அமைக்கப்பட்டுள்ளது. தலையில் கரண்ட மகுடம், காதில் மகர குண்டலம், நெற்றியில் கண்டிகை, மார்பில் புரிநூல் உதர பந்தம் உள்ளன. வலது பின் கரம் கத்திரி ஹஸ்தத்தில் வஜ்ரத்தையும், இடது பின் கரம் கத்திரி ஹஸ்தத்தில் சக்தியையும், வலது முன் கரம் அபய முத்திரையிலும், இடது முன் கரம் கட்டிய வலம்பித முத்திரையிலும் காட்டப்பட்டுள்ளன. இடையில் இடைக்கச்சு உள்ளது. மயில் வாகனம் பின்னால் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் காலம் கி.பி.16,17-ஆம் நூற்றாண்டாகும்.

லட்சுமி

உட்திருச்சுற்றின் மேற்கு பகுதியில் பத்ர பீடத்தின் மேல் லட்சுமி பத்மாசனத்தில் அமர்ந்துள்ளார். தலையில் கரண்ட மகுடமும், இரு காதிலும் மகர குண்டலமும், வலது பின் கரத்திலும், இடது கரத்திலும் தாமரை மலர்களை ஏந்தியவாறும், வலது முன் கரம் அபய முத்திரையிலும், இடது முன் கரம் வரத முத்திரையிலும் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் காலம் கி.பி.16,17-ஆம் நூற்றாண்டாகும்.

சரஸ்வதி

பத்ர பீடத்தின் மேல் சுகாசனத்தில் அமர்ந்துள்ளார். உட்திருச்சுற்றின் மேற்கு பகுதியில் கிழக்கு நோக்கியவாறு உள்ளது.

தலையில் கரண்ட மகுடமும், காதில் மகர குண்டலமும், வலது பின் கரத்தில் அக்கரமாலையும், இடது பின் கரமும் வலது முன் கரமும் வீணையை பிடித்துள்ளது போல் உள்ளது. இடது முன் கரம் புஸ்தகத்தை ஏந்தியவாறு காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் காலம் கி.பி.16,17-ஆம் நூற்றாண்டாகும்.

திருமால்

உட்திருச்சுற்றின் கிழக்கு பகுதியில் உள்ள சிறு மாடத்தில் திருமாலின் திருவுருவம் காணப்படுகிறது. மகாவிஷ்ணு நின்ற கோலத்தில் பின் இரு கரங்களில் சங்கு, சக்கரமும், முன் இரு கரங்கள் அபய முத்திரையிலும், வரத முத்திரையிலும் காட்டப்பட்டுள்ளன. இச்சிற்பத்தின் காலம் கி.பி.16,17-ஆம் நூற்றாண்டாகும்.

சூரியன்

உட்திருச்சுற்றின் கிழக்குப் பகுதியில் சூரியன் சிறு மாடத்தில் இடம் பெற்றுள்ளார். அவரது இரு கைகளும் தாமரை மொட்டுக்களை ஏந்தியவாறு தோள்வரை உயர்ந்துள்ளன. இடையில் உதரபந்தம் காணப்படுகிறது. மாடத்தின் மேல் பகுதியில் குதிரைகள் பூட்டப்பட்டுள்ள தேரில் சூரியனின் வடிவத்தை அமைத்துள்ளனர். காலம் கி.பி.16,17-ஆம் நூற்றாண்டு.

செல்லியம்மன் கோயில் சிற்பக்கலை

விநாயகர்

விநாயகர் மேற்கு பார்த்தவாறு அமைக்கப்பட்டுள்ளது. வலது பின் கரம் கடக ஹஸ்தத்தில் அங்குசத்தையும், இடது பின் கரம் கடக ஹஸ்தத்தில் பாசத்தையும், வலது முன் கரம் கடக ஹஸ்தத்தில்

தந்தத்தையும், இடது முன் கரத்தில் மோதகத்தையும் வைத்துள்ளார். இவர் இடம்புரி விநாயகராக பத்ம பீடத்தின் மீது அமர்ந்துள்ள நிலையில் காட்சியளிக்கிறார். தலையில் கரண்ட மகுடம் உள்ளது. இச்சிற்பத்தின் காலம் கி.பி.9,10-ஆம் நூற்றாண்டாகும். பீடத்தின் கீழ் மூஞ்சுறு உள்ளது.

சப்தமாதர்

சாமுண்டீஸ்வரி

இவர் வடக்கு நோக்கியவாறு உள்ளார். பத்ம பீடத்தின் மேல் வலது காலை மடக்கி, இடது காலை தொங்கவிட்டும் சுகாசனத்தில் அமர்ந்துள்ளார். சாமுண்டாவின் இடது பின் கரம் கடக முத்திரையில் சூலத்தையும், வலது பின் கரம் கடக ஹஸ்தத்தில் டமரு, இடது முன் கரம் தொடை மீதும், வலது முன் கரம் அபய முத்திரையிலும் காட்டப்பட்டுள்ளன. காதில் மகர குண்டலம், காட்டப்பட்டுள்ளது. காலம் கி.பி.9,10-ஆம் நூற்றாண்டாகும்.

இந்திராணி

இந்திராணியின் இடது பின் கை கடக ஹஸ்தத்தில் சக்தி படை, வலது பின் கை கடக ஹஸ்தத்தில் அங்குசம், இடது முன் கை தொடை மீது, வலது முன் கை அபய முத்திரையிலும் காட்டப்பட்டுள்ளன. வலது காலை மடக்கியும், இடது காலை தொங்கவிட்டும் பத்மபீடத்தின் மீது சுகாசனத்தில் அமர்ந்துள்ளார். காதில் மகர குண்டலம், மார்புக் கச்சை, காலில் தண்டை உள்ளன. காலம் கி.பி.9,10-ஆம் நூற்றாண்டாகும். பீடத்தின் கீழ் யானை உருவம் காட்டப்பட்டுள்ளது.

வராகி

இவர் வடக்கு நோக்கியவாறு உள்ளார். வராகியின் இடது பின் கை கடக ஹஸ்தத்தில் பாசம், வலது பின் கை கடக ஹஸ்தத்தில்

கலப்பை, வலது முன் கை அபய முத்திரை, இடது முன் கை தொடை மீதும் காட்டப்பட்டுள்ளன. இடது காலை தொங்கவிட்டும், வலது காலை மடக்கியும் அமர்ந்த நிலையில் உள்ளார். பன்றி முகம், மார்புக் கச்சை, காலில் தண்டை காட்டப்பட்டுள்ளன. காலம் கி.பி.9,10-ஆம் நூற்றாண்டாகும். அமர்ந்திருக்கும் பீடத்தின் கீழ் எருமை உள்ளது.

வைஷ்ணவி

இவர் வடக்கு நோக்கியவாறு உள்ளார். இதன் வலது பின் கை கடக ஹஸ்தத்தில் சக்கரம், இடது பின் கை கடக ஹஸ்தத்தில் சங்கு, வலது முன் கை அபய முத்திரை, இடது காலை தொங்க விட்டும், வலது காலை மடக்கியும் பீடத்தின் மேல் அமர்ந்த நிலையில் உள்ளார். காதில் குண்டலம், கழுத்தில் ஆரம், மார்புக் கச்சை, காலில் தண்டை உள்ளன. அமர்ந்திருக்கும் பீடத்தின் கீழ் கருடன் காட்டப்பட்டுள்ளது. காலம் கி.பி.9-10, ஆம் நூற்றாண்டாகும்.

பிராமி

இவர் வடக்கு நோக்கியவாறு உள்ளார். இடது காலை தொங்கவிட்டு, வலது காலை மடக்கி பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் உள்ளார். வலது பின் கை கடக ஹஸ்தத்தில் கெண்டி, வலதுமுன் கை அபயமுத்திரை, இடது முன் கை தொடைமேல் உள்ளது போல் காட்டப்பட்டுள்ளது. தலையில் ஜடா மகுடம், கழுத்தில் ஆரம், மார்புக் கச்சை, மூன்று தலை, வலது கால் பத்ம பீடத்திலும், காலில் தண்டை காட்டப்பட்டுள்ளன. இச்சிற்பம் கி.பி.9,10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

கௌமாரி

இவர் வடக்கு நோக்கியவாறு உள்ளார். இடது பின் கை கடக ஹஸ்தத்தில் வேல், வலது பின் கை கடக ஹஸ்தத்தில் சக்தி, இடது முன் கை தொடை மீது, வலது முன் கை அபய முத்திரையிலும்

காட்டப்பட்டுள்ளன. காதில் பத்ர குண்டலம், கழுத்தில் ஆரம், மார்பில் சன்னவீரம், மார்புக் கச்சை, காலில் தண்டை போன்றவை உள்ளன. அமர்ந்திருக்கும் பீடத்தின் கீழ் முருகனின் வாகனமான மயில் உள்ளது. அமர்ந்த நிலையில் இடது காலை தொங்கவிட்டு, வலது காலை மடக்கியும் உள்ளார். காலம் கி.பி.9,10-ஆம் நூற்றாண்டாகும்.

மகேஸ்வரி

மகேஸ்வரி வடக்கு நோக்கியவாறு இடது பின் கை கடக ஹஸ்தத்தில் சூலம், வலது பின் கை கடக ஹஸ்தத்தில் டமரு, இடது முன் கை தொடை மீது, வலது முன் கை அபய முத்திரையிலும் காட்டப்பட்டுள்ளன. இடது காலை தொங்கவிட்டும், வலது காலை மடக்கியும் பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் உள்ளார். அமர்ந்த நிலையில் நந்தி பீடத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது. காதின் ஒரு பக்கம் பத்ர குண்டலம், மற்றொரு பக்கம் மகர குண்டலம், கழுத்தில் ஆரம், மார்பில் முப்பூரிநூல், மார்புக் கச்சை, இடை ஆடை, காலில் தண்டை போன்றவை காட்டப்பட்டுள்ளன. காலம் கி.பி.9,10-ஆம் நூற்றாண்டாகும்.

வீரபத்திரர்

இவர் கிழக்கு நோக்கியவாறு தன் இடது காலை தொங்கவிட்டவாறும், வலது காலை மடக்கியும் சுகாசனத்தில் அமர்ந்திருக்கிறார். இவரது வலது பின் கரம் கடக ஹஸ்தத்தில் ருத்ராட்ச மாலையும், இடது பின் கரம் கடக ஹஸ்தத்தில் மான், வலது முன் கரம் அபய முத்திரை, இடது முன் கரம் தொடைமீதும் காட்டப்பட்டுள்ளன. வலது காதில் மகர குண்டலம், இடது காதில் பத்ர குண்டலம், கழுத்தில் ஆரம், மார்பில் உதர பந்தம், புரிநூல், இடையில் அரை ஆடை காட்டப்பட்டுள்ளன. வீரபத்திரர் உள்ள பீடத்தின் கீழ் நந்தி இருக்கிறது. காலம் கி.பி.9,10-ஆம் நூற்றாண்டாகும்.

தக்ஷிணாமூர்த்தி

கருவறையின் தெற்குப்புறச் சுவரில் தக்ஷிணாமூர்த்தி வீராசனத்தில், ஆலமரத்தின் கீழே அமர்ந்துள்ளார். கழுத்தில் ருத்ராட்சமாலையும், கையில் கேயூரம், வளையல்கள், தோல் மாலையும் காட்டப்பட்டுள்ளன. மார்பில்புரிநூல், உதரபந்தம் உள்ளது. வலது பின் கரம் கடக ஹஸ்தத்தில் உடுக்கை, இடது பின் கரம் கடக ஹஸ்தத்தில் தீ ஜ்வாலையும், வலது முன் கரம் சின் முத்திரையில் ருத்ராட்சை மாலையும், இடது முன் கரம் புஸ்தக ஹஸ்தத்தில் ஏடும், இடையில் இடைக்கச்சு காட்டப்பட்டுள்ளன. வலது காலை தொங்கவிட்டும், இடது காலை வலது காலின் மேல் வைத்துள்ளார். முயலகன் சிவனின் வலது காலின் அடியில் படுத்துள்ளார். காலில் பாதசரம், முழு நீள தடித்த ஆடையும் உள்ளது. இடது பக்கம் கீழ் நந்தி காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பம் கி.பி.18,19-ஆம் நூற்றாண்டாகும்.

யோக நரசிம்மர் கோயில் சிற்பங்கள்

யோக நரசிம்மர்

பத்ர பீடத்தின் மீது இரண்டு கால்களையும் யோக நிலையில் வைத்து அமர்ந்துள்ளார். காலில் தண்டம், இடையில் கீர்த்தி முக ஆடை, தொடைவரை ஒட்டி உள்ளது. மார்பில் புரிநூல், உதரபந்தம், தோளில் தோள் மாலை, கேயூரம், வாகுவளை, வளையல்கள் காட்டப்பட்டுள்ளன. வலது பின் கரம் கத்தரி ஹஸ்தத்தில் சக்கரம், இடது பின் கரம் கத்திரி ஹஸ்தத்தில் சங்கும், சங்கில் மணிகட்டியுள்ளது. இரு முன் கரங்களும் கால்களின் முட்டிப் பகுதியின் மேல் வைத்துள்ளார். இவருடைய வாய் பிளந்து, கீழ் வாய் மார்போடு ஒட்டியுள்ளது. வாயில் கூர்மையான பற்கள் உள்ளன. பிடரி வயிறு வரையுள்ளது. இச்சிற்பத்திற்கு மீசை காணப்படுகிறது.

வட்டமான பெரிய கண்கள், குறுகலான நெற்றி, நெற்றிபட்டை, தூக்கிய புருவம், சிங்க முகம் ஆக்ரோஷமாக காட்டப்பட்டுள்ளது. தலையில் கரண்ட மகுடம் அணிந்துள்ளார். யோக நரசிம்மர் ஆக்ரோஷத்துடன் பீடத்தின் மீது அமர்ந்துள்ளார். இச்சிற்பம் கி.பி.10,11-ஆம் நூற்றாண்டை சேர்ந்ததாகும்.

ஆண்டாள்

பீடத்தின் மேல் திரிபங்க நிலையில் நின்றுள்ளார். இடையில் இடைக்கச்சும், முழு நீள ஆடை, மார்பில் பூணூல், மார்புக் கச்சும், கழுத்தில் சவடி, சரப்பள்ளி, ஆரம், இரு காதிலும் பத்ம குண்டலம், தோளில் தோள்மாலை, கையில் கேயூரம், கடகம், வளையல்கள் உள்ளன. வலது கரம் கடக ஹஸ்தத்தில் தாமரையும் அதன் மேல் ஆண்டாளை பார்க்கும் கிளி உள்ளது. இடது கரம் லோல ஹஸ்தத்திலும் காட்டப்பட்டுள்ளன. இரு காதிலும் பத்ர குண்டலம் உள்ளது. தலையில் இடது பக்கம் சாய்ந்த கொண்டை உள்ளது. காலம் கி.பி.15,16-ஆம் நூற்றாண்டு.

ராமானுஜர்

இவர் பீடத்தின் மீது அர்த்த பத்மாசனத்தில் அமர்ந்துள்ளார். இடையில் இடைக்கச்சு, மார்பில் பூணூல், கழுத்தில் மணிகளால் ஆன மாலை, இரு கரமும் அஞ்சலி ஹஸ்தத்தில் காட்டப்பட்டுள்ளன. காதுகள் இரண்டும் வலிந்து உள்ளன. தலை மழித்து காட்டப்பட்டுள்ளது. வலது பக்கம் கொடி உள்ளது. காலம் கி.பி.15,16-ஆம் நூற்றாண்டாகும்.

நம்மாழ்வார்

பத்ர பீடத்தின் மீது அர்த்த பத்மாசனத்தில் அமர்ந்துள்ளார். இடையில் இடைக்கச்சு, மார்பில் பூணூல், கழுத்தில் முத்து மாலை,

காட்டப்பட்டுள்ளன. வலது கரம் சின் முத்திரையிலும், இடது கரம் தியான முத்திரையிலும் காட்டப்பட்டுள்ளன. தலையில் இடது பக்கம் சாய்ந்த கொண்டை காட்டப்பட்டுள்ளது. காலம் கி.பி.15,16-ஆம் நூற்றாண்டாகும்.

மணவாள மாமுனிகள்

பாம்பின் மீதுள்ள பத்ர பீடத்தில் அர்த்த பத்மாசனத்தில் அமர்ந்துள்ளார். இடையில் இடைக்கச்சு, மார்பில் பூணூல், கழுத்தில் முத்து மாலை, இரு காதுகளும் நீள் காதாக உள்ளன. வலது தோள் பக்கம் கொடி வைத்துள்ளார். ஐந்து தலை நாகம் படமெடுத்து இவருடைய தலைக்கு மேல் உள்ளது. காலம் கி.பி.15,16-ஆம் நூற்றாண்டாகும்.

ராமர்

பத்ர பீடத்தின் மேல் த்ரிபங்கத்தில் நின்றுள்ளார். இடையில் இடைக்கச்சும், மார்பில் பூணூல், உதரபந்தம், கழுத்தில் ஆரம், தோளில் தோள்மாலை, கையில் கேயூரம், வளையல்கள், இரு காதிலும் மகர குண்டலம் தலையில் கீரிட மகுடம் உள்ளன. வலது கரத்தில் பானம், இடது கரத்தில் வில்லும் வைத்துள்ளார். முதுகில் அம்பறாத்தூணி உள்ளது. காலம் கி.பி.15,16-ஆம் நூற்றாண்டு.

லஷ்மணன்

த்ரிபங்க நிலையில் பத்ர பீடத்தின் மேல் நின்றுள்ளார். இடையில் இடைக்கச்சும், மார்பில் பூணூல், கழுத்தில் ஆரம், இரு காதிலும் மகர குண்டலம், தோளில் தோள் மாலை, கையில் கேயூரம், வளையல்கள், தலையில் கரண்ட மகுடம் காட்டப்பட்டுள்ளன. வலது கரத்தில் பானம், இடது கரத்தில் அம்பு உள்ளன. முதுகில் அம்புறாத்தூணி உள்ளது. காலம் கி.பி.15,16-ஆம் நூற்றாண்டாகும்.

சீதை

பத்ர பீடத்தின் மேல் த்ரிபங்க நிலையில் நின்றுள்ளார். இடையில் இடை கச்சும், முழு நீள ஆடை, கழுத்தில் சவடி, இரு காதிலும் பத்ம குண்டலம், தோளில் தோள் மாலை, கையில் கேயூரம், வளையல்கள், தலையில் கரண்ட மகுடம் காட்டப்பட்டுள்ளன. வலது கரம் கடக ஹஸ்தத்திலும் இடது கரம் லோல ஹஸ்தத்தில் தாழ் கரமாக காட்டப்பட்டுள்ளன. காலம் கி.பி.15,16-ஆம் நூற்றாண்டாகும்.

ஆஞ்சநேயர்

பத்ர பீடத்தின் மீது பணிவோடு நின்றுள்ளார். இடையில் இடை கச்சும், தொடை வரை ஆடை, மார்பில் பூணூல், தோளில் தோள் மாலை, கையில் கேயூரம், வளையல்கள், கழுத்தில் சவடி, இரு காதிலும் பத்ர குண்டலம், தலையில் கீரிட மகுடம் உள்ளன. கரங்கள் அஞ்சலி ஹஸ்தத்தில் உள்ளது. காலம் கி.பி.15,16-ஆம் நூற்றாண்டாகும்.

துவார பாலகர்

பத்ர பீடத்தின் மீது சமபங்கத்தில் நின்றுள்ளார். இடையில் இடைக்கச்சும், வரிவரியான முழு நீள ஆடை, மார்பில் பூணூல், கழுத்தில் சவடி, இரு காதிலும் பத்ர குண்டலம், தோளில் தோள் மாலை, கையில் கேயூரம், வளையல்கள் உள்ளன. வலது பின் கரம் கத்திரி ஹஸ்தத்தில் சக்கரம், இடது பின் கரம் கத்திரி ஹஸ்தத்தில் சங்கு, வலது முன் கரம் கதை மீதும், இடது முன் கரம் தர்ஜினி ஹஸ்தத்திலும் காட்டப்பட்டுள்ளன. தலையில் கிரீட மகுடம் உள்ளது. காலம் கி.பி.15,16-ஆம் நூற்றாண்டாகும்.

இடப்பக்க துவார பாலகர்

பத்ர பீடத்தின் மீது சமபங்கத்தில் நின்றுள்ளார். இடையில் இடைக்கச்சும், வரிவரியான முழு நீள ஆடை, மார்பில் பூணூல், கழுத்தில் சவடி, தோளில் தோள் மாலை, கையில் கேயூரம், வளையங்கள் இரு காதிலும் மகர குண்டலம், தலையில் கிரீட மகுடம் காட்டப்பட்டுள்ளது. வலது பின் கரம் கத்திரி ஹஸ்தத்தில் சக்கரம், இடது பின் கரம் கத்திரி ஹஸ்தத்தில் சங்கும், வலது முன் கரம் தர்ஜினி ஹஸ்தத்திலும், இடது முன் கரம் கதையின் மீதும் உள்ளன. காலம் காலம் கி.பி.15,16-ஆம் நூற்றாண்டாகும்.

அமிர்த பவ வள்ளி

பத்ர பீடத்தின் மேல் அர்த்த பத்மாசனத்தில் கிழக்கு நோக்கி அமர்ந்துள்ளது போல் காட்டப்பட்டுள்ளார். காலில் பாதசரம், இடையில் இடைக்கச்சு, மார்பில் பூணூல், மார்புக் கச்சும், கழுத்தில் சரப்பள்ளி, இரு காதிலும் பத்ம குண்டலம், தோளில் தோள் மாலை, கையில் கேயூரம், வளையல்கள் காட்டப்பட்டுள்ளன. வலது மற்றும் இடது பின் கரம் கடக ஹஸ்தத்தில் தாமரை மலரைப் பிடித்திருப்பது போல் காட்டப்பட்டுள்ளது. வலது முன் கரம் அபய முத்திரையிலும், இடது முன் கரம் வரத முத்திரையிலும் காட்டப்பட்டுள்ளன. தலையில் கரண்ட மகுடம் உள்ளது. காலம் கி.பி.18-ஆம் நூற்றாண்டாகும்.

இ) செப்புத் திருமேனி

இந்தியாவில் செப்புத் திருமேனிகளின் தொடக்கம் சிந்து சமவெளி நாகரீகத்திலேயே ஏற்பட்டுவிட்டது. ஹரப்பாவில் நடன பெண்ணின் சிற்பம் கண்டெடுக்கப்பட்டதனால் இக்கலை அக்காலத்திலேயே தோன்றிவிட்டது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. தமிழகத்தில் இக்கலை சங்ககாலத்திலிருந்தே தோன்றிவிட்டது என்பதற்கு சான்றாக ஆதிச்சநல்லூர் என்ற இடத்தில் அகழாய்வில் தாய்த் தெய்வம் செப்புப்படிமம் கண்டெடுக்கப்பட்டது. இவற்றின் காலத்தை

தொல்லியல் அறிஞர்கள் கி.மு.7-ஆம் நூற்றாண்டு எனக் கூறுகின்றனர். அவற்றில் நாய், கோழி போன்ற உருவங்களும் கிடைத்துள்ளன.

தமிழகத்தில் தலைசிறந்த கலையாக செம்பிலும் கல்லிலும் உருவங்களை வார்க்கும் கலையை 'படிமக்கலை' என்று இத்துறை வல்லூநர்கள் குறிக்கின்றனர்.[6] செப்புத் திருமேனிகள் என்று சொல்லும்பொழுது செம்பு, வெள்ளி, தங்கம் ஆகியவற்றால் செய்யப்பட்ட திருவுருவங்களும் இதில் அடங்கும். இவற்றைப் "பொன் செய் பாவை" என்றும், செப்புத்திருமேனிகள் பஞ்சலோகத்தில் செய்யப்பெற்றவை என்பதால் அவற்றை ஐம்பொன் என்றும் கூறுவர். ஐம்பொன் என்பது வெள்ளி, தங்கம், செம்பு, ஈயம், பித்தளை ஆகியவை கலந்ததாகும்.[7] இச்செப்புத்திருமேனி அல்லது படிமமானது வடமொழியில் பிரதிமா என்றழைக்கப்படுகின்றது.[8] பாவை என்ற சொல்லும் உருவத்தை குறிக்கிறது. பாவை என்று கூறும் வழக்கம், பண்டைய மரபு இலக்கியங்களில் குறிக்கப்படுகிறது.[9]

உயிர்களை காக்கும் இறைவன், மக்களை காக்கும் பொருட்டு திருவீதி உலா வர வேண்டும் என்பது செப்புத் திருமேனிகள் உருவானதற்கான அடிப்படைக் காரணம். செப்புத் திருமேனிகள் கருவறையிலுள்ள மூலவரது உருவம் எத்தகைய சிற்பவமைதியுடன் படைக்கப்பட்டதோ அதே சிற்ப அமைதியுடன் படைக்கப்பட்டது. பொதுவாகத் திருவிழாக்களின் போது தெய்வத் திருவுருவங்களை வீதி உலாவாக எடுத்து வருகின்ற வழக்கம் தொன்று தொட்டு இருந்து வந்திருக்கிறது என்பதை பட்டினப்பாலையின் மூலம் அறிய முடிகிறது.[10]

சிற்ப நூல்களில் செப்புத் திருமேனிகளை செய்வதற்குறிய முறைகள் குறித்து விரிவாகக் கூறப்பட்டுள்ளது. உலோக படிமங்களை

வடிப்பதற்கான செயல்முறையானது ஐந்து நிலைகளை கொண்டது என்று சிற்ப செந்நூல் கூறுகிறது.

1. மெழுகு பிடித்தல், 2. கருக்கட்டுதல், 3. வார்த்தல், 4. வெட்டிராவிச் சீவுதல், 5. தீர்மானம் செய்தல். உலோக படிமங்கள் இரண்டு வகையில் ஒன்று கெட்டியானது மற்றொன்று உள்ளீடற்றது.

இத்தகைய முறைகள் தமிழ்நாட்டில் ஒவ்வொரு உருவத்திற்கும் தனித்தனியாக அச்சுசெய்வதால் இது சிறந்த கலையாக போற்றப்பட்டு வருகிறது. இன்றும் சுவாமிமலை, கும்பகோணம், நாச்சியார் கோயில், பட்டாம்பாக்கம் ஆகிய இடங்களில் செப்புத் திருமேனிகள் வடிக்கும் "வார்ப்புக்கலை" சிறந்து விளங்குகிறது.

சோழர்கால செப்புத் திருமேனிகள் உயரம், கனம், நின்ற கோலம், கிடந்த கோலம் மற்றும் இருந்த கோலமாக இருந்தது என்று அவர்கள் கால செப்பேடுகள் கூறுகின்றன. மேலும் அவர்கள் கால செப்புத் திருமேனிகள் பெரியனவாகவும், முக அமைப்பு மற்றும் உறுப்புகளின் அழகு இயற்கையாக வழங்கப்பட்டது. இச்செப்புத் திருமேனிகள் சோழர்கால ஆடை, அணிகலன்கள் பற்றியும், பழக்க வழக்கங்கள் குறித்தும் எடுத்து காட்டுகின்றன. பல்லவர் காலச் செப்புத் திருமேனிகளுக்கும், ஆதித்தன், பராந்தகன் காலத்தை சார்ந்த சிற்பங்களுக்கும் அதிக வேறுபாடு காணப்படவில்லை. இந்த காலத்தை இடைமாறுபட்ட காலம் (Transitional period) என்று அழைப்பர். சோழர்களின் செப்புத் திருமேனிகளைப் பார்க்கும் பொழுது அவர்கள் காலம் செப்புத் திருமேனிகளின் பொற்காலம் என்று அத்துறை வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

இத்தகைய முறைகளை கையாண்டு செய்யப்பெற்ற செப்புத் திருமேனிகள் வேளச்சேரி தண்டீஸ்வரர் கோயில், செல்லியம்மன் கோயில் மற்றும் யோக நரசிம்மர் கோயிலில் உள்ளது. அச்செப்புத் திருமேனிகளின் அமைதியை இனி காண்போம்.

தண்டீஸ்வரர் கோயில் செப்புத் திருமேனிகள்

பிரதோஷ நாயகர்

ஒரே பத்ர பீடத்தின் மேலுள்ள இரு பத்ம பீடத்தில் சிவனும் பார்வதியும் நின்ற நிலையில் காட்சியளிக்கின்றார்கள். சிவன் சமபங்க நிலையில் காலில் வீரசங்கிலி, இடையில் சிறு அலங்காரத்துடன் உள்ள இடைக்கச்சை தொடை வரையும், மார்பில் இரண்டு பிரிவான பூணூலும், உதர பந்தமும், கழுத்தில் சவடியும், வலக்காது வலிந்த காதாகவும், இடது காதில் பத்ர குண்டலமும், தோளில் தோள் மாலையும், கையில் கேயூரம், கண்டிகை போன்ற ஆபரணங்களை கொண்டு வலது பின் கரத்தில் கத்திரி ஹஸ்தத்தில் மழு, இடது கரத்தில் கத்திரி ஹஸ்தத்தில் மான், வலது முன் கரம் அபய முத்திரையிலும் இடது கரம் வரத முத்திரையிலும், தலையில் ஜடா மகுடம் அணிந்து காட்சியளிக்கிறார்.

பார்வதி த்ரிபங்க நிலையில் பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் நின்றுள்ளார். இவர் வரிவரியான முழு நீள ஆடையும், இடையில் இடைக்கச்சையும், மார்பில் ஸ்தன சூத்திரம், மார்பு கச்சையும், கழுத்தில் சவடி, கையில் கடகம், வளையல்கள் போன்ற அணிகலன்களை அணிந்தவாறு வலது கரத்தில் கடக ஹஸ்தத்தில் நீலோத்பல மலரும், இடது கரம் லோல ஹஸ்தத்திலும், இரு காதிலும் மகர குண்டலமும், தலையில் கரண்ட மகுடம், தோளில் தோள் மாலையுடனும் காட்சி தருகிறார். இதன் காலம் கி.பி.17,18-ஆம் நூற்றாண்டு எனலாம்.

சுகாசனர்

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் இடது காலை மடக்கி வலது காலை தொங்கவிட்டு சுகாசனத்தில் அமர்ந்துள்ளார். இவர் காலில் கழல்கள், வலது கெண்டைக் காலில் வீரசங்கிலி, புலித்தோல் ஆடை தொடை வரையும், இடையில் இடைக்கச்சையும், வயிற்றுக் மேலே உதரபந்தமும், மார்பில் இரண்டு பிரிவான பூணூல், கழுத்தில் சவடி, தோளில் தோள் மாலையும், கையில் கேயுரமும், வளையல்கள் போன்ற அணிகலன்களுடன் வலது பின் கரத்தில் கத்திரி ஹஸ்தத்தில் மழு, இடது கரத்தில் கத்திரி ஹஸ்தத்தில் இறைவனைப் பார்க்கும் மானும், வலது முன் கரம் அபய முத்திரையிலும், இடதுகரம் வரத முத்திரையிலும், இடது காதில் பத்ம குண்டலம், வலது காதில் பத்ர குண்டலமும், தலையில் ஜடா மகுடம் அணிந்து காட்சி தருகிறார். இதன் காலம் கி.பி.17,18-ஆம் நூற்றாண்டு எனலாம்.

பள்ளியறை அம்மன்/பிரியாவிடை

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் வலது காலை மடக்கி, இடது காலை தொங்கவிட்டு சுகாசனத்தில் அமர்ந்துள்ளார் இவர் காலில் கழல்கள், வரிவரியான முழு நீள ஆடையும், இடையில் இடைக்கச்சையும், கழுத்தில் சவடியும், தோளில் தோள் மாலையும், கையில் கேயூரமும், வளையல்களும், இரு காதிலும் பத்ம குண்டலம் போன்ற அணிகலன்களுடன் வலது கரத்தில் சிம்ம கர்ண ஹஸ்தத்தில் நீலோத்பல மலரும், இடது கரம் வரத முத்திரையிலும், தலையில் ஜடா மகுடத்துடன் காட்சியளிக்கிறார். இதன் காலம் கி.பி.17,18-ஆம் நூற்றாண்டு எனலாம்.

சுக்ரவார அம்மன்

ஆறு கோணங்களை கொண்ட பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் த்ரிபங்க நிலையில் சுக்ரவார அம்மன் நின்றுள்ளார். இவர்

முழு நீள வரிவரியான ஆடை, இடையில் இடைக்கச்சை, கழுத்தில் சவடி, முத்து மாலை, தோளில் தோள் மாலை, வாகு வளையம், கையில் கேயூரம், வளையல்கள் போன்ற ஆபரணங்களுடன் வலது கரம் சூசிக ஹஸ்தத்திலும், இடது கரம் வரத முத்திரையிலும், இரு காதிலும் மகர குண்டலமும், தலையில் கரண்ட மகுடத்துடன் உள்ளார். காலம் கி.பி.17,18-ஆம் நூற்றாண்டு எனலாம்.

கந்தன்

சிவனுக்கும் உமைக்கும் இடையே ஆனந்த வடிவான கந்தன் பத்ம பீடத்தின் மேல் குழந்தை வடிவாய் நின்றுள்ளார். இவர் இருகைகளிலும் மலர் மொட்டை பிடித்தவாறு, தலையில் கரண்ட மகுடத்துடனும், இரு காதிலும் மகர குண்டலத்துடனும் காட்சியளிக்கிறார். இதன் காலம் கி.பி.17,18-ஆம் நூற்றாண்டு எனலாம்.

அஸ்திர தேவன்

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் சிறிய தண்டுடன் சூலம் வடிவில் காட்சி தருகிறார். இதன் காலம் கி.பி.17,18-ஆம் நூற்றாண்டு எனலாம்.

உமாசகிதசந்திரசேகர்

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் சந்திரசேகரர் சமபங்கத்தில் நின்றுள்ளார். காலில் பாதசரம், கழல்கள், வலது கெண்டைக்காலில் வீரச்சங்கிலி, புலித்தோல் ஆடை தொடை வரை, இடையில் இடைக்கச்சை, மார்பில் இரண்டு பிரிவான பூணூல், உதரபந்தம், கழுத்தில் சவடி, தோளில் தோள் மாலை, வாகு வளையம் அணிந்து வலது பின் கை கத்திரி ஹஸ்தத்தில் மழு, இடது கை கத்திரி ஹஸ்தத்தில் இறைவனை பார்க்கும் மான், வலது முன் கை அபய முத்திரையிலும், இடது கை வரத முத்திரையிலும், இரு

காதிலும் மகர குண்டலம், தலையில் ஜடா மகுடத்துடனும் காட்டப்பட்டுள்ளார். காலம் கி.பி.17,18-நூற்றாண்டு எனலாம்.

உமா

சந்திரசேகரரின் இடது பக்கம் உமா த்ரிபங்க நிலையில் பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் நின்றுள்ளார். இவர் காலில் பாதசரம், முழு நீள ஆடையும், இடையில் இடைக் கச்சையும், மார்பில் பூணூலும், கழுத்தில் சவடியும், தோளில் தோள் மாலையும், வாகு தண்டம் (வளையம்) கையில் கேயுரம், வளையல்கள் போன்ற ஆபரணங்களை அணிந்தவாறு, வலது கை சிம்ம கர்ண ஹஸ்தத்திலும், இடது கை லோல ஹஸ்தத்திலும், இரு காதிலும் மகர குண்டலம், தலையில் கரண்ட மகுடத்துடனும் காட்சியளிக்கிறார். இதன் காலம் கி.பி.17,18-நூற்றாண்டு எனலாம்.

சுப்பிரமணியர்

நடுவில் சுப்பிரமணியர், வலது பக்கம் வள்ளி, இடது பக்கம் தெய்வானை காட்சிதருகிறார்கள்.

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் சுப்பிரமணியர் சமபங்கத்தில் நின்றுள்ளார். இவர் காலில் பாதசரம், கழல்கள், முழு நீள ஆடையும் இடையில் இடைக்கச்சையும், உதரபந்தமும், மார்பில் இரண்டு பிரிவான பூணூல், கழுத்தில் சவடி, தோளில் தோள் மாலை, வாகுவளையம், கையில் கேயூரம் வளையல்களுடன் வலது பின் கை கத்திரி ஹஸ்தத்தில் வஜ்ரம், இடது கை கத்திரி ஹஸ்தத்தில் சக்தி, வலது முன் கை அபய ஹஸ்தத்திலும், இடது கை வரத ஹஸ்தத்திலும், தலையில் கரண்ட மகுடத்துடன் காட்டப்பட்டுள்ளார்.

தெய்வானை

சுப்பிரமணியரின் இடப்பக்கம் தெய்வானை பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் த்ரிபங்க நிலையில் நின்றுள்ளார். இவர்

காலில் பாதரசம், முழு நீள ஆடை, இடையில் இடைக்கச்சை, மார்பில் பூணூல், கழுத்தில் சவடி, தோளில் தோள் மாலை, வாகு வளையம், கையில் கேயூரம், வளையல்களுடனும் வலது கை கடக ஹஸ்தத்தில் நீலோத்பவ மலரும், இடது கை லோல ஹஸ்தத்திலும், இரு காதிலும் மகர குண்டலும், தலையில் கரண்ட மகுடத்துடன் காட்டப்பட்டுள்ளார்.

வள்ளி

சுப்பிரமணியரின் வலப்பக்கம் பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் வள்ளி த்ரிபங்க நிலையில் நின்றுள்ளார். இவர் காலில் பாதசரம், முழுநீள ஆடை, இடையில் இடைக்கச்சை, மார்பில் பூணூல், மார்புக் கச்சை, கழுத்தில் சவடி, தோளில் தோள் மாலை, வாகு வளையம், கையில் கேயூரம், வளையல்களுடன் வலது கை லோல ஹஸ்தத்திலும், இடது கை கடக ஹஸ்தத்தில் தாமரை மலரையும் பிடித்தவாறும், இரு காதிலும் மகர குண்டலம், தலையில் கரண்ட மகுடத்துடன் காட்டப்பட்டுள்ளார். இதன் காலம் கி.பி.17,18-ஆம் நூற்றாண்டு எனலாம்.

விநாயகர்

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் விநாயகர் சமபங்கத்தில் நின்றுள்ளார். இவர் காலில் பாதசரமும், தொடை வரை ஆடை, இடையில் இடைக்கச்சை, உதரபந்தம், மார்பில் இரண்டு இரண்டு பிரிவான பூணூல், கழுத்தில் சவடி, தோளில் தோள் மாலை, கையில் கேயூரம், வளையல்களுடன் வலது பின் கை கடக ஹஸ்தத்தில் அங்குசம், இடது கை கடக ஹஸ்தத்தில் பாசம், வலது முன் கை கடக ஹஸ்தத்தில் தந்தம், இடது கையில் மோதகம், தும்பிக்கை இடப்பக்கம் வளைந்தும், தலையில் கரண்ட மகுடம் அணிந்தவாறு காட்சி தருகிறார். இதன் காலம் கி.பி.17,18-ஆம் நூற்றாண்டு எனலாம்.

சண்டேஸ்வரர்

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் வலது காலை நேராக ஊன்றியும், இடது காலை சற்று தாங்கியும் த்ரிபங்க நிலையில் நின்றுள்ளார். இவர் முழுநீள ஆடையுடன், இடையில் இடைக்கச்சை, மார்பில் சன்னவீரம், கழுத்தில் சவடி, கையில் கேயூரம், வளையல்களுடன் கையை அஞ்சலி ஹஸ்தத்திலும், காதில் பத்ர குண்டலமும், தலையில் ஜடா மகுடம் அணிந்தும் காட்சி தருகிறார். காலம் கி.பி.19,20-ஆம் நூற்றாண்டு எனலாம்.

சம்பந்தர்

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் வலது காலை நேராக ஊன்றியும், இடது காலை சற்று தாங்கியும் த்ரிபங்க நிலையில் நின்றுள்ளார். இவர் காலில் கழல்கள், வரிவரியான ஆடை தொடை வரையும், இடையில் இடைக்கச்சையும், மார்பில் பூணூலும், கழுத்தில் சவடியும், தோளில் தோள் மாலையும், கையில் கேயூரம், வளையல்களுடன் வலது கை சூசிய ஹஸ்தத்திலும் இடது கையில் பொற்தாளத்தையும், காதில் மகர குண்டலமும், தலையில் கொண்டையுடனும் காட்சி தருகிறார். இதன் காலம் கி.பி.17,18-ஆம் நூற்றாண்டு எனலாம்.

நடராஜர்

அம்பலவானர் சபையில் நடராஜர் பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் படுத்திருக்கும் முயலகன் மீது வலது காலை வைத்தும், இடது காலைத் தூக்கியும் காட்சி தருகிறார். இவர் காலில் பாதசரம், கழல்கள், வலது கெண்டைக் காலில் வீரச்சங்கிலியும், தொடை வரை ஆடையும், இடையில் இடைக்கச்சையும், உதரபந்தமும், மார்பில் இரண்டு பிரிவான பூணூல், கழுத்தில் சவடியும், தோளில் தோள் மாலை, வாகு வளையமும், கையில் கேயூரம், வளையல்களும்,

விரல்களில் மோதிரங்களுடன் வலது பின் கையில் டமருவும், இடது கை பிறைச்சந்திர ஹஸ்தத்தில் தீ சுடரையும் வலது முன் கை அபய ஹஸ்தத்திலும், இடது கை கஜ ஹஸ்தத்திலும், காதில் மகர குண்டலமும், தலையில் விரிசடையும், வலது பக்கம் உள்ள மேல் முடியில் கங்கையும், இடது பக்கம் உள்ள மேல் முடியில் பிறை சந்திரனும், நெற்றியில் நெற்றிக் கண்ணுடன் முன் வலது கையில் இறைவனை பார்க்கும் பாம்புடன் நடராஜர் உள்ளார்.

இவரது காலுக்கு கீழேயுள்ள முயலகன் வலது காலை நீட்டியும் இடது காலை மடக்கியும், வலது கை சூசிக ஹஸ்தத்திலும், இடது கை சிம்ம கர்ண ஹஸ்தத்தில் பாம்பு பிடித்தவாறும் காட்டப்பட்டுள்ளார். நடராஜரை சுற்றி திருவாசி உள்ளது இதன் காலம் கி.பி.17-ஆம் நூற்றாண்டு எனலாம்.

சிவகாமி

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் த்ரிபங்க நிலையில் சிவகாமி நின்றுள்ளார். இவர் காலில் பாதசரம், கழல்கள், முழு நீள ஆடை, இடையில் இடைக்கச்சை, மார்பில் பூணூல், கழுத்தில் சவடி, தோளில் தோள் மாலை, வாகு வளையம், கையில் கேயூரம், வளையல்கள் போன்ற ஆபரணங்களுடன் வலது கை கடக ஹஸ்தத்திலும், இடது கை லோல ஹஸ்தத்திலும், காதில் மகர குண்டலமும், தலையில் கரண்ட மகுடம் அணிந்தவாறு காட்சி தருகிறார். இதன் காலம் கி.பி.17-ஆம் நூற்றாண்டு எனலாம்.

மாணிக்கவாசகர்

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் மணி சூடிய மழித்த தலையுடன் த்ரிபங்க நிலையில் நின்றுள்ளார். இவர் கழுத்தில் சவடியும், காது நீள் காதாகவும், மார்பில் பூணூல், வலது கை சின் முத்திரையில் அக்ஷ்ரமாலையும் இடது கை புஸ்தக ஹஸ்தத்தில்

ஏடும், இடையில் இடைக்கச்சையும், தொடை வரை ஆடை அணிந்தும் காட்சி தருகிறார். இதன் காலம் கி.பி.17-ஆம் நூற்றாண்டு எனலாம்.

செல்லியம்மன் கோயில் செப்புத்திருமேனி

சாமுண்டி

பத்ர பீடத்தின் மேல் வலது காலை மடக்கி இடது காலை தொங்கவிட்டு சுகாசனத்தில் அமர்ந்துள்ளார். இவர் கழுத்தில் சவடி, சரப்பள்ளி, தோளில் தோள் மாலை, வாகு வளையம், கையில் கேயூரம், வளையல்கள் போன்ற அணிகலன்களுடன் இடது பின் கை கடக ஹஸ்தத்தில் சூலத்ததையும், வலது கை கடக ஹஸ்தத்தில் டமருவும், வலது முன் கை அபய முத்திரையிலும், இடது கை தொடை மீதும், இரு காதிலும் மகர குண்டலத்துடன் காட்சி தருகிறார். இதன் காலம் கி.பி.18-ஆம் நூற்றாண்டு எனலாம்.

யோக நரசிம்மர் கோயில் செப்புத்திருமேனி

பக்தவச்சலபெருமாள்

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தின் சமபங்க நிலையில் நான்கு கரங்களுடன் பக்தவச்சல பெருமாள் நின்றநிலையில் காட்சி அளிக்கிறார். இவர் காலில் பாதசரம், முழு நீள ஆடையும், இடையில் இடைக்கச்சையும், உதரபந்தமும், மார்பில் இரண்டு பிரிவான பூணூலும், கழுத்தில் சவடியும், தோளில் தோள் மாலை, வாகு

வளையமும், கையில் கேயூரம், வளையல்களுடன் வலது பின் கை கத்திரி ஹஸ்தத்தில் சக்கரம், இடது கை கத்திரி ஹஸ்தத்தில் சங்கு, வலது முன் கை அபய முத்திரையிலும், இடது கை வரத முத்திரையிலும், இரு காதிலும் மகர குண்டலமும், தலையில் கரண்ட மகுடத்துடன் காட்சி தருகிறார். இதன் காலம் கி.பி.18,19-ஆம் நூற்றாண்டு எனலாம்.

பூதேவி

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் இடது காலை நேராக ஊன்றியும், வலது காலைச் சற்று தாங்கியும் த்ரிபங்க நிலையில் நின்றுள்ளார். இவர் காலில் பாதசரம், கழல்களும், முழு நீள ஆடையும், இடையில் இடைக்கச்சையும், மார்பில் இரண்டு பிரிவான பூணூலும், கழுத்தில் சவடியும் தோளில் தோள் மாலையும், வாகு வளையமும், கையில் கேயூரம், வளையல்களுடன் வலது கை கடக ஹஸ்தத்தில் நீலோத்பவ மலரும், இடது கை லோல ஹஸ்தத்திலும், காதில் மகர குண்டலமும், தலையில் கரண்ட மகுடம் அணிந்தவாறு காட்சி தருகிறார். இதன் காலம் கி.பி.18,19-ஆம் நூற்றாண்டு எனலாம்.

ஸ்ரீதேவி

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் வலது காலை நேராக ஊன்றியும், இடது காலை சற்றுத் தாங்கியும் த்ரிபங்க நிலையில் நின்றுள்ளார். இவர் காலில் பாதசரம், கழல்களும், முழு நீள ஆடையும், இடையில் இடைக்கச்சையும், மார்பில் இரண்டு பிரிவான பூணுலும், மார்புக் கச்சையும், கழுத்தில் சவடியும், தோளில் தோள் மாலையும், வாகு வளையமும், கையில் கேயூரம், வளையல்களுடன் வலது கை லோல ஹஸ்தத்திலும், இடது கை கடக ஹஸ்தத்தில் தாமரையும், இரு காதிலும் மகர குண்டலமும், தலையில் கரண்ட

மகுடத்துடனும் காட்சி தருகிறார். இதன் காலம் கி.பி.18,19-ஆம் நூற்றாண்டு எனலாம்.

ஆண்டாள்

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் இடது காலை நேராக ஊன்றியும், வலது காலை சற்றுத் தாங்கியும் த்ரிபங்க நிலையில் நின்றுள்ளார். இவர் காலில் பாதசரம், வரிவரியான முழுநீள ஆடையும், இடையில் இடைக்கச்சையும், குறங்கு செரியும், மார்பில் பூணூல், மார்புக் கச்சையும், ஸ்தன சூத்திரமும், கழுத்தில் சவடி, சரப்பள்ளியும், ஆரமும், தோளில் தோள் மாலையும், கையில் கேயூரம், கடகம், வளையல்கள் போன்ற அணிகலன்களுடன் வலது கை சிம்ம கர்ண ஹஸ்தத்தில் தாமரையை பிடித்தவாறும், அத்தாமரையின் மேல் ஆண்டாளை பார்க்கும் கிளியும், இடது கை லோல ஹஸ்தமும், வலது காதில் மகர குண்டலமும், இடது காதில் பத்ம குண்டலமும், தலையில் இடப்பக்கம் சாய்ந்துள்ள கொண்டையுடனும் காட்சி தருகிறார். இதன் காலம் கி.ப.18,19-ஆம் நூற்றாண்டு எனலாம்.

செல்வர் தீர்த்தவாரி பெருமாள்

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் நான்கு கரங்களுடன் சமபங்கத்தில் நின்றுள்ளார். இவர் காலில் பாதசரமும், வரிவரியான முழு நீள ஆடையும், இடையில் இடைக்கச்சையும், உதரபந்தமும், மார்பில் இரண்டு பிரிவான பூணூலும், கழுத்தில் சவடியும், தோளில் தோள் மாலையும், வாகு வளையமும், கையில் கேயூரமும், கடகம், வளையல்கள் போன்ற ஆபரணங்கள் அணிந்தவாறு, வலது பின் கை கத்திரி ஹஸ்தத்தில் சக்கரமும், இடது கை கத்திரி ஹஸ்தத்தில் சங்கும், வலது முன் கை அபய ஹஸ்தத்திலும், இடது கை கதையின் மீதும், காதில் மகர குண்டலமும், தலையில் கரண்ட மகுடத்துடன்

காட்சி தருகிறார். இதன் காலம் கி.பி.19,20-ஆம் நூற்றாண்டு எனலாம்.

லஷ்மி நரசிசம்மர்

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் இடது காலை மடக்கி வலது காலை தொங்கவிட்டு சுகாசனத்தில் அமர்ந்துள்ளார். இவருடைய இடது கால் தொடையின் மீது லஷ்மி அமர்ந்துள்ளார். நரசிம்மரின் வலது பாதம் மலர்ந்த தாமரை மீதும், காலில் பாதசரமும், அலங்காரமான முழு நீள ஆடையும், இடையில் இடைக்கச்சையும், மார்பில் பூணூலும், தோளில் தோள் மாலையும், வாகு வளையமும், கையில் கேயூரம், வளையல்களும், இடுப்பின் பின்புறக் பஞ்ச கச்சமும், அணிந்து வலது பின் கை கத்திரி ஹஸ்தத்தில் சக்கரம், இடது கை கத்திரி ஹஸ்தத்தில் சங்கும், வலது முன் கை அபய முத்திரையிலும், இடது கை லஷ்மியை பிடித்தவாறும், பிடரி மார்பு வரையும், கூர்மையான பற்களும், பெரிய உருண்டையான கண்களும், தலையில் கரண்ட மகுடமும், பின்னால் சிரச்சக்கரத்துடன் உள்ளார்.

நரசிம்மரின் இடது தொடையில் அமர்ந்திருக்கும் லஷ்மியின் பாதங்கள் தாமரை தண்டின் மீதும், காலில் பாதசரமும், அலங்காரமான முழு நீள ஆடையும், இடையில் இடைக் கச்சையும், மார்புக் கச்சையும், கழுத்தில் சவடி, தோளில் தோள் மாலை, கையில் கேயூரம், வளையல்களுடன் இடது கை கடக ஹஸ்தத்தில் தாமரை மொட்டையும், வலது கை நரசிம்மரை பிடித்தவாறும், காதில் மகர குண்டலம், தலையில் கரண்ட மகுடம் அணிந்து காட்சி தருகிறார். இதன் காலம் கி.பி.17,18-ஆம் நூற்றாண்டு எனலாம்.

வேத நாராயணப் பெருமாள்

பத்ர பீடத்தின் மேல் சமபங்கத்தில் நான்கு கைகளுடன் நின்றுள்ளார். இவர் காலில் கழல்கள், தடித்த முழு நீள வரிவரியான ஆடையும், இடையில் கீர்த்தி முக ஆடை, உதர பந்தமும், மார்பில் மூன்று பிரிவான பூணூலும் அதில் பிரம்ம முடிச்சும், கழுத்தில் சவடியும், தோளில் தோள் மாலையும், கையில் கேயூரம், வளையல்களும் அணிந்தவாறு, வலது பின் கை கத்திரி ஹஸ்தத்தில் பிரயோக சக்கரமும், இடது கை கத்திரி ஹஸ்தத்தில் சங்கும், வலது முன் கை அபய முத்திரையிலும், இடது கை கட்டிய வலம்பித ஹஸ்தமும், காதில் மகர குண்டலமும், தலையில் ராஜ மகுடத்துடன் காட்சி தருகிறார். இதன் காலம் கி.பி.10,11-ஆம் நூற்றாண்டு எனலாம்.

நம்மாழ்வார்

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் அர்த்த பத்மாசனத்தில் அமர்ந்துள்ளார். இவர் வரிவரியான முழு நீள ஆடையும், இடையில் இடைக் கச்சையும், மார்பில் பூணூல், கழுத்தில் முத்து மாலையும், கையில் வளையல்களுடன் வலது கை சின் முத்திரையிலும், இடது கை தியான முத்திரையிலும், காதில் மகர குண்டலமும், தலையில் இடது பக்கம் சாய்ந்த கொண்டையுடன் காட்சி தருகிறார். இதன் காலம் கி.பி.18,19-ஆம் நூற்றாண்டு எனலாம்.

கலியன்/திருமங்கை ஆழ்வார்

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் த்ரிபங்க நிலையில் மணிமாலை சூடிய மழித்த தலையுடன் நின்றுள்ளார். இவர் காதுகள் வலிந்ததாகவும், தோளில் தோள் மாலையும், வாகு வளையமும், கையில் கேயூரமும், மூன்று பிரிவான பூணூலும், உதர பந்தம் அணிந்து, கைகள் அஞ்சலி ஹஸ்தத்துடன் காட்சி தருகிறார். வலப்பக்க தோளில் சாய்ந்த தண்டம் உள்ளது. இது கி.பி.19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

மணவாள மாமுனிகள்

பாம்பின் மேலுள்ள பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் அர்த்த பத்மாசனத்தில் மழித்த தலையுடன் அமர்ந்துள்ளார். இவர் வரிவரியான முழு நீள ஆடையும், இடையில் இடைக்கச்சையும், மார்பில் பூணூலும், கழுத்தில் முத்து மாலையும் அணிந்து கைகளை அஞ்சலி ஹஸ்தத்திலும், காதுகள் நீள் காதாகவும் கொண்டு காட்சி தருகிறார். வலப்பக்க தோளில் சாய்ந்த கொடியும், தலைக்கு மேலே ஐந்து தலை கொண்ட பாம்பு படமெடுத்து உள்ளது. இதன் காலம் கி.பி.18,19-ஆம் நூற்றாண்டு எனலாம்.

இராமானுஜர்

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் மழித்த தலையுடன் அர்த்த பத்மாசனத்தில் அமர்ந்துள்ளார். இவர் முழு நீள ஆடையும், இடையில் இடைக்கச்சையும், மார்பில் பூணூல், கழுத்தில் மணி மாலையும், காது வலிந்ததாகவும், கையை அஞ்சலி ஹஸ்தத்தில் வைத்து காட்சி தருகிறார். வலப்பக்கம் தோளில் சாய்ந்த கொடி உள்ளது. இதன் காலம் கி.பி.18,19-ஆம் நூற்றாண்டு எனலாம்.

அமிர்தவள்ளி

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் அர்த்த பத்மாசனத்தில் அமர்ந்த நிலையில் காலில் பாதசரமும், வரிவரியான முழுநீள ஆடையும், இடையில் இடைக்கச்சையும், மார்பில் பூணூலும், மார்புக் கச்சையும், கழுத்தில் சவடியும், தோளில் தோள் மாலையும், வாகுவளையமும், கையில் வளையல்களுடன் வலது பின் கை மற்றும் இடது கை கடக ஹஸ்தத்தில் தாமரை மலர்களை பிடித்தவாறும், வலது முன் கை அபய முத்திரையும், இடது கை வரத முத்திரையும், காதில் பத்ர குண்டலமும், தலையில் கரண்ட மகுடம் அணிந்து காட்சி தருகிறார். இதன் காலம் கி.பி.19-ஆம் நூற்றாண்டு எனலாம்.

விஸ்வக்சேனர்

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் நான்கு கரங்களுடன் சமபங்கத்தில் நின்றுள்ளார். இவர் காலில் பாதசரமும், வரிவரியான முழு நீள ஆடையும், இடையில் இடைக்கச்சையும், உதரபந்தமும், மார்பில் இரண்டு பிரிவான பூணூலும், கழுத்தில் சரப்பள்ளியும், தோளில் தோள் மாலையும், வாகு தண்டம் (வளையம்), கையில் கேயூரமும், கடகம், வளையல்களுடன், வலது பின் கை கத்திரி ஹஸ்தத்தில் சக்கரம், இடது கை கத்திரி ஹஸ்தத்தில் சங்கும், வலது முன் கை சூசிக ஹஸ்தத்திலும், இடது கை கதையின் மீதும் உள்ளது. இரு காதிலும் மகர குண்டலமும், தலையில் கிரீட மகுடத்துடன் காட்சி தருகிறார். இதன் காலம் கி.பி.19-ஆம் நூற்றாண்டு எனலாம்.

இராமர்

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் வலது காலை நேராக ஊன்றியும், இடது காலை சற்று தாங்கியும் த்ரிபங்க நிலையில் நின்றுள்ளார். இவர் காலில் பாதசரமும், தொடைவரை வரிவரியான ஆடையும், உதர பந்தமும், மார்பில் இரண்டு பிரிவான பூணூலும், கழுத்தில் முத்து மாலையும், தோளில் தோள் மாலையும், கையில் கேயூரம், வளையல்களுடன் வலது கை சிம்ம கர்ண ஹஸ்தத்தில் பாணம், இடது கை சிம்ம கர்ண ஹஸ்தத்தில் வில்லுடன், காதில் மகர குண்டலமும், தலையில் கரண்ட மகுடம் அணிந்தவாறு காட்சியளிக்கிறார். இதன் காலம் கி.பி.19-ஆம் நூற்றாண்டு எனலாம்.

லஷ்மணன்

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் வலது காலை நேராக ஊன்றியும், இடது காலை சற்று தாங்கியும், த்ரிபங்க நிலையில் நின்றுள்ளார். இவர் காலில் பாதசரமும், தொடை வரை வரிவரியான ஆடையும், இடையில் இடைக்கச்சையும், உதரபந்தமும், மார்பில்

இரண்டு பிரிவான பூணூலும், கழுத்தில் முத்து மாலையும், தோளில் தோள் மாலையும், கையில் கேயூரமும், வளையல்களுடன் வலது கை சிம்ம கர்ண ஹஸ்தத்தில் அம்பும், இடது கை சிம்ம கர்ண ஹஸ்தத்தில் வில்லும், காதில் மகர குண்டலமும், தலையில் கரண்ட மகுடம் அணிந்தவாறு காட்சியளிக்கிறார். இதன் காலம் கி.பி.19-ஆம் நூற்றாண்டு எனலாம்.

சீதை

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் வலது காலை நேராக ஊன்றியும், இடது காலை சற்று தாங்கியும் த்ரிபங்க நிலையில் நின்றுள்ளார். இவர் காலில் பாதசரமும், வரிவரியான முழுநீள ஆடையும், இடையில் இடைக்கச்சையும், மார்பில் பூணூலும், கழுத்தில் சரப்பள்ளியும், தோளில் தோள் மாலையும், கையில் கேயூரமும், வளையல்கள் போன்ற அணிகலன்கள் அணிந்து வலது கை லோல ஹஸ்தத்திலும், இடது கை கடக ஹஸ்தத்தில் தாமரையும், காதில் மகர குண்டலமும், தலையில் கரண்ட மகுடத்துடன் காட்சியளிக்கிறார். இதன் காலம் கி.பி.19-ஆம் நூற்றாண்டு எனலாம்.

அனுமன்

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் த்ரிபங்க நிலையில் நின்றுள்ளார். இவர் காலில் பாதசரமும், அலங்காரமான தொடை வரை ஆடையும், இடையில் இடைக்கச்சையும் மார்பில் பூணூலும், கழுத்தில் சவடியும், தோளில் தோள் மாலையும், கையில் கேயூரம், வளையல்களுடன் கையை அஞ்சலி ஹஸ்தத்திலும், தலையில் சிறிய மகுடம் அணிந்தவாறு காட்சி அளிக்கிறார். இதன் காலம் கி.பி.19-ஆம் நூற்றாண்டு எனலாம்.

அடிக்குறிப்புகள்

1. அம்பை மணிவண்ணன், “கோயில் ஆய்வும் நெறிமுறைகளும்”, ப.125.
2. மேலது பக்.125-126.
3. மேலது பக்.126.
4. மேலது பக்.126.
5. மேலது பக்.126-127.
6. நடன காசிநாதன், தமிழர் நாகரிகம் ப.46.
7. மேலது ப.46.
8. மேலது ப.46.
9. மேலது ப.46.
10. மேலது ப.48.
11. வீ. மலர்விழி, சோழர் கால கட்டடக் கலையும் சிற்ப கலையும், பக்.97-98.

கல்வெட்டுச் செய்திகள்

ஊர் அமைப்பு

வேளச்சேரியில் தண்டீஸ்வரர் கோயிலில் 14 கல்வெட்டுகளும், செல்லியம்மன் கோயிலில் 12 கல்வெட்டுகளும் ஆக மொத்தம் 16 கல்வெட்டுகள் 1911 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பெற்று கல்வெட்டு ஆண்டு அறிக்கையில் வெளியிடப்பெற்றது.

இவ்வணைத்துக் கல்வெட்டுகளும் தமிழ் எழுத்திலேயே எழுதப்பட்டு இடை இடையே கிரந்த எழுத்தும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சோழர் கல்வெட்டுக்கள்

'மதிரை கொண்ட இராசகேசரி' என்னும் பட்டப் பெயர் புனைந்த இரண்டாம் பராந்தகன் காலக் கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. 'பரகேசரி' என்னும் பட்டப் பெயர் புனைந்த ஆதித்த கரிகாலன் காலக் கல்வெட்டு ஒன்று உள்ளது. 'கொவிராஜராஜகேசரி மும்முடிசோழன்' என்னும் பட்டப்பெயர் புனைந்த முதலாம் இராசேந்திரன் காலக்கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. 'கோப்பரகேசரிவர்மன்' என்னும் பட்டப பெயர் புனைந்த முதலாம் இராசேந்திரன் காலக் கல்வெட்டுகள் ஐந்து உள்ளன. 'திரிபுவனச் சக்கரவர்த்தி' என்னும் பட்டப் பெயருடன இரண்டாம் இராசராசன் காலக் கல்வெட்டு ஒன்று உள்ளது. 'திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் பாண்டியன் முடிதலையும் கொண்டருளிய' என்னும் பட்டப்பெயருடன் மூன்றாம் குலோத்துங்கன் காலக் கல்வெட்டுகள் இரண்டும் உள்ளன. 'திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ

தேவர்க்கு' என்னும் பட்டப் பெயருடன் மூன்றாம் இராசராசன் காலக் கல்வெட்டு ஒன்று உள்ளது.

குறுநில மன்னர்களின் கல்வெட்டுகள்

தொண்டை நாட்டு சிற்றரசன் பார்த்திவேந்திரதவர்மன் காலக் கல்வெட்டு ஒன்றும், இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் காலக் கல்வெட்டு ஒன்றும் உள்ளது.

செல்லியம்மன் கோயிலில் கல்வெட்டுகள் உள்ள இடங்கள்

பார்த்திவேந்திராதிபதிவர்மன் மற்றும் ஆதித்த கரிகாலன் கல்வெட்டுகள் செல்லியம்மன் கோயிலின் தெற்குபுறச் சுவரில் உள்ளன. (A.R.E.316,317)

தண்டீஸ்வரர் கோயிலில் கல்வெட்டுகள் உள்ள இடங்கள்

இரண்டாம் பராந்தகன் காலக் கல்வெட்டுகள் கருவறையின் தெற்குபுறச் சுவரில் ஒன்றும் கருவறையின் மேற்குபுறச் சுவரில் ஒன்றும் ஆக மொத்தம் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. (A.R.E.315,306)

இரண்டாம் இராசராசன் காலக் கல்வெட்டுகள் கருவறையின் வடக்குபுறச் சுவரில் ஒன்றும், (A.R.E.304), கருவறையின் தெற்கு புறச்சுவரில் ஒன்றும் (A.R.E.312) ஆக மொத்தம் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன.

முதலாம் இராசேந்திரன் காலக் கல்வெட்டுகள் கருவறையின் மேற்குபுறச் சுவரில் இரண்டும் (A.R.E.308,309), கருவறையின் வடக்குபுறச் சுவரில் ஒன்றும் (A.R.E.302) கருவறையின் மேற்கு மற்றும் தெற்குபுறச் சுவரில் ஒன்றும் (A.R.E.311) கருவறையின்

வடக்கு, மேற்கு மற்றும் தெற்குபுறச் சுவரில் ஒன்றும் (A.R.E.305) ஆக மொத்தம் ஐந்து கல்வெட்டுகள் உள்ளன.

இரண்டாம் இராசராசன் காலக் கல்வெட்டு கருவறையின் மேற்குபுறச் சுவரில் ஒன்று உள்ளது. (A.R.E.307)

மூன்றாம் குலோத்துங்கன் காலக் கல்வெட்டுகள் கருவறையின் வடக்கு புறச் சுவரில் ஒன்றும் (A.R.E.303) கருவறையின் மேற்குபுறச் சுவரில் ஒன்றும் (A.R.E.310) ஆக மொத்தம் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன.

மூன்றாம் இராசராசன் காலக் கல்வெட்டு கருவறையின் தெற்குபுறச் சுவரில் ஒன்று உள்ளது

குறுநில மன்னனாகிய இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் காலக் கல்வெட்டு கருவறையின் தெற்குபுறச் சுவரில் ஒன்று உள்ளது. (A.R.E.314)

சிதைந்துள்ள கல்வெட்டு

தண்டீஸ்வரர் கோயில் கருவறையின் மேற்கு மற்றும் தெற்குபுறச் சுவர்களில் முதலாம் இராசேந்திர சோழனின் ஆறாவது ஆட்சி ஆண்டு (கி.பி.1018) காலக் கல்வெட்டு ஒன்று சிதைந்துள்ளது. (A.R.E.311)

முற்றுபெறாத கல்வெட்டு

செல்லியம்மன் கோயில் கருவறையின் தெற்குபுறச் சுவரில் பரகேசரி என்னும் பட்டப்பெயர் புனைந்த ஆதித்த கரிகாலன் நான்காவது ஆட்சி ஆண்டு (கி.பி.967) காலக் கல்வெட்டு ஒன்று முழுமை அடையாமல் உள்ளது. (A.R.E.317)

1. **A.R.E. No** : 315

அரசு : சோழர்

மன்னர் : இரண்டாம் பராந்தகன் (கி.பி.957-970)

ஆட்சி ஆண்டு : 5 (கி.பி.962)

கோயில் : தண்டீஸ்வரர் கோயில்

செய்தி : வெளிச்சேரி ஆளுங்கணத்தார் திருத்தண்டீஸ்வரதேவர் கோயிலில் நந்தா விளக்கெரிக்க 90 சாவாமூவா பேராடுகளை தானமாக அளித்துள்ளார்.

2. **A.R.E. No** : 306

அரசு : சோழர்

மன்னர் : இரண்டாம் பராந்தகன் (கி.பி.957-970)

ஆட்சி ஆண்டு : 7 (கி.பி.964)

கோயில் : தண்டீஸ்வரர் கோயில்

செய்தி : சோணாட்டில் ஆற்காட்டு கூற்றத்தில் இருக்கும் இருவர் வெளச்சேரி ஊர் சபையோரிடம் நிலத்தை வாங்கி திருத்தண்டீஸ்வரத்து மகாதேவர்க்கு நந்தி விளக்கெரிக்கவும், இவ்வாலயத்தின் உள்ளே இவர்கள் பிரதிஷ்டை செய்த கணபதிக்கு திருவமிர்து காட்டவும் அந்நிலத்தை தானமாக அளித்துள்ளார்.

3. A.R.E. No : 316

அரசு : பல்லவ சிற்றரசன்

மன்னர் : கோப்பார்த்திவேந்திராதிபதிவர்மன் (கி.பி.956-969)

ஆட்சி ஆண்டு : 10 (கி.பி.966)

கோயில் : செல்லியம்மன் கோயில்

செய்தி : சோழ நாட்டின் உட்பிரிவான மழநாட்டில் உள்ள திருவேட்பூர் கிராமத்தில் வசிக்கும் திருவேட்பூருடையான் தேவடிகள் சப்த மாத்ருக்களுக்கு திருவமிர்து படைக்க நிலம் தானமாக அளித்துள்ளனர். இக்கல்வெட்டியவர் காளியபட்டர்.

4. A.R.E. No : 317

அரசு : சோழர்

மன்னர் : ஆதித்த கரிகாலன் (கி.பி.963-969)

ஆட்சி ஆண்டு : 4 (கி.பி.967)

கோயில் : செல்லியம்மன் கோயில்

செய்தி : புலியூர் கோட்டம் வெளிச்சேரியில் உள்ள ஊர் சபையோர் காளாபடாரி கோயிலுக்கு ஒரு நந்தா விளக்கெரிக்கவும் இரண்டு திருவமிர்துக்கும் சேர்த்து நிலம் தானமாக அளித்துள்ளனர்.

5. A.R.E. No : 312

அரசு : சோழர்

மன்னர் : முதலாம் இராசராசன் (கி.பி.985-11012)

ஆட்சி ஆண்டு : 9 (கி.பி.994)

கோயில் : தண்டீஸ்வரர் கோயில்

செய்தி : வெளிச்சேரி ஆளுங்கணத்தார் தண்டீஸ்வரத்து திருக்கற்றளி மகாதேவர்க்கு சந்திரன் சூரியன் உள்ளவரை ஒரு நந்தாவிளக்கெரிக்க 90 சாவா மூவா பேராடுகளை தானமாக அளித்தார்.

6. A.R.E. No : 304

அரசு : சோழர்

மன்னர் : முதலாம் இராசராசன் (கி.பி.985-1012)

ஆட்சி ஆண்டு : 10 (கி.பி.995)

கோயில் : தண்டீஸ்வரர் கோயில்

செய்தி : சோணாட்டில் கிழார் கூற்றத்தில் வைகூர்ச்சேரியில் வசிக்கும் அமுதன் பிச்சன் என்கிற செம்பியன் கிழா நாட்டுக்கோன் வெளிச்சேரி கிராமத்தில் இருக்கும் தரமணி மகாதேவர்க்கு திருவமிர்துகள் படைக்கவும், சந்தி விளக்கெரிக்கவும் நிலம் தானமாக அளித்தார்.

7. A.R.E. No : 308

அரசு : சோழர்

மன்னர் : முதலாம் இராசேந்திரன்(கி.பி.1012-1012)

ஆட்சி ஆண்டு : 3 (கி.பி.1015)

கோயில் : தண்டீஸ்வரர் கோயில்

செய்தி : வெளிச்சேரி ஆளுங்கணத்தாராண பத்தங்கி காலகுமார கிரமவித்தன் திருத்தண்டீஸ்வர தேவர்க்கு ஒரு நந்தா விளக்கெரிக்க 90 சாவா மூவா பேராடுகளை தானமாக அளித்துள்ளான்.

8. A.R.E. No : 309

அரசு : சோழர்

மன்னர் : முதலாம் இராசேந்திரன் (கி.பி.1012-1044)

ஆட்சி ஆண்டு : 3 (கி.பி.1015)

கோயில் : தண்டீஸ்வரர் கோயில்

செய்தி : வெசாலிப்பாடியில் உள்ள ஆற்றூர் கிராமத்தை சேர்ந்த மாணிக்கன் என்பவன் திருத்தண்டீஸ்வரத்து மகாதேவர்க்கு சந்திரன் சூரியன் உள்ள வரை ஒரு சந்தி விளக்கெரிக்க 90 சாவா மூவா பேராடுகளை தானமாக அளித்துள்ளான்.

9. A.R.E. No : 302

அரசு : சோழர்

மன்னர் : முதலாம் இராசேந்திரன் (கி.பி.1012-1044)

ஆட்சி ஆண்டு : 6 (கி.பி.1018)

கோயில் : தண்டீஸ்வரர் கோயில்

செய்தி : வெளிச்சேரி ஆளுங்கணத்தார் ஒருவரின் மனைவி திருத்தண்டீஸ்வரமுடைய மகாதேவர்க்கு ஒரு சந்தி விளக்கெரிக்க 90 சாவா மூவா பேராடுகளை தானமாக அளித்தார்.

10. A.R.E. No : 311 (சிதைவு)

அரசு : சோழர்

மன்னர் : முதலாம் இராசேந்திரன் (கி.பி.1012-1044)

ஆட்சி ஆண்டு : 6 (கி.பி.1018)

கோயில் : தண்டீஸ்வரர் கோயில்

செய்தி : வெளிச்சேரியில் உள்ள பிராமணர் அல்லாதோர் மன்னரின் அனுமதியுடன் நிலத்தை கோயிலுக்கு விற்றனர்.

11. A.R.E. No : 305

அரசு : சோழர்

மன்னர் : முதலாம் இராசேந்திரன் (கி.பி.1012-1044)

ஆட்சி ஆண்டு : 10 (கி.பி.1022)

கோயில் : தண்டீஸ்வரர் கோயில்

செய்தி : வெளிச்சேரி சபையோர் 1500 குழி நிலத்தை திருத்தண்டீஸ்வரமுடைய மகாதேவர் ஆலயத்திற்கு விற்று 12 காசு பெற்றனர். அந்நிலம் இறையிலியாக மாற்றப்பட்டது. பிராமண பெண்மணி ஒருவள் திருத்தண்டீஸ்வரமுடைய மகாதேவர் ஆலயத்தில் ஒரு நந்தா விளக்கெரிக்க 23 காசு தானமளித்துள்ளாள்.

12. A.R.E. No : 307

அரசு : சோழர்

மன்னர் : முதலாம் இராசராசன் (கி.பி.1146-1163)

ஆட்சி ஆண்டு : 7 (கி.பி.1153)

கோயில் : தண்டீஸ்வரர் கோயில்

செய்தி : வெளிச்சேரியை சேர்ந்த கரணத்தார் திருத்தண்டீஸ்வரமுடைய நாயனார்க்கு இரண்டு சந்தி விளக்கெரிக்க பழங்காசு தானமாக அளித்துள்ளனர்.

13. A.R.E. No : 303

அரசு : சோழர்

மன்னர் : மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1178-1218)

ஆட்சி ஆண்டு : 25 (கி.பி.1203)

கோயில் : தண்டீஸ்வரர் கோயில்

செய்தி : திருவான்மியூரில் உள்ள திருநாவுக்கரசு மடத்திற்கு சேதிராய தேவர் வெளிச்சேரியில் உள்ள நிலத்தை தானமளித்தார். இந்நிலம் இறையிலி நிலமாகும். உத்தமபிரியன் கையொப்பம் உள்ளது.

14. A.R.E. No : 310

அரசு : சோழர்

மன்னர் : மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1178-1218)

ஆட்சி ஆண்டு : 25 (கி.பி.1203)

கோயில் : தண்டீஸ்வரர் கோயில்

செய்தி : திருத்தண்டீஸ்வரமுடைய மகாதேவர் ஆலயத்தில் சூரியன் சந்திரன் உள்ள காலம் வரை இரு சந்தி விளக்கெரிக்க காசு தானமாக அளித்தனர்.

15. A.R.E. No : 313

அரசு : சோழர்

மன்னர்	:	மூன்றாம் இராசராசன் (கி.பி.1216-1256)
ஆட்சி ஆண்டு	:	22 (கி.பி.1238)
கோயில்	:	தண்டீஸ்வரர் கோயில்
செய்தி	:	வெளிச்சேரியை சேர்ந்த கரணத்தார் திருத்தண்டீஸ்வரமுடைய ஆலயத்தில் விக்கிரம ஆழ்வாந்பிள்ளை என்பவனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட திருச்சிற்றம்பலமுடையார்க்கு ஒரு சந்தி விளக்கெரிக்க 1 மாடை புதுக்காசில் 450ஐ தானமாக அளித்தார்.

16. A.R.E. No : 314

அரசு	:	பல்லவர்
மன்னர்	:	இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் (கி.பி.1243-1279)
ஆட்சி ஆண்டு	:	18 (கி.பி.261)
கோயில்	:	தண்டீஸ்வரர் கோயில்
செய்தி	:	கீரங்குடியை சேர்ந்த மருதுடையான் சோறன் அரியாயனென் என்பவர் திருத்தண்டீஸ்வரமுடைய நாயனார்க்கு ஒரு சந்தி (7 நாழிகை) விளக்கெரிக்க ஒன்பது பணம் தானமாக அளித்துள்ளார்.

அ) அரசியல் வரலாறு

இரண்டாம் பராந்தகன் முதல் மூன்றாம் இராசராசன் வரை ஏழு சோழ அரசர்களும் இரண்டு குறுநில மன்னனாகிய பார்த்திவேந்திராதிபதிவர்மனும் கோப்பெருஞ்சிங்கனும் வேளச்சேரி தண்டீஸ்வரர் மற்றும் செல்லியம்மன் கோயில் கல்வெட்டுகளில் இடம் பெறுகின்றனர். அம்மன்னர்களின் வரலாற்றை இத்தலைப்பில் காணலாம்.

இரண்டாம் பராந்தகன் (கி.பி.957 - 970)

அரிஞ்சயனுக்கு மகனாக பிறந்த இரண்டாம் பராந்தகன் என அழைக்கப்பெற்ற சுந்தரசோழன் கி.பி. 957-இல் சோழ இராச்சியத்திற்குச் சக்கரவர்த்தியாக முடிசூட்டப்பெற்றான்.

பட்டப் பெயர்கள்

'மதுரை கொண்ட கோ இராசகேசரிவர்மன்'[1], 'பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள் ஸ்ரீசுந்தர சோழ தேவர்'[2], 'மதுராந்தகன் சுந்தர சோழன்'[3], 'மேதகு நந்திபுரி மன்னர் சுந்தர சோழன்'[4], 'பழையாறை நகரச் சுந்தர சோழன்'[5], 'பென்மாளிகைத் துஞ்சின தேவர்'[6].

அரசியல் நிலை

சோழ மன்னர்கள் மாறிமாறி புனைந்து கொண்ட இரு பட்டங்களில் ஒன்றான 'இராசகேசரி' என்ற பட்டமுடையவன் இவன்.

முதல் பராந்தகன் ஆட்சிக்குட்பட்டுப் பிரிந்து சென்று பாண்டிய நாட்டை மீண்டும் கைப்பற்றும் பொருட்டு, அப்போது மதுரை மாநகரில் ஆட்சி புரிந்து வந்த இராசசிம்மனின் மகன் வீர பாண்டியனுடன் போர் செய்தான். வீரபாண்டியன் கல்வெட்டுகளில்

''சோழன் தலைக்கொண்ட கோவீரபாண்டியன்'' என்று கூறப்பட்டுள்ளன.[7]

சேவூர் என்னுமிடத்தில் சுந்தரசோழருக்கும் வீர பாண்டியருக்கும் பெரும்போர் நடைபெற்றது. அப்போரில் சுந்தர சோழனே வெற்றி எய்தினான். தோல்வியுற்றுப் புறங்காட்டியோடிய பாண்டிய மன்னன் சுரம் புகுந்து ஒளிந்து கொண்டான். அது பற்றியே சுந்தரசோழன் 'பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள்' என்ற வழங்கப்பெற்றனன்.[8]

இவனுடைய ஐந்தாம் ஆட்சி ஆண்டு கல்வெட்டுகள் இவனை 'மதுரை கொண்ட கோ இராசகேசரிவர்மன்' என்று கூறுவதால் சேவூர்ப் போர் கி.பி.962-ஆம் ஆண்டில் நடைபெற்றிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது.[9]

பராந்தகன் கொடும்பாளூர் குறுநில மன்னன் சிறிய வேளான் என்பவனை பெரும்படையுடன் கி.பி.965-இல் ஈழத்திற்கு அனுப்பினான். ஈழத்துப்பட்ட கொடும்பாளூர் வேளான் சிறிய வேளான் என்று கல்வெட்டுகள் குறிப்பிடுவதால் ஈழத்துப்போரில் இத்தலைவன் உயிரிழந்தான் எனத் தெரிகிறது.[10]

சேவூர் போரில் தோற்ற பாண்டியன் ஓடி ஒளிந்து மதுரையில் மீண்டும் ஆட்சி செலுத்தியதால், கி.பி.966-இல் பாண்டிய நாட்டின் மீது மீண்டும் சோழன் படையெடுத்துச் சென்றான். ஆதித்த கரிகாலன், பூதி விக்கிரமகேசரி, தொண்டை நாட்டு சிற்றரசன் பார்த்தி வேந்திரவர்மன் ஆகியோர் சோழர் படைத் தலைமையேற்றவர்கள்.[11]

ஆதித்த கரிகாலன் வீரப்பாண்டியனைக் கொன்றான். அதுபற்றியே அவ்வரசிளங்குமாரன் ''வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரிவர்மன்'' என்று கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளன. அப்போரில் கலந்துகொண்டிருந்த தலைவர்களாகிய பூதி

விக்கிரமகேசரியும், பார்த்திவேந்திரவர்மனும் தாம் வீரபாண்டியனைத் தலைகொண்டவர்கள் என்று தம் கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ளனர்.[12]

சுந்தர சோழனும் தம் தந்தையைப்போல் வடக்கேயுள்ள திருமுனைப்பாடி நாட்டையும், தொண்டை நாட்டையும் கைப்பற்றி தம ஆளுகைக்குள் கொண்டு வந்தான்.[13]

இவன் தமிழ் புலவர்களை ஆதரித்தவன், சமயப்பொறை உணர்வுடையவன், வீரசோழிய உரையில் காணப்படும் பழைய பாடல்கள் இவனை 'மேதகு நந்திபுரி மன்னர் சுந்தர சோழன்' எனவும் 'பழையரை நகரச் சுந்தர சோழன்'[14] எனவும் கூறுகின்றன. இவன் பழையறை நகரை தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தினான்.

சுந்தர சோழன் ஆட்சி காலத்தில் ஒரு துயர நிகழ்ச்சி நடந்தது. போர்க்களத்தில் இறந்துபடாமல், ஆதித்த கரிகாலன் படுகொலை செய்யப்பட்டான் எனும் நிகழச்சியே அது. காட்டு மன்னார்குடி கல்வெட்டு ஆதித்த கரிகாலனை கொன்றவர்கள் சோமன், இரவிதாசனான பஞ்சவன், பிரமாதிராசன், பரமேசுவரனான இருமுடிச்சோழ பிரமாதிராசன், மலையனூரான தேவதாசக் கிராமவித்தன் என்றும் பார்ப்பனர், உடன்பிறந்தவர் என்றும் கூறுகிறது.[15]

ஆதித்த கரிகாலனின் கொலை, சுந்தர சோழனைப் பாதித்தது. ஆதித்தகரிகாலன் கொலைசெய்யப்பெற்ற இரண்டொரு திங்களில் சுந்தர சோழன் மனமுடைந்து கி.பி.969-இல் இறந்தான். காஞ்சி மாநகரிலிருந்த பொன் மாளிகையில் உயிர் துறந்தமையால் ''பொன் மாளிகைத்துஞ்சின தேவர்'' எனச் சில கல்வெட்டுகள் கூறுகின்றன.[16]

திருவாலங்காடு செப்பேடும், திருக்கோவிலூர்க் கல்வெட்டும், இவரது மனைவி வானவன் மாதேவி உடன்கட்டை ஏறிய செய்தியைக் கூறுகின்றன.[17] இம்மன்னனின் 5-ஆம் மற்றும் 7-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு வேளச்சேரி தண்டீஸ்வரர் கோயிலில் உள்ளன.

ஆதித்த கரிகாலன் (கி.பி.963-969)

வேளச்சேரியில் செல்லியம்மன் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டை முதலாம் பராந்தகன் (கி.பி.907-955) காலத்ததாக வரலாற்று ஆய்வாளர் சிலர் குறிப்பிடுகின்றனர். ஆனால் முதலாம் பராந்தகனுடைய மூன்றாவது ஆட்சி ஆண்டிற்கும் பிறகு அவனுடைய மதுரை வெற்றி, அவனை "மதிரை கொண்ட கோப்பரகேசரி" என்று கல்வெட்டுகளில் குறிக்கப்படுகிறது வழக்கம். ஆனால் இங்கு நான்காம் ஆட்சி ஆண்டின் பரகேசரி கல்வெட்டு மதிரை வெற்றியை குறிக்கப்படவில்லை. எனவே இக்கல்வெட்டு இரண்டாம் பராந்தகன் என்னும் சுந்தர சோழனின் மூத்த மகனான ஆதித்த கரிகாலனின் கல்வெட்டாக இருக்காலம் எனக் கருதமுடிகிறது.

இம்மன்னனது கல்வெட்டுகள் 5-ஆம் ஆட்சியாண்டு வரை கிடைத்ததுள்ளன. அண்மையில் பாண்டிச்சேரி மாநிலத்தில் உள்ள பாகூரில் 6-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எனவே இவன் கி.பி.963 முதல் கி.பி. 969 வரை ஆட்சிப் புரிந்துள்ளான் என்று அறிய முடிகிறது.

ஆதித்த கரிகாலனின் நான்காம் ஆட்சியாண்டு கல்வெட்டு செல்லியம்மன் கோயிலில் காணப்படுகிறது.

முதலாம் இராசராசன் (கி.பி.985-1014)

இரண்டாம் பராந்தகனுக்கும் வானவன் மாதேவிக்கும் பிறந்தவன் இராசராசனாவான். இவனுடைய இயற்பெயர்

அருண்மொழிவர்மன் என்பதேயாகும். உத்தமசோழனுக்குப்பின் சோழ மன்னனாக முதலாம் இராசராசன் அரசு கட்டிலேறினான். சோழ அரசின் வளர்ச்சிக்கு முதற்காரணமாக இருந்தது இவனேயாவான்.

சிறப்புப் பெயர்கள்

அபயகுலசேகரன், அரிதுர்கலங்கன், அழகிய சோழன், இரணமுகபீமன், இரவிகுல மாணிக்கன், இரவிவம்சசிகாமணி, இராசர்வஞ்ஞன், இராசாநுச்ரயன், இராசகண்டியன், இராசமார்த்தாண்டன், இராசேந்திரசிம்மன், இரபசவிநோதன், உத்தமசோழன், கேரளாந்தகன், சண்டபராக்ரமன், சிங்களாந்தகன், சிவபாதசேகரன், சோழ மார்த்தாண்டன், சோழகுலசுந்தரன், சோழேந்திரசிம்மன், தெலிங்ககுலகாலன், நிகரிலிச் சோழன், நித்தியவிநோதன், பண்டித சோழன், பாண்டி குலசானி, பெரியபெருமாள், மும்முடிச்சோழன், மூர்த்தவிக்கிரமாபரணன், சனநாதன், செயங்கொண்ட சோழன், சத்திரிய சிகாமணி ஆகிய சிறப்பு பட்டங்களை பெற்றிருந்தான்.[21]

அரசியல் நிலை

பிற்கால சோழ மன்னர்கள் வைத்துக்கொண்ட 'இராசகேசரி' என்னும் பட்டம் பூண்டு ஆட்சி புரியத் தொடங்கினான். அறிவும் அன்பும் நிறைந்த அரசியல் அதிகாரிகளையும் வீரஞ்சொறிந்த படைத்தலைவர்களையும் இவன் தேர்ந்தெடுத்துக் கொண்டு ஆட்சி நடத்தினான்.

தன் ஆட்சியில் நிகழ்ந்த வெற்றிகளைக் கூறும் மெய்க்கீர்த்தியைத் தன் கல்வெட்டுகளின் தொடக்கத்தில் பொறிக்கும் வழக்கத்தை முதலில் மேற்கொண்ட அரசன் முதலாம் இராசராசனே ஆவான். மெய்க்கீர்த்திகள் கூறுவனவெல்லாம் வெறுங்கற்பனை

செய்திகள் அல்ல, அவ்வேந்தர்களின் ஆட்சிக் காலங்களில் நிகழ்ந்த உண்மைச் செய்திகளையே உணர்த்துகின்றன. ஆட்சி ஆண்டு கூட மெய்க்கீர்த்தியும் வளர்ந்து கொண்டே போகும் என்பது ஆண்டுதோறும் எழுதப்பெற்ற மெய்க்கீர்த்திகளால் உறுதிப்பெறுகின்றது. முதலாம் இராசராசன் மெய்க்கீர்த்தி, ''திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்'' எனத் தொடங்குகிறது.[22] இம்மெய்க்கீர்த்தி கி.பி.933 முதல் தான் அதாவது இவனது எட்டாம் ஆட்சியின் கல்வெட்டுகளில் தான் முதன்முதலில் காணப்படுகிறது.[23] இவனது நான்காம் ஆண்டின் (கி.பி.988) தொடக்கத்திலேயே 'காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளிய கோ இராசகேசரிவர்மன்' என்று கல்வெட்டு கூறுகின்றன. ஆதலால் கி.பி.988-ஆம் ஆண்டில் காந்தளூர்ச் சாலையில் போர் நிகழ்த்தி வெற்றி பெற்றிருத்தல் வேண்டும் என்பது திண்ணம்.[24] இவன் கல்வெட்டுகள் எல்லாம் 'செழியரைத் தேசுகொள் கோவிராசகேசரிவர்மன்' என்று கூறுவதால் இவன் பாண்டியர்களை வென்று முற்றம் அடக்கினமை பெறப்படுகிறது.[25]

சேரனின் கொல்லம், கொடுங்கோளூரையும் இராசராசன் வென்றான். இவ்வெற்றியினால் ''கீர்த்தி பராக்கிரமன்'' என்னும் சிறப்புப் பெயர் பெற்றான்.[26]

குடகு என இன்று வழங்கும் நாடே 'குடகுமலை' நாடாகும். 'பணசோக' என்னும் இடத்தில் நடைபெற்ற போரில் குடகு அரசன் தோற்று ஓடினான்.[27] கங்கபாடி, நுளம்பாடி, தடிகைப்பாடி ஆகிய நாடுகளையும் இராசராசனின் மகன் முதலாம் இராசேந்திர சோழன் கி.பி.991-க்கு முன்போரிட்டுக் கைப்பற்றினான்.[28] முரட்டொழில் சிங்களர் ஈழமண்டலம் என்றும் எண்டிசை புகழ்தர ஈழமண்டலமும் என்றும் இவன் மெய்க்கீர்த்திகள் கூறுவனவற்றின் மூலம் இவன் கி.பி.991-இல் பேராற்றல் காட்டி போர் புரிந்த சிங்களரை முதலாம்

இராசராசன் பெரும் வெற்றி கண்டான் என்று உணர்த்துகிறது.[29] கீழை சாளுக்கிய மன்னரில் ஒரு பிரிவினரான சக்திவர்மனுக்கு இராசராசன் உதவி, வேங்கி நாட்டை கைப்பற்றிக் கொடுத்தான். சக்திவர்மனுக்குப்பின் அவன் தம்பி விமலாதித்தன் வேங்கி நாட்டின் அரசனாக வேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்தான். விமலாதித்தன் குந்தவையை மணந்து இராசராசனுக்கு மருமகனாகி நெருக்கமானான். கி.பி.1011-இல் சக்திவர்மனுக்குபின் விமலாதித்தன் வேங்கி அரசனாக முடி சூட்டப் பெற்றான்.[30]

கோதாவரி ஆற்றிற்கும், மகாநதிக்கும் இடையில் இருந்த கலிங்க நாட்டை இராசராசன் ஆட்சியின் இறுதியில் இராசேந்திர சோழன் வெற்றி பெற்றான். இறுதிப் போராக முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம் என அழைக்கப்பட்ட மாலத்தீவினைக் கடற்படை கொண்டு வென்றான்.[31]

இராசராசன் ஆட்சியின் பிற்பகுதியில் சோழ அரசு மிக உயர்நிலையில் இருந்தது எனலாம். பாண்டி மண்டலமும், கங்க மண்டலமாகிய சயங்கொண்ட சோழ மண்டலமும், கங்க மண்டலமும், கொங்கு மண்டலமும், நுளம்பபாடி நாடும், கலிங்க நாடும், ஈழமாகிய மும்முடி சோழ மண்டலமும் இவன் ஆட்சிக்குட்பட்டிருந்தன என்று உறுதியாகக் கூறலாம்.[32]

இவனுடைய ஆட்சியில் சோழ அரசின் ஒவ்வொரு மண்டலமும் பல வளநாடுகளாகப் பிரித்தது குறிப்பிடத்தக்க செயலாகும். கல்வெட்டுகளில் மண்டலம், வளநாடு, நாடு ஆகியன வரிசை முறைப்படி குறிக்கப்பெற்றன.

கி.பி.1014-ஆம் ஆண்டு முதல் இவனுடைய மகன் கல்வெட்டுகள் தமிழகத்தில் காணப்படுவதால் கி.பி.1014-இல் இவ்வரசன் இறந்தான் எனலாம். இவனுடைய ஒன்பது மற்றும்

பத்தாம் ஆட்சியாண்டு கல்வெட்டு வேளச்சேரி தண்டீஸ்வரர் கோயிலில் பார்க்கலாம். ஒன்பதாம் ஆட்சியாண்டு கல்வெட்டில் திருக்கற்றளி என்று குறிக்கிறது.

முதலாம் இராசேந்திரன் (கி.பி.1012-1044)

முதலாம் இராசராசனின் மகன் முதல் இராசேந்திரன் ஆவான். இவன் முதுமையடைந்திருந்த தந்தையின் விருப்பப்படியே கி.பி.1012-இல் 'பரகேசரி' என்ற பட்டத்துடன் நாட்டாட்சியையும் மேற்கொண்டான். முதல் இராசராசன் செய்த போர்களில் பங்குகொண்டு பல வெற்றிகளைப் பெற்ற பெருவீரனாக இவன் விளங்கினான். இவன் அரசுரிமை பெறுவதற்கு முன்னரே, சோழப் பெருநாட்டையும் அதன் அரசியல் அமைப்பையும் பகைவர்களை ஒடுக்க வேண்டிய வழிகளையும் அரசர்குரிய கடமைகளையும் நன்கு அறிய போதிய வாய்ப்புக்களை முதலாம் இராசராசன் அளித்தான்.

இவனை 'பூர்வதேசமும் கங்கையும் கடாரமுங் கொண்ட கோப்பரகேசரிவர்மன்' என்று கல்வெட்டுகள் புகழ்ந்து கூறுகின்றன.[33] இவன் மார்கழி திங்கள் திருவாதிரை நாளில் பிறந்தவன் என்பது திருவொற்றியூர் கல்வெட்டின் மூலம் புலப்படுகிறது.[34] இவனுடைய இயற்பெயர் மதுராந்தகன். கி.பி.1012-ஆம் ஆண்டில் இராசரசா சோழன் இவனுக்கு இளவரசுப்பட்டம் கட்டிய நாளில் 'இராசேந்திரன்' என்ற அபிடேகப் பெயர் வழங்கியமையால் இவன் தன் ஆட்சிக் காலம் முழுவதும் இப்பெயருடனேயே விளங்கினான்.[35]

இவனது மெய்க்கீர்த்தி, 'திருமன்னி வளர இரு நில மடந்தையும் போர்ச்சயப்பாவையும் சீர்தனிச் செல்வியும் தன் பெருந்தேவியராகி' என தொடங்குகிறது. இம்மெய்க்கீர்த்தி இவனது மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டுகளில் தான் முதலில் காணப்படுகிறது. இருப்பினும் இது மிகுதியாகக் காணப்படுவது ஐந்தாம் ஆட்சியாண்டு முதல் தான்.[36]

சிறப்பு பெயர்கள்

'கங்கை கொண்ட சோழன்', 'உத்தம சோழன்', 'பண்டிதசோழன்', 'மதுராந்தகன்', 'விக்கிரமசோழன்', 'சோழந்திர சிம்மன்', 'முடிகொண்ட சோழன்', 'கடாரங்கொண்டான்', 'அதிசயசிம்மன்', 'ஜெயசிம்மசரபன்', 'மலைநாடு கொண்டான்', 'வீரராசேந்திரன்' போன்ற சிறப்பு பெயர்களை பெற்றிருந்தான்.[37]

அரசியல்

மேலைச்சாளுக்கியரால் ஆளப்பெற்ற கிருட்டினை, துங்கபத்திரை ஆகிய இரண்டு பேராறுகளுக்கும் இடைப்பட்ட இடைத்துறை நாடு கல்வெட்டுகளில் 'எடத்தோர் இரண்டாயிரம்' எனப்படும். இதுவே இராசேந்திரன் வென்ற முதல் நாடு.[38]

கி.பி.1017-இல் இராசேந்திரன் இலங்கை அரசன் ஐந்தாம் மகிந்தனுக்கு எதிராக மேற்கொண்ட இலங்கைப் போர் பற்றி மகாவம்சம் கூறுகிறது. இப்போர் மகிந்தனுடைய 36-ஆவது ஆட்சியாண்டில் முடிவுற்றது.[39]

கி.பி.1018-இல் இராசேந்திரன் சேர நாட்டின் மீது படையெடுத்துச் சேர மன்னர்கள் அணிந்து மகிழ்ந்த மணிமுடி, மாலை ஆகியவற்றையும் தொண்மைமிக்க தீவுக் கூட்டத்தையும் கைப்பற்றினான். இராசேந்திரன் கைக் கொண்ட சேரரின் சாந்திமத்தீவு இப்போதைய லட்சத் தீவுக்கருகில் உள்ள ஆண்ட்ரோத் தீவே என கா.ம.வேங்காடராமையா குறிப்பிடுகிறார்.[40]

இராசேந்திரனின் வடநாட்டு வெற்றிக்கு அறிகுறியாக திருச்சிராபள்ளி கோட்டத்திலுள்ள உடையார் பாளையம் வட்டத்தில் புதிய நகரொன்றை நிறுவி, அதற்கு "கங்கை கொண்ட சோழபுரம்" என்று பெயரிட்டான் மற்றும் அந்நகரையே சோழப் பேரரசுக்குரிய தலைநகராகவும் கொண்டு ஆட்சி செய்தான். இக்காலம்

கி.பி.1020-1023க்கு உட்பட்டதென்று கூறலாம். இக்காலமுதலே சோழ நாட்டின் தலைநகர் தஞ்சையினின்று மாறி கங்கைகொண்ட சோழபுரத்தில் நிலைபெறுவதாயிற்று.[41]

தன் தந்தை தஞ்சையில் கட்டிய கோயிலைப் போலவே தான் அமைத்த கங்கை கொண்ட சோழபுரத்தில் "கங்கை கொண்ட சோழேசுவரம்" என்னும் கோயிலைக் கட்டினான் மற்றும் சோழ கங்கம் என்னும் பெரிய ஏரியொன்றையும் வெட்டி புதிய நகருக்குரிய நீர்வளத்தைப் பெருக்கினான்.

இத்தகைய சிறப்புகளை பெற்ற இவனது காலக் கல்வெட்டுக்கள் வேளச்சேரி தண்டீஸ்வரர் கோயிலில் ஐந்து கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளில் இவனுடைய மெய்க்கீர்த்தி இடம் பெறுகின்றன. இத்தகைய அரும்பணி செயல் திறன் கொண்ட இராசேந்திரன் 35 ஆண்டுகள் பரந்து விரிந்த சோழப் பேரரசை ஆண்டான். தன்னுடைய 83-ஆம் வயதில் வடஆர்க்காடு மாவட்டம், பிரம்மதேயம் என்னும் ஊரில் கி.பி.1040-இல் உயிர் நீத்தான்.[42]

இராசேந்திரன் ஆட்சியின் இறுதிக்காலம் விசயாலயச் சோழமரபுச் சோழ வரலாற்றில் மிகச் சிறப்பான காலமாய் இருந்தது. சோழ பேரரசு மிகவும் பரந்துபட்டிருந்தது. போர்ப்படையும் தம் பெருமையில் மிக உயர்ந்து நின்றது.[43]

இரண்டாம் இராசராசன் (கி.பி.1146-1163)

இரண்டாம் குலோத்துங்கனின் மகனான இரண்டாம் இராசராச சோழன் கி.பி.1150-இல் 'பரகேசரி' என்னும் பட்டம் புனைந்து அரசாளத் தொடங்கினான். இவன் கி.பி.1146-இல் இளவரசு பட்டம் சூட்டப்பெற்றான் என்பதனை இவன் ஆட்சியாண்டிலிருந்து கணக்கிடப்பெறுவதால் அறிகிறோம்.

சிறப்பு பெயர்கள்

'சோழேந்திரசிங்கன்', 'தெய்வப் பெருமான்', 'கண்டன்', 'சொக்கப்பெருமாள்', 'இராசகம்பீரன்' ஆகிய பெயர்கள் இவனுடைய சிறப்பு பெயர்களாகும். இச்சிறப்பு பெயர்களால் இவனுடைய ஆட்சிக் காலத்தில் இராசகம்பீர நல்லூர் இராசகம்பீரன் திருமண்டபம், இராசகம்பீரன் திருவீதி என்பன அமைக்கப்பெற்றன. எதிரிலிச்சோழன், நெறியுடைச் சோழன் என்பனவும் சிறப்புப் பெயர்கள். 'கண்டன்' எனும் பெயர் இராசராச சோழனுலா, தக்கயாகப்பரணி ஆகியவற்றில் மட்டும் காணப்படுகின்றது.[44]

அரசியல்

கங்கை கொண்ட சோழபுரமே தலைநகரமாகத் தொடர்ந்து விளங்கிய போதிலும், ஆட்சியின் பிற்பகுதியில் பழையாறை நகர் சோழரின் தலைநகரமாக விளங்கியது. பழையாறைக்கு வடக்குப் பகுதியை தலைநகராக்கி, அதற்குக் கீழைப்பழையாறையாகிய இராசராசபுரம் என்று பெயரிட்டான். அங்கு தன் பெயரால் சிவன் கோயிலொன்றும் சிற்ப வேலைப்பாட்டின் சிகரமாக எழுப்பினான். இவ்வூர் இப்பொழுது 'தாராசுரம்' என்று கூறப்படுகின்றது.[45]

இவனுடைய ஆட்சியின் பரப்பினைக கல்வெட்டுக்கள் வாயிலாக அறிகிறோம். கோதாவரி, கிருட்டிணா, குண்டூர், நெல்லூர் மாவட்டங்களிலும் இவன் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. வேங்கிநாடும், திராட்சராமம் வரையும் இவன் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. கங்கநாடு, வேங்கிநாடு, கொங்குநாடு ஆகியனவும் இவன் ஆட்சிக்குட்பட்டது என அறிகிறோம்.[46]

மெய்க்கீர்த்திகளில் இவனுடைய போர் பற்றிய நிகழ்ச்சி ஏதும் கூறப்படாமையால் இவன் தன் தந்தையைப் போலவே போரில் ஆர்வமற்றவனாய் இருந்தான் எனத் தெரிகிறது.[47]

இவனுடைய மெய்க்கீர்த்தியில் 'விழுந்த அரிசமயத்தையும் மீளவெடுத்தான்' எனக் குறிப்பிடப்பெறுவதால் இவன் வைணவர்களுக்கு ஆதரவு அளித்தான் எனலாம்.

இவ்வரசன் தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் புலமைப் பெற்றிருந்தான். இவனுடைய மொழி தேர்ச்சியை மெய்க்கீர்த்திகளில் காணக்கிடைக்கும். 'முத்தமிழுக்குந் தலைவன்' 'இராச பண்டிதன்' ஆகிய அடைமொழிகளால் அறியலாம். முதுமையுடையவராய் வாழ்ந்த ஒட்டக்கூத்தர் இவனுக்கு ஆசிரியராய் விளங்கினார் எனக் கருதலாம். கேசவசுவாமி எனும் வடமொழிப் புலவரே இவனுடைய ஆசிரியர் ஆவார். ஒட்டக்கூத்தர் வடமொழியிலும் புலமை பெற்றிருந்தார். அவர் இவ்வரசன் மீது 'இராசராசசோழனுலா' என்னும் நூலொன்றினை இயற்றினார்.[48]

தக்கயாகப்பரணி, இராசராச சோழனுலா ஆகிய இரண்டும் இவன் காவிரிக்கு வழிகண்ட செய்தியை கூறுகின்றன.

இத்தகைய சிறப்புமிக்க இரண்டாம் இராசராசனின் ஏழாம் ஆட்சியாண்டு கல்வெட்டு வேளச்சேரி தண்டீஸ்வரர் கோயிலில் உள்ளது.

மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1178-1218)

இரண்டாம் இராசாதிராசனுக்குப் பின் சோழப் பேரரசனாக மூன்றாம் குலோத்துங்கன் முடிசூட்டப் பெற்றான். இரண்டாம் இராசராசனே மூன்றாம் குலோத்துங்கனின் தந்தை எனக் காட்ட உறுதியான சான்றுகள் உள்ளன. தாராசுரம் கோயிலைக் கட்டியவன் இரண்டாம் இராசராசன் ஆவான். குடுமியான்மலைக் கல்வெட்டொன்றில் குலோத்துங்கன் தன் தந்தையால் இராசராசேச்சுரம் என்னும் சிவன்கோயில் எடுப்பிக்கப் பெற்றதாகக் கூறியிருப்பது இரண்டாம் இராசராசனின் புதல்வன் மூன்றாம் குலோத்துங்கனே எனக் காட்டும்.[49]

சோழ மன்னர்கள் தம் ஆட்சியைக் கைக்கொள்ளும் போது ஒருவர் பின்னொருவராக மாறிமாறி புனைந்து கொண்டு வந்த இராசகேசரி, பரகேசரி என்ற பட்டங்களுள் இவன் 'பரகேசரி' என்னும் பட்டம் புனைந்து அரசாண்டவன்.

"புயல் வாய்த்து வளம் பெருக" எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி இவனுடைய மூன்றாம் ஆட்சியாண்டு முதல் கல்வெட்டுகளில் காணலாம்.

கி.பி.1180-இல் குலோத்துங்கன் பாண்டியருடன் போரிட்டு வீரபாண்டியன் மகன்களில் ஒருவனைக் கொன்றான். வீரபாண்டியனின் படைகள் தோற்றன. இலங்கைப் படைகள் இலங்கைக்கு பின் வாங்கின. மதுரை நகரைக் கைக்கொண்டு அங்கே வெற்றிக்தூண் ஒன்றை அமைத்தான். குலோத்துங்கனிடத்து தோல்வியுற்று வீரபாண்டியன் காட்டு வழியில் சேரநாடு அடைந்து உதவி கேட்டான். பாண்டியன், சேரன் சிங்களன் ஆகிய மூவரும் சோழனை எதிர்த்து முக்கூட்டணி அமைத்து போரிட்டனர். இரண்டு படைகளும் மதுரைக்கு கிழக்கே உள்ள நெட்டூரில் போரிட்டன. குலோத்துங்கன் இப்போரில் வெற்றி பெற்றான்.[51]

இப்போர் நடைபெற்ற ஆண்டு கி.பி.1188 என நெல்லூரிலுள்ள இவனுடைய பத்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு வாயிலாக அறியலாம். கி.பி.1188-க்கும் கி.பி.1193-க்கும் இடையில் இப்போர் நடைபெற்றிருக்க வேண்டும்.

கி.பி.1192-ல் புசபல வீர நல்லசித்தன் தேவசோழ மகாராசன் என்பவன் காஞ்சியை கைப்பற்றினான். காஞ்சி வந்த குலோத்துங்கன் நல்லசித்தன் தேசசோழனைத் தோற்கடித்து அந்நகரத்தை மீட்டான். இப்போர் கி.பி.1194-க்கும் கி.பி.1197-க்கும் இடையில் நிகழந்திருக்க வேண்டும்.[52]

இவன் மூன்றாவது முறையாக பாண்டியருடன் போரிட்டான். சடையவர்மன்குலசேகர பாண்டியனுடன் மூன்றாம் குலோத்துங்கன் போரிட்டான். குலோத்துங்கன் தன் படையுடன் மதுரை சென்று குலசேகரனைத் தோற்கடித்து மதுரையை விட்டு ஓடச்செய்தான். மதுரை மாநகரில் அரண்மனை, மண்டபங்கள் போன்றவற்றை சோழப்படை இடித்து தள்ளி மண்ணோடு மண்ணாக்கி கழுதைகள் பூட்டி ஏர்கொண்டு உழுது கவடி விதைத்தது.[53] பாண்டியனின் கொலு மண்டபத்தில் சோழ பாண்டியன், திரிபுவன தேவன் ஆகிய பட்டப்பெயர்களைச் சூட்டிக் கொண்டு வீராபிடேகம் செய்துக்கொண்டான்.

பாண்டிய மண்டலத்திற்குச் சோழ பாண்டி மண்டலம் எனப் பெயரிட்டான். முடித்தலை கொண்ட சோழபுரம் என்று பெயர் மாற்றம் செய்தான். இப்போரின் மூலம் "மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட" என்ற பட்டப் பெயரை பெற்றான். இப்போர் கி.பி.1203-க்கு முன் நடைபெற்றிருக்கலாம் என்று வேளச்சேரி தண்டீஸ்வரர் கோயிலில் உள்ள கல்வெட்டின் மூலம் அறியலாம். (A.R.E.303,310)

குலோத்துங்கன் காலத்திலும் நிலங்கள் புதிதாக அளக்கப்பெற்றுப் பிரிக்கப்பட்டு பதிவு செய்தனர். இப்பணி கி.பி.1216-இல் நடைபெற்றது.[54]

இம்மன்னன் சமயப்பொறை உணர்வுடையவன். வேலூரிலுள்ள கோயிலுக்கு குலோத்துங்க சோழ விண்ணகரம் எனத் தன்பெயரை சூட்டினான் என்பதற்கு அவ்வூரில் உள்ள அவனது ஐந்தாம் ஆட்சியாண்டு (கி.பி.1181) கல்வெட்டு கூறுகிறது.

இவன் தமிழ் இலக்கியத்தில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தான். வீராந்த பல்லவரையர் இவனுடைய அவைக்களப் புலவராக விளங்கினான்.

இவன் காலத்தில் மகாபாரதம் மொழி பெயர்க்கப்பட்டது. இந்த பணியைச் செய்தவர் திருலோக்கியமல்லன் வத்சராஜன் என்பவன்.[55]

திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தை இயற்றி, இவன் அவைக்களத்தில் அதனை சேக்கிழார் பெருமான் தில்லையில் அரங்கேற்றினார். அவர் குலோத்துங்கனின் அமைச்சர்.[56] சோழ நாட்டில் இரண்டு ஆண்டு காலம் (கி.பி.1201-1202) கடும் பஞ்சம் ஒன்று ஏற்பட்டுக் குடிமக்கள் அவதியுற்றனர். பஞ்ச நிவாரணப் பணிகள் பல அரசாங்கத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டன. தனிப்பட்டவர்களும் நிவாரணப்பணியில் பங்கு கொண்டனர்.

கி.பி.1216-இல் மூன்றாம் இராசராசனுக்கு இளவரசு பட்டம் கட்டிய இரண்டு ஆண்டுகள் கழித்து கி.பி.1218-இல் குலோத்துங்கன் உயிர் நீத்தான். தன் நீண்ட ஆட்சியில் பகைவர் பலரையும் அடிபணிய வைத்துப் பேரரசின் பெருமையைக் காத்ததுடன், பல துறைகளிலும் புகழ்பெற்றுக் குலோத்துங்கன் விளங்கினான்.

கங்கை கொண்ட சோழபுரம் இவன் தலைநகரமாக விளங்கியது. உறையூர், தஞ்சை, பழையாறை ஆகியன அவ்வப்போது அரசன் தங்கிய இடங்கள் ஆகும். விக்கிரமசோழபுரம் அரசனுடைய உறைவிடமாய் இருந்தது.

சிறப்பு பெயர்கள்

'திரிபுவனச் சக்கரவர்த்திகள்', 'சோழ பாண்டியன்', 'மதுரையும் பாண்டியன் முடிதலையுங் கொண்ட' போன்ற சிறப்பு பெயர்களை கொண்டிருந்தான்.

இத்தகைய சிறப்புகள் கொண்ட மூன்றாம் குலோத்துங்கனின் 25-ஆம் ஆட்சியாண்டு(கி.பி.1202) கல்வெட்டு வேளச்சேரி

தண்டீஸ்வரர் கோயிலில் இரண்டு உள்ளன. இக்கல்வெட்டில் திருநாவுக்கரசு மடத்திற்கு நிலத்தையும், தண்டீஸ்வரர் கோயிலில் விளக்கெரிக்க பணம் அளித்த செய்தி உள்ளது.

மூன்றாம் இராசராசன் (கி.பி.1216-1256)

கி.பி.1216-ஆம் ஆண்டில் மூன்றாம் குலோத்துங்களின் மகனான இராசகேசரி இராசராசசோழன் அறியனை ஏறினான். "சீர்மன்னி இருநான்கு திசை விளங்கும்", "சீர்மன்னு மலர்களும் சிறந்த தனிநிலைச் செல்வியும்", எனும் இரு மெய்க்கீர்த்திகளில் தொடக்கங்களை இவனுடைய கல்வெட்டுகளில் காணலாம். இம்மன்னன் 40 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவன் வீரநரசிம்மனுடைய மகளை மணந்திருந்தான்.

இவனுடைய காலத்திலும் பாண்டியருடன் போர் நடைபெற்றது. கி.பி.1218-இல் மாறவர்மன் எனும் பட்டப் பெயருடன் சுந்தரபாண்டியன் ஆட்சிசெய்யத் தொடங்கினான். மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சோழர் படை செய்த அழிவும் இழிவும் மறக்காத அவன் அதற்குப் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருந்தான்.

கி.பி.1218-இல் குலோத்துங்க சோழன் இறந்த செய்தி அறிந்த அவன் கி.பி.1219-இல் பெரும்படையுடன் வந்து சோழரைத் தோற்கடித்துத் தஞ்சாவூரையும் உறையூரையும் தீ வைத்து கொளுத்தினான். சங்ககாலச் சோழன் கரிகாலன், உருத்திரங் கண்ணனாருக்குப் பட்டினப்பாலை பாடியதற்காக முன்னொரு காலத்தில் வழங்கியிருந்த பதினாறுகால் மண்டபம் மட்டுமே எரியாமல் தப்பியது. சோழன் போரில் தோற்று ஓடினான். பாண்டியன் சோழ நாட்டில் விருப்பம் போல பெற்ற வெற்றிக்கு அறிகுறியாகப் பழையாறையில் வீராபிடேகம் செய்துகொண்டு மதுரைக்கு திரும்புகையில் பொன்மராவதியில் தங்கினான்.[58]

அப்பொழுது நாட்டை இழந்த மூன்றாம் இராசராசன் அங்கு வந்து தன்னை பணிய, பாண்டியன் சோழனுக்கு முடி வழங்கி; தன் ஆணைக்குட்பட்ட அரசனாக்கி கப்பம் செலுத்தி வர கட்டளையிட்டான்.[59]

போசாளரின் உதவியினால் ஊக்கம் பெற்ற இராசராசன் பாண்டியருக்கு திரை செலுத்த மறுத்தமையால் சுந்தர பாண்டியன் கி.பி.1231-இல் சோணாட்டின் மீது மீண்டும் படையெடுத்தான். சோழன் தோற்றுப் புறமுதுகு காட்டி ஓடினான். பாண்டியன் பழையாறையில் வெற்றித் தூண்களை நிறுவி வீராபிடேகமும், விசயாபிடேகமும் செய்து கொண்டான்.[60]

தோல்வி பெற்ற சோழன் துவாரசமுத்திரம் சென்றான். இதனை காடவர் குலத்தலைவன் முதலாம் கோப்பெருஞ்சிங்கன் அறிந்து அவனை வழிமறித்துத் தெள்ளாற்றில் எதிர்த்துப் போரிட்டுத் தோற்கடித்தான். சோழனைக் கைது செய்து தன்னுடைய தலைநகர் சேந்தமங்கலம் கொண்டு சென்று அங்கே சிறை வைத்தான்.[61]

அப்போது போசளனே சோழனுக்கு உதவிக்கரம் நீட்டினான். இராசராசனை சிறையினின்றும் விடுவித்துக் கோப்பெருஞ்சிங்கனுக்குத் துணையாக வந்தவனான சிங்களத்து இளவரசன் ஒருவனையும் கொன்றான். இந்நிகழ்ச்சி பதினொறாம் ஆட்சியாண்டில் கூறப்பெற்றிருப்பதால் அவ்வாண்டில் அவன் அறியணையை மீண்டும் பெற்றான் என அறியலாம்.[62]

போசளன் இராசராசனை சிறையிட்ட அதே வேளையில் மாறவர்மன் சுந்தர பாண்டியனுடன் போர் செய்து, அவனிடமிருந்து சோழ ஆட்சி பகுதிகளை மீட்டு இராசராசனிடம் வழங்கினான். முதலாம் கோப்பெருஞ்சிங்கனும் சோழனைச் சிறைவிடுத்தபின் சோழனுடன் போர் செய்யவில்லை. சோழனும் சிறைவைத்தவனுக்கு

எதிராகப் படைநடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை. அதன்பின் தன் வாழ்நாள் முழுமையும் இடையூறு ஏதுமின்றி இராசராசன் ஆட்சி செய்தான்.[63]

ஆட்சியின் 41-ஆம் ஆண்டுக்குப்பின் இவனுடைய கல்வெட்டுகள் கிடைக்கப்பெறாமையல் கி.பி.1256-இல் இராசராசன் இறந்துவிட்டான் என அறியலாம். தான் இறப்பதற்கு பத்து ஆண்டுகளுக்கு முன்னரே, கி.பி.1246-லேயே தன் மகன் மூன்றாம் இராசேந்திரனுக்கு இளவரசு பட்டம் சூட்டினான்.

முதலாம் குலோத்துங்கனுக்கு அடுத்தபடியாக அதிக ஆண்டுகள் சோழ அரியணையில் அமர்ந்த அரசன் இவனே. ஆனால், அதிக காலம் ஆட்சி செலுத்தியபோதும் பெருமைப்பட்டு கொள்ளத்தக்க ஆட்சியாக அது அமையவில்லை. வீரம், விவேகம், ஆட்சித்திறன் ஆகியன அற்றவனாகவே வரலாற்று ஏடுகளில் அவனுடைய வாழ்க்கை பதிந்துவிட்டது.

இவன் திரிபுவனச்சக்கரவர்த்திகள் எனும் பட்டம் பெற்றிருந்தான் என்பதற்கு சான்றாக வேளச்சேரி தண்டீஸ்வரர் கோயிலில் உள்ள கல்வெட்டைக் கூறுலாம். இது இவனுடைய 22-ஆவது ஆட்சி ஆண்டு கல்வெட்டாகும்.

குறுநில மன்னர்கள்

வேளச்சேரி தண்டீஸ்வரர் கோயிலில் கோப்பெருஞ்சிங்கனின் கல்வெட்டு உள்ளது. அவனை பற்றி காண்போம்.

K.A. நீலகண்ட சாஸ்த்திரி, ஆர். சத்திய நாதய்யர் போன்ற பேராசிரியர்களும், S.R. பாலசுப்பிரமணியம் முதலியோரும் கோப்பெருஞ்சிங்கன் என்ற பெயருடன் ஒருவன் தான் இருந்தான் என்று கருதுகின்றனர். அதற்கு மாறாக வி. வெங்கய்யா, எச். கிருட்டிணசாஸ்திரி, இராபர்ட் சீவல், வி. வேங்கடசுப்பையர்

போன்ற கல்வெட்டறிஞர்கள் கோப்பெருஞ்சிங்கன் என்ற பெயரில் இருவர் இருந்ததாகக் கூறுகின்றனர். கோப்பெருஞ்சிங்கன் பெயரில் உள்ள கல்வெட்டுகள் அனைத்தையும் நன்கு ஆராய்ந்ததில் பிந்தைய கருத்தே உண்மையானது என்று தெரிகிறது.

கோப்பெருஞ்சிங்கன் ஆட்சியின் தொடக்கம் எந்த ஆண்டு என்பதை ஆராயும்பொழுது சில கல்வெட்டுகளின்படி அது கி.பி.1231 என்றும், வேறு சில கல்வெட்டுகளின்படி கி.பி.1243 என்றும் தெரிய வருகின்றது. எனவே கோப்பெருஞ்சிங்கன் என்ற பெயரிலிருந்த முதல் மன்னன் கி.பி.1231-லும், இரண்டாம் மன்னன் கி.பி.1243-லும் தங்கள் ஆட்சியைத் தொடங்கியிருத்தல் வேண்டும்.[64] இதைத் தவிர வேறு எந்த விளக்கமும் பொருந்தமாயிராது.

கி.பி.1243-இல் முதலாம் கோப்பெருஞ்சிங்கன் தன் புதல்வனான இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனான வாள்வல்ல பெருமாளுக்கு இளவரசு பட்டம் கட்டினான். அதன்பின் கி.பி.1246-இல் இவன் இறந்திருத்தல் வேண்டும் என்பது முன்னூர் கல்வெட்டொன்றால் உய்த்துணரப்படுகின்றது.[65]

இத்தகைய கருத்துக்களைக் கொண்டு ஆராய்கையில் வேளச்சேரி தண்டீஸ்வரர் கோயில் கல்வெட்டில் உள்ள கோப்பெருஞ்சிங்கன் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் தான் என்பது உறுதி செய்யப்படுகிறது.

இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன்

இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனான வாள்வல்ல பெருமாள் முதலாம் கோப்பெருஞ்சிங்கனான சாடும் பெருமாளின் புதல்வன். இவன் தாய் சீலாவதி, திருவண்ணாமலை கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள காடவகுமாரன் இவனே.

விருது பெயர்கள்

வாள்வல்லபெருமாள், வீரராயன், விருதரில் வீரன், ஆட்கொண்டதேவன், வேணாடுடையான், அவனியாளப் பிறந்தான், நிச்சங்கமல்லன், காங்கேயன், தமிழ்நாடு காத்த பெருமாள், வென்று மலைகொண்ட பெருமாள், கனகசபாபதி சர்வகார்ய சர்வகால நிர்வாகிகள் பரதமல்லன், சாகித்யர்ணாகரன், பல்லவ குலபாரிஜாதகம், பாகவகுலசூடாமணி, பாலாறு நாயகன், காவேரி காமுகன், பெண்ணாற்று நாதன், மல்லாபுரி வல்லபன், காஞ்சிபுரி காந்தன், ககதேசவீரன், வீராவீரன், பல்லவாண்டார், ஏழிசைமோகன், அழகிய பல்லவனான கச்சியராயன், அழகிய சீயனான தமிழ்நாடு காத்தான், வீரபிரதாபன், புவனேசுவீரன், காடவகுலதிலகம், சோழகுலகமலாகரதிவாகரன், பாண்டியராயதாபன், சூத்ரதாரன், மகாராகசிம்மன், கோநந்திபன்மன், காஞ்சி நாயகன், ஆணைக்கு அரசு வழங்கும் பெருமாள் முதலியன அவனுடைய சிறப்பு பெயர்களாகும்.[66]

இவன் பட்டத்திற்கு வரும் முன்னரே போரிலும் ஆட்சித் துறையிலும் மிக்க பட்டறிவு பெற்றிருந்தான். அத்திமோரிசோனை கல்வெட்டுகளில் இம்மன்னன் சேவூரில் தன் எதிரிகளை வென்று தொண்டை மண்டலத்தைக் கைக் கொண்டதாகவும் திருவண்ணாமலைக் கல்வெட்டில் இவன் நன்னன் மலையில் தன் வெற்றியையும், அநுமக் கொடியையும் பொளித்ததாகவும் கூறப்பட்டுள்ளது.[67] இதனைக் கொண்டு பார்க்கும்பொழுது தொண்டைமண்டலத்தில் வெளிசேரியில் உள்ள கல்வெட்டு இவனுடையது என்று தீர்மானமாகப் புலப்படுகின்றது.

கி.பி.13-ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் பட்டத்திற்கு வந்தபின் தென்னாட்டில்

பாண்டியரின் ஆதிக்கம் மிக விரைவாக வளர்ச்சியுற்றது. அதனால் மீண்டும் சோழர்களுக்கும் போசளருக்குமிடையே நட்பு ஏற்பட்டது. எனினும் சுந்தர பாண்டியன் அவ்விருவரையும் வென்றதுடன் இரண்டாம் கோப்பெருஞ்சிங்களையும் கி.பி.1258-க்குள் வென்றடக்கிவிட்டான். அதன்பின்னர் அக்காடவன் பாண்டியனுக்கு கட்டுப்பட்ட சிற்றரசனாக விளங்கினான்.

கி.பி.1267-ஆம் ஆண்டு பாண்டியர் கல்வெட்டொன்று கோப்பெருஞ்சிங்கன் பாண்டியனுக்குக் கட்டுப்பட்டிருந்ததை உணர்த்துகின்றனது. மேலும் கோப்பெருஞ்சிங்கனும் தன்னைப் பாண்டியராஜ்ய ஸ்தாபன சூத்ரதாரி எனக் கூறிக்கொள்கிறான். இறுதிவரை அவன் பாண்டியருடன் அத்தகைய உறவு கொண்டிருந்ததாகத் தெரிகிறது.[68]

கி.பி.1279-இல் கடப்பை மாவட்டத்து நந்நலூரில் காகதீப தளபதி அம்பதேவனுடன் நிகழ்ந்த போர் ஒன்றில் கோப்பெருஞ்சிங்கன் போரிட்டு உயிர் நீத்ததாக வரலாற்றாசிரியர் ஒருவர் கூறுகிறார். இச்செய்தியை உறுதிப்படுத்தக் கூடிய வேறு சான்றுகள் ஏதும் இல்லை. இருப்பினும் அஃது உண்மையாக இருக்கக்கூடும். கி.பி.1279-க்குப் பின் கோப்பெருஞ்சிங்கன் கல்வெட்டு ஏதுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.[69]

இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் அக்காலச் சிற்றரசர்களில் மிகவும் சிறப்பானவன். சோழரிடமும் பாண்டியரிடமும் நெருங்கிய உறவும் தொடர்பும் கொண்டிருந்தவன். அவன் போரிலும் ஆட்சித் துறையிலும் சிறந்து விளங்கினான். அவனிடம் கடற்படை ஒன்றியிருந்தது குறிப்பிடத்தக்கது. கன்னட, தெலுங்கு மன்னர்களிடமிருந்து தமிழ் நாட்டை காக்க அவன் போரிட்டதால் அவன்

தன்னை "தமிழ்நாடு காத்த பெருமாள்" என்று பெருமிதத்துடன் கூறிக்கொள்கிறான்.

அவன் கலைகளில் கொண்டிருந்த ஈடுபாட்டினை "சாகித்ய ரத்னாகரன்"[71] என்ற அவன் பட்டத்திலிருந்தும், பரத நாட்டியத்தில் மிக ஈடுபாடு கொண்டிருந்ததால் தன்னைப் "பரதம்வல்லபெருமாள்"[72] என்று அழைத்துக் கொண்டான். இவன் "சகலபுவனச் சக்கரவர்த்தி"[73] என்ற பட்டத்தைக் கொண்டிருந்தான்.

காடவராயர்கள் சைவ சமயத்தை மிக ஆர்வமுடன் பின்பற்றினர். இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் துலாரோகணம் செய்ததை அவனுடைய திரிபுராந்தகக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இவன் வடமொழியிலும் புலமை பெற்றிருந்தான் என்பதற்குச் சான்றுள்ளது. தந்தையும் மகனும் பரதக் கலையில் பயிற்சி பெற்றிருந்தமையால் தம்மை பரதம் வல்ல பெருமாள் என அழைத்துக் கொண்டனர். அவர்கள் சிதம்பரம் கோயிலில் கட்டிய தெற்கு, கிழக்கு கோபுரங்களில் உள் வாயில்களில் பரத நாட்டியச் சிற்பங்களை அமைத்துள்ளது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இவனுடைய பதினெட்டாம் ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று வேளச்சேரி தண்டீஸ்வரர் கோயிலில் உள்ளது.

பார்த்திவேந்திர வர்மன்

சோழருக்குக் கீழ் ஆட்சி புரிந்த பார்த்திவேந்திராதிபதி வர்மன் தன்னை, பரகேசரி என்றும், சிற்றரசர்களுக்கு உரிய பட்டப்பெயரால் ராஜமாராயர் என்றும், கோவிராஜமாராயர் என்றும் அழைத்துக் கொண்டான். இவனது கல்வெட்டுகள் தொண்டை மண்டலப் பகுதியில் 13-ஆம் ஆட்சியாண்டு வரை காணக்கிடைத்தன.

அண்மையில் குடியாத்தம் அருகே புகலூர் மலையடிவாரத்தில் பார்த்திவேந்திரவர்மனின் 16-ஆம் ஆட்யாண்டு நடுகல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே கி.பி.956 முதல் கி.பி.972 வரை தொண்டை மண்டலத்தில் ஆட்சி செய்து வந்துள்ளான்.

வெளிச்சேரி செல்லியம்மன் கோயிலில் பார்த்திவேந்திரவர்மனின் 10-வது (கி.பி.966) ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு உள்ளது. கல்வெட்டின் எழுத்தமைதியில் இக்கல்வெட்டு கி.பி.10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தது என்று தெளிவாகக் கூறலாம்.

ஆ) கல்வெட்டில் நாட்டுப்பிரிவு

கல்வெட்டில் வரும் ஊர்ப் பெயர்கள்

செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆற்காடு என்னும் ஊர் உள்ளது. ஆனால் வெளிச்சேரி கல்வெட்டில் வரும் 'ஆர்க்காட்டு கூற்றம்' சோணாட்டை சேர்ந்ததாகும் (A.R.E.306).

"சப்தமாத்ருக்கள்" என்று ஏழுதாயார் வெளிச்சேரி கல்வெட்டில் குறிக்கப்பட்டனர். சப்தமாதர்களுக்கு மழநாடு என்ற பகுதியைச் சேர்ந்த ஒருவர் நிலத்தை அளித்தனர். இக்கல்வெட்டின் மூலம் சோழ நாட்டை சேர்ந்த மழநாடும் அதனுடைய ஒரு பகுதியான திருவேட்பூர் இருந்ததை அறியலாம் (A.R.E.316).

சோணாடு, கிழார் கூற்றத்தில் உள்ள வைகூர்ச்சேரியில் உள்ள அமுதன் பிச்சன் என்னும் செம்பியன் கிழாநாட்டுக்கோன் என்பவன் வெளிச்சேரி கிராமத்தில் உள்ள தரமணி மகாதேவருக்கு விளக்கெரிக்க நிலத்தை தானமாக அளித்தார். இக்கல்வெட்டின் மூலம் அக்காலத்தில் தரமணி வெளிச்சேரியின் ஒரு பகுதியாக இருந்தது. சோழநாடு, சோணாடு என்ற பெயரில் வழங்கி வந்தது (A.R.E.304).

செங்கல்பட்டு மாவட்டத்தில் வெசாலிப்பாடியில் ஆற்றூர் கிராமம் என்னும் ஓர் ஊர் இருந்தது என்பதை வெளிச்சேரி கல்வெட்டின் மூலம் தெரியவருகிறது (A.R.E.309).

வெளிச்சேரியில் உள்ள நிலத்தை சேதிராயதேவர் குலோத்துங்க சோழ வளநாட்டில் இருக்கும் திருவான்மியூரில் உள்ள திருநாவுக்கரசு மடத்திற்கு தானமாக அளித்தார். இக்கல்வெட்டின் மூலம் குலோத்துங்க சோழ வளநாட்டின் ஒரு பகுதியாக திருவான்மியூர் இருந்தது என்பதை உறுதி செய்ய முடிகிறது (A.R.E.303).

சோழ மண்டலத்தில் உள்ள கீரங்குடியைச் சேர்ந்தவர் வெளிச்சேரி என்னும் ஜினசிந்தாமணியில் இருக்கும் தண்டீஸ்வரமுடைய நாயனார் கோயிலில் விளக்கேற்ற காசு கொடையாக அளித்தனர். இதன் மூலம் கீரங்குடி என்னும் ஊர் சோழமண்டலத்தின் ஒரு பகுதியாக இருந்தது என்பது இக்கல்வெட்டின் மூலம் உறுதியாகிறது(A.R.E.314).

மண்டலம்

(அ) தொண்டை மண்டலத்தை முதலாம் இராசராசன் வென்ற பிறகு அதற்கு அவனுடைய விருது பெயர்களில் ஒன்றான "ஜயங்கொண்ட சோழன்"[75] என்பதை இம்மண்டலத்திற்கு சூட்டி ஜயங்கொண்ட சோழ மண்டலம் என்று அழைத்தனர். முதலாம் இராசராசன் வெளிச்சேரிக்கு வந்து சென்ற பிறகே தொண்டை நாட்டை பிடித்திருத்தல் வேண்டும் என்பதை இவனுக்குப் பிறகு இக்கோயிலுக்கு தானம் அளித்த முதலாம் இராசேந்திரன் காலக்கல்வெட்டின் மூலம் புலனாகிறது. இவனுக்கு பிறகு "ஜயங்கொண்ட சோழ மண்டலம்" என்றே வழங்கலாயிற்று (A.R.E.308,309,302,307,303).

கோட்டம்

பல்லவர் ஆட்சியிலும், சோழர் ஆட்சியிலும் பாண்டியர் ஆட்சியிலும் தொண்டை மண்டலத்தின் உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்த நிலபாகுபாடே கோட்டம் என்று பெயர் பெற்றது. கோட்டம் என்பது இக்கால மாவட்ட பிரிவினையை ஒக்கும்.[76]

முதலாம் குலோத்துங்கன் காலத்தில் புலியூர்க் கோட்டத்தை "குலோத்துங்க சோழ வளநாடு" என்று தன்னுடைய பெயரைக் கொண்டு அழைத்தான் என்பதை இவனுக்கு பிறகு ஆட்சிசெய்த இரண்டாம் இராசராசன் கால வெளிச்சேரி கல்வெட்டில் புலியூர்க் கோட்டமென்னும் குலோத்துங்க சோழ வளநாடு என்று கூறியுள்ளான். இதற்கு பிறகு குலோத்துங்க சோழ வளநாடு என்ற பெயரிலேயே இக்கோட்டம் வழங்கலாயிற்று (A.R.E.307,303).

ஊர்ப்பெயர்

இரண்டாம் பராந்தகன் மற்றும் ஆதித்த கரிகாலன் காலத்தில் இவ்வூர் வெளிச்சேரி என்றே வழங்கி வந்தது என்பதை இவர்கள் காலக் கல்வெட்டின் மூலம் தெரிகிறது (A.R.E.315,306,317).

முதலாம் இராசராசன் காலத்தில் இவ்வூர் வெளிச்சேரி கிராமம் என்று வழங்கப்பட்டிருந்தது என்பதை இவனது கால வெளிச்சேரி முதலாம் இராசேந்திரன் காலத்தில் இவ்வூர் "வெளிச்சேரி பிரம்மதேயம்" என்று கூறப்பட்டிருந்தது என்பதை இவனுடைய ஆட்சிக்காலக் கல்வெட்டில் தெரிகிறது (A.R.E.308,309,302,305).

பிரம்மதேயம் என்றால் பிராமணர்கட்கு இறையிலியாக உரிமை செய்யப்பட்ட நிலம், ஊர்.[77] இதன் மூலம் முதலாம் இராசேந்திரன் காலத்தில் வெளிச்சேரி பிராமணர்களுக்கு தானமாக அளிக்கப்பட்ட ஊராகும்.

இரண்டாம் இராசரான் காலத்தில் இவ்வூர் ''வெளிச்சேரி என்கிற ஜினசிந்தாமணி சதுர்வேதி மங்கலம்'' என்று வழங்கி வந்தது என்பதை இவனது ஆட்சி காலக் கல்வெட்டால் அறியலாம்

சதுர்வேதி மங்கலம் என்றால் நான்கு மறையிலும் ஆறு அங்கங்களிலும் வல்ல பிராமணர்களின் வாழ்தற்கேற்ற வண்ணம் அரசர்களால் இறையிலியாகக் கொடுக்கப்பட்ட தனியூரோ, சிலவூர்கள் சேர்ந்த பகுதியோ சதுர்வேதி மங்கலம் எனப்படும்.[78]

சதுர்வேதி மங்கலங்கள், இறையிலியாகத் தானம் செய்த அரசன் பெயராலும், அரசுவழி அரசியர் பெயராலும் அமைக்கப்பட்டிருப்பதை வெளிச்சேரி கல்வெட்டின் மூலம் அறியலாம்.

முதலாம் குலோத்துங்கனின் பட்டத்தரசி மதுராந்தகி. இவள் இரண்டாம் இராசேந்திர சோழனின் மகள், இவளுக்கு ஜின சிந்தாமணி என்னும் பெயரும் இருந்தது.[79] இவளுடைய பெயரைச் சதுர்வேதி மங்கலத்தோடு சேர்த்து ''ஜினசிந்தாமணி சதுர்வேதி மங்கலம்'' என்று வெளிச்சேரியை அழைத்தனர்.

மூன்றாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் மற்றும் கோப்பெருஞ்சிங்கன் காலக் கல்வெட்டிலும் வெளிச்சேரியை, வெளிச்சேரி என்கிற ஜினசிந்தாமணி சதுர்வேதி மங்கலம் என்றே வழங்கி வந்தது(A.R.E.303,313,314). இதுவே வெளிச்சேரி கல்வெட்டில் வரும் ஊர்ப் பெயர் மாற்றமாகும்.

இ) சமயம்

வேளச்சேரி கல்வெட்டில் சமயம் பற்றிய செய்தி குறைவாகவே கிடைக்கின்றன. தொண்டை மண்டலத்தில் நிலைபெற்றிருந்த சமயங்களில் சைவம் மற்றும் வைணவம் ஆகிய இரண்டு சமயங்கள்

வேளச்சேரியிலும் அவ்வூரை சுற்றியுள்ள ஊர்களிலும் செல்வாக்கு பெற்று விளங்கின. சோழர் காலம் பக்தி இயக்கத்தில் செல்வாக்குட்பட்ட காலம். அதனால் கோயில் கட்டுதல், கட்டிய கோயில்களுக்கு நிலம், கால்நடை, காசு ஆகியவற்றை தானமாக அளிப்பதில் சோழர்கள் முனைப்பாக விளங்கினர். அது மட்டுமின்றி சோழர் அரசின் செல்வாக்கு கோயில் வழிபாட்டுடன் பின்னிப் பிணைந்துள்ளது. அரசன் கோயிலுக்கு கொடை அளிப்பதன் மூலம் மக்களிடையே தன் செல்வாக்கினை உயர்த்திக் கொள்கின்றனர்.

சைவம்

தொண்டை மண்டலத்தில் சைவ சமய குரவர்கள் வருகையுடன் செல்வாக்கு பெறுகின்றது. பல்லவர் காலத்தில் தொடங்கிய பக்தி இயக்கம், தொண்டை மண்டலத்தில் சைவ சமய எழுச்சிக்கு காரணமானது. வேளச்சேரி தண்டீஸ்வரர் கோயில் சுந்தர சோழன் காலத்தில் கட்டப்பட்டது. இதன் மூலம் சைவம் பல்லவர் காலத்தில் இருந்து சோழர் காலத்திலும் எழுச்சிப் பெற்று இருந்தது.

வைணவம்

வேளச்சேரி யோக நரசிம்மர் கோயில் பிற்காலச் சோழர் காலத்தில் கட்டப்பெற்றது. இதன் மூலம் தொண்டை மண்டலத்தில் வைணவம் செல்வாக்கு பெற்றிருந்த தன்மையை உணர முடிகிறது.

கோயில்களில் திருவமிர்துக்கும், எப்பொழுதும் எரியும் நுந்தா விளக்கும். சந்தி காலங்களில் (7 நாழிகை) மட்டும் எரிய வைக்கும் சந்தி விளக்கும் முதலீடாக பொன்னும், ஆடுகளும் நிவந்தம் செய்யப் பெற்றன. கோயில்களுக்குரிய நாள் வழிபாட்டிற்கு சோழ மன்னர்கள் அளித்துள்ள நில நிவந்தங்கள் பலவாகும். இத்தகைய அறங்களைச் சோழர்கால அரசியல் அதிகாரிகளும், பெருமக்களும் செய்துள்ளனர் என்பதை சோழர்கால வெளிச்சேரி கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

இவ்வாறாக சைவ, வைணவ கோயில்களுக்குரிய தானங்கள் பலவற்றையும் சோழ மன்னர்களும், அரசியர்களும், அரசியல் தலைவர்களும், செல்வர்களும், அன்பர்களும் செய்துள்ளனர். இவ்வழியே சோழர் காலத்தில் கோயிற் பணிகள் மிகப் பலவாக வளர்ச்சியடைந்தது. சைவ சமயம் தக்க உயர்வைப் பெற்றது. பல்லவர் காலத்திலேயே சைவமும், வைணவமும் தழைத்ததெனினும் அவற்றின் ஒழுங்க முறைகளெல்லாம் சோழர் காலத்திலேயே சீர் செய்யப்பெற்றன.

கல்வெட்டில் இறைவனின் பெயர்கள்

வெளிச்சேரி தண்டீஸ்வரர் கோயிலில் வரும் எல்லாக் கல்வெட்டுகளிலும் பெரும்பாலும் இறைவனின் பெயர் "திருத்தண்டீசுவரா்" என்றே கூறப்பட்டுள்ளது.

இரண்டாம் பராந்தகனின் ஐந்தாம் ஆட்சி ஆண்டு (கி.பி.962) கல்வெட்டிலும், முதலாம் இராசேந்திர சோழனின் மூன்றாவது ஆட்சி ஆண்டு (கி.பி.1015) கல்வெட்டிலும் இறைவனின் பெயர் "திருத்தண்டீஸ்வர தேவர்" என்றே கூறப்பட்டுள்ளது (A.R.E.315,308,309).

இரண்டாம் பராந்தகனின் ஏழாம் ஆட்சி ஆண்டு (கி.பி.964) கல்வெட்டில் இறைவனின் பெயர் "திருத்தண்டீஸ்வரத்து மகாதேவர்" என்று கூறப்பட்டுள்ளது(A.R.E.306).

இரண்டாம் இராசராசனின் ஒன்பதாம் ஆட்சி ஆண்டு (கி.பி.994) கல்வெட்டில் "திருத்தண்டீஸ்வரத்து திருக்கற்றளி மகாதேவர்" என்று இறைவனைக் குறிப்பிட்டுள்ளது (A.R.E.312).

இதன் மூலம் இவனுடைய காலத்தில் தான் இக்கோயில் திருக்கற்றளியாக உள்ளது என்பது உறுதியாகிறது.

முதலாம் இராசேந்திர சோழனின் ஆறாவது (கி.பி.1018) மற்றும் பத்தாவது (கி.பி.1022) ஆட்சி ஆண்டு கல்வெட்டுகளில் இறைவனின் பெயர் திருத்தண்டீஸ்வரமுடைய மகாதேவர் என்று குறிப்பிட்டுள்ளது (A.R.E.302,311,305).

இரண்டாம் இராசராசனின் ஏழாவது ஆட்சி ஆண்டு (கி.பி.1153) கல்வெட்டில் இறைவனின் பெயர் "திருத்தண்டீஸ்வரமுடைய நாயனார்" என்று கூறுகிறது (A.R.E.307).

மூன்றாம் குலோத்துங்கனின் இருபத்தைந்தாவது ஆட்சி ஆண்டு (கி.பி.1203) கல்வெட்டில் இறைவனை "திருத்தண்டீஸ்வரமுடைய மகாதேவர்" என்று அழைக்கப்பட்டுள்ளார்(A.R.E.310).

மூன்றாம் இராசராசனின் இருபத்திரண்டாவது ஆட்சி ஆண்டு (கி.பி.1238) கல்வெட்டிலும், இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனின் பதினெட்டாவது ஆட்சி ஆண்டு (கி.பி.1261) கல்வெட்டிலும் இறைவன் "உடையார் திருத்தண்டீஸ்வரமுடைய நாயனார்" என்று அழைக்கப்பட்டார்(A.R.E.313,314).

செல்லியம்மன் கோயில் கல்வெட்டில் வரும் இறைவனின் பெயர்கள்

கோப்பார்த்திவேந்தராதிபதிவர்மனின் பத்தாவது ஆட்சி ஆண்டு (கி.பி.996) கல்வெட்டில் இறைவியின் பெயர் சப்தமாத்ருக்கள் என்று வழங்கியுள்ளது(A.R.E.316).

ஆதித்த கரிகாலனின் நான்காவது ஆட்சி ஆண்டு (கி.பி.973) கல்வெட்டில் இவ்வூர் இறைவியின் பெயர் காளாபடாரி என்று குறிக்கப்பட்டுள்ளது.

பிடாரி(படாரி) — சிற்றூர்களில் ஊர்க்காவல் தெய்வமாக அமைக்கப்படும் பெண் தெய்வம். பிடாகைக்குரிய பெண்தேவதை. கிராமத்தில் அல்லது ஊர் நடுவில் அமைக்கப்பெறும் கிராம தேவதை.[80]

ஈ) சமுதாயம்

சோழ மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் சங்க காலத்தைப் போல் மக்கள் நல்ல நிலையில் இருந்தார்கள். உழவுத் தொழிலே தலையாயத் தொழிலாக இருந்ததெனினும் கைத்தொழில்களும் வழக்கத்தில் இருந்து வந்தன மற்றும் வாணிகம் தழைக்கச் சோழ மன்னர்கள் பெரிதும் உறுதுணையாக இருந்தார்கள். உணவு, வாணிகம், கைத்தொழில் என்ற மூன்றும் நிலைபெற்றிருக்கும் நாட்டில் மக்கள் செல்வ வளத்துடன் நாகரிகம் பெற்றிருப்பது இயல்பாகும். எனவே சோழராட்சியில் மக்கள் நல்வாழ்வுடன் பெரும்பாலும் இருந்தனர்.

சோழர் ஆட்சியில் தொழில் காரணமாகவே பலசாதிகள் வழக்கிலிருந்தன. வேளச்சேரியிலும் தொழில்களைக் கொண்டே சாதிகள் பிரிந்திருந்தன. உழவுத் தொழிலையே வழி வழியாக மேற்கொண்டு நிலங்களை அனுபவித்து வருபவர்களை வெள்ளாளர் என்றும், வேதங்களையும் சாத்திரங்களையும் ஓதுபவர்கள் பிராமணர் என்றும் பிரிந்து வாழ்ந்தனர்.

வெள்ளாளர்

தொண்டை மண்டலத்தில் வெள்ளாளர் பரவலாக இருந்தனர். சோழப் பேரரசில் மிகுதியான எண்ணிக்கையில் காணப்படுபவர்கள் இவர்களே. இவர்களே மிகவும் தொன்மையானவர்கள். இவர்கள்

உழவுத் தொழிலையே வழி வழியாக மேற்கொண்டு நிலங்களை அனுபவித்து வந்த குடிமக்களாவார்கள். இவ்வகை நிலங்களுக்குக் குடிமக்கள் அரசிறை செலுத்த வேண்டும். இவர்களுக்கு இறைகுடிகள் என்ற மற்றொரு பெயரும் உண்டு. உயர் அதிகாரிகளோடு தொடர்பும், அரச ஆணைகளைப் பெறுதலும், அவற்றை செயற்படுத்துதலும் இவர்களின் பணியாகும். இவர்களுள் குறைந்த நிலமுடையவர்கள் தாமே உழவுத் தொழிலை நேரில் செய்து வந்தனர். அதிக நிலமுடையவர்கள் பிற குடிகளைக் கொண்டு தம் நிலங்களை உழுவித்து வாழ்ந்து வந்தனர். இவர்கள் பெருங்குடிகள் என்றும் அந்நாளில் வழங்கப்பட்டுள்ளனர்.

பிராமணர்கள்

பிராமணர்கள் வாழும் ஊர்களை பிரம்மதேயம், சதுர்வேதி மங்கலம் என வழங்கப்பட்டன. பொதுவாக பிராமண ஊர்கள் அரசரால் ஏற்படுத்தப்பட்டவை. பிராமணர்களுக்குத் தனி நிலங்களும், தானமாக அளிக்கப்பட்டவை. இவர்கள் வாழும் குடியிருப்புக்கள் அனைத்தும் இவர்களின் நிர்வாகத்திற்கே விடப்பட்டன. அரசனுடைய எல்லா விதமான வரிகள், கட்டணங்கள், கடமைகள், ஆணயங்கள், முதலியவற்றினின்றும் முழு விலக்கு அளிக்கபட்டன. ஒவ்வொரு கிராமத்தின் உள்ளாட்சிக்கும் ஒரு மகா சபை அமைத்துக் கொண்டு தாமே பொறுப்பேற்றுக் கொண்டார்கள். கோயிலின் பாதுகாப்புப் பணியும் அறக்கட்டளைகளும் பிராமணரிடையே ஒப்புவிக்கப்பட்டன. பிராமணர்கள் வேதங்களையும், சாத்திரங்களையும் நன்கு பயின்று சீறும் புலமையும் பெற்றதினால் இத்தகைய செல்வாக்கினைப் பெற்றார்கள். பிராமணர்களிலேயே சில பதவிகளை கொண்டு பிரிந்திருந்தார்கள் அவற்றை இனி காண்போம்.

ஆளுங்கணத்தார்

ஊராட்சி செய்யும் சபையோர் அல்லது கணப்பெருமக்கள் ஆளுங்கணத்தார் ஆவர்.[81] இவர் பிராமணராகவே இருப்பார்.

க்ரமவித்தன்

வேதத்தின் கிரமபாடத்தில் வல்ல பிராமணர்களின் பழைய பட்டப்பெயராகும்.[82] சிவபிராமணரும், வைணவ பிராமணரும் இப்பட்டப் பெயரினைப் பொதுவாகப் பெற்றிருந்தனர்.

பட்டர்

பட்டர் என்றால் அந்தணர் என்று பொருள். பட்டர்கள் கோயில்களில் பூஜை செய்பவராக இருந்து வந்தனர். வெளிச்சேரியிலும் பட்டர்கள் இருந்தனர் என்பதை அங்குள்ள கல்வெட்டுகளின் மூலம் அறியலாம்.

பிச்சன்

பிச்சன் என்றால் சிவனடியார் என்று பொருளாகும். சிவனுக்கே அனைத்தும் சமர்ப்பணம் என்று வாழ்ந்தவர்கள் ஆவார்.[83]

கரணத்தார்

கிராமத்தின் கணக்கு வழக்குகளை மேற்பார்வையிட்டு வந்தனர். இவரை "கிராம கணக்கர்" என்பர்.[84] பிற்காலத்தில் இதுவே "கர்ணம்" என்று ஆனது.

சதுர்வேதி பட்டன்

'நான்கு வேதங்களையும் முறையாக கற்றுச் சொல்லும் அந்தணர்கள்'.[85] இவர் கோயிலில் பிள்ளைகளுக்கு வேதங்களை கற்றுத் தந்தார்கள்கள்.

தேவரடியார்

சிவபிராமணன் திருக்கோயிலின் இறையன்பிற் சிறந்த தொண்டராகப் பணி செய்பவர்.[86] இவர்கள் கோயிலுக்கே தம்மை அர்பணித்துக் கொண்டார்கள்.

மக்கள் பெயர்

வேளச்சேரி கல்வெட்டில் மக்கள் பெயர்கள் மிகுதியாக குறிக்கப் பெறுகின்றன. பிராமணர் மற்றும் வெள்ளாளர் ஆகிய பிரிவினர் குறிக்கப் பெறுகின்றனர்.

இவர்களில் வெள்ளாளர் பிரிவினர் பெயர் குறைவாகவே உள்ளது. அவை பழநத்தடிகள், இவருடைய தம்பி அண்ணாமலை ஆகிய பெயர்கள் கல்வெட்டில் உள்ளன.

பிராமணர்களின் பெயர்களே மிகுதியாகக் குறிக்கப்பெற்றன. காளிய பட்டர், தென்னூர் தேவகுமார க்ரமவித்தன், செருப்பள்ளி நாராயணபட்டன், குலபுத்தி நாரணக் கிரமவித்தன், புதுச்சேரி பத்தங்கி சட்டந் சதுர்வேதி பட்டந், இவன் மகன் நாராயணபட்டந், அமுதன் பிச்சன் செம்பியன் கிழாநாட்டுக்கோன், பத்தங்கி கால குமார க்ரமவித்தன், ஆற்றூருடையான் மாணிக்கன், பத்தங்கி சட்ட பட்டந், கீரங்குடியில் மருதுடையான் சோறன் அரியாயானென் போன்ற பெயர்கள் வேளச்சேரி கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

மகளிர் நிலை

பெண்கள் சொத்துரிமை பெற்றிருந்தனர். சோழர் காலத்தில் பெண்கள் சுதந்தரமாக வாழ்ந்து வந்தனர். கோயில்களுக்காக பெண்மணிகளும் கொடைகள் அளித்துள்ளனர் என்று வேளச்சேரி கல்வெட்டு கூறுகிறது.

சபை

சோழர் காலத்தில் ஊர் சபையோர் கூடும் (மண்டபம்) இடம் சபை எனப்படும். இவ்விடத்தை ப்ரமஸ்தானம், தர்ம்மசநம் என்று வழங்கப்பட்டிருந்தது என்பதை வேளச்சேரி கல்வெட்டு தெரிவிக்கிறது(A.R.E.306).

உ) பொருளியல் வாழ்க்கை

வேளச்சேரி, சோழர் காலம் முதல் சிறப்பு பெற்றுள்ள ஊர். இவ்வூரில் கிடைக்கும் கல்வெட்டுகளைக் கொண்டு சோழர் காலம் முதல் இவ்வூர் பொருளியல் வாழ்க்கை எந்த தரத்திலிருந்தது என்பதை ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்பு

விளக்கெரிப்பதற்கும், திருவமிர்துக்கும் கோயிலில் கால்நடைகளைத் தானமாக அளித்தனர், அளிக்கும் போது 'சாவா மூவா பேராடு' என்று கூறுவர்.

சாவா மூவா பேராடு -- சாவா மூவா பேராடு என்றால் என்றும் முதலீடாக வைத்த எண்ணிக்கையில் குறையாமல் ஈடு காக்கும் பேராடு என்று பொருள்.[87]

இரண்டாம் பராந்தகளின் ஐந்தாவது ஆட்சி ஆண்டு (கி.பி.962) கல்வெட்டின் மூலம் ஒரு நந்தா விளக்கெரிக்க தொண்ணுறு சாவா மூவா பேராடுகளை தானமாக வெளிச்சேரி ஊர் சபையோரில் ஒருவர் அளித்தார்(A.R.E.315).

முதலாம் இராசராசனின் ஒன்பதாவது ஆட்சி ஆண்டு (கி.பி.998) கல்வெட்டில் சதுர்வேதி பட்டந் என்பவன் ஒரு நுந்தா விளக்கெரிக்க 90 சாவா மூவா பேராடுகளை தானமாக அளித்தான். இதன் மூலம் பிராமணர்களும் கால்நடைகளை வளர்த்தனர் என்பதை அறிகிறோம்(A.R.E.312).

முதலாம் இராசேந்திர சோழனின் மூன்றாவது ஆட்சி ஆண்டு (கி.பி.1015) மற்றும் ஆறாவது ஆட்சி ஆண்டு(கி.பி.1018)

கல்வெட்டுகளில் சந்தி மற்றும் நுந்தா விளக்கெரிக்க 90 சாவா மூவா பேராடுகளை தானமாக அளித்தனர். இத்தானத்தை அளித்தவர் பிராமணராகவே இருந்தனர்(A.R.E.308,309,302).

தொண்டை நாட்டில் கால்நடை கொடை நிலக்கொடையுடன் ஒப்பிடத்தக்கதாய் உள்ளது. முதலாம் இராசேந்திரன் காலத்தோடு ஆடு தானமாக அளிக்கும் வழக்கம் வேளச்சேரியில் நின்றுவிட்டது.

சோழர்கள் தொண்டை நாட்டில் பொருளியல் வாழ்க்கையை வேளாண்மை மற்றும் பொருளாதாரத்தோடு இணைந்த வாழ்க்கையாக மாற்ற முயற்சி செய்தனர். அந்த முயற்சியில் படிப்படியாக மாற்றம் கொண்டு வர ஏற்பாடு செய்தனர். அதனால் கால்நடை வளர்ப்பினையும் போற்றினர். காலப்போக்கில் கால்நடை வளர்ப்பு செல்வாக்கிழந்து வேளாண்மை மேலோங்கி நின்றது எனலாம்.

வேளாண்மை

சோழர்கள் தமது ஆட்சிக் காலத்தில் பொருளாதாரத்தை வளர்ப்பதில் பெரும்பங்கு வகித்தனர். மேலும் நிலங்களை அனுபவித்து வந்தோரின் உரிமையை அடிப்படையாக வைத்து, அந்நிலங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவற்றுள் உழவுத் தொழிலையே வழி வழியாக மேற்கொண்டு நிலங்களை அனுபவித்து வந்த குடிகளுக்கே உரிமை என்பது வெள்ளான் வகையில் ஒன்றாகும். இவ்வகை நிலங்களுக்கு குடிமக்கள் அரசிறை செலுத்த வேண்டும். இவ்வகையில் நிலங்களை அனுபவிக்கும் குடிமக்கள் "இறைகுடிகள்" என்று கூறப்பட்டுள்ளனர்.

மற்றொரு வகை நிலங்கள் தானமாக அளிக்கப்பெற்றவையாகும். அவை தேவதானம், திருவிடையாட்டம், பள்ளிச்சந்தம், மடப்புறம் சாலபோகம், பிரம்மதேயம் என்று

வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் மடப்புறம் என்பது மடங்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம், பிரம்மதேயம் என்பது வேதங்களையும் சாத்திரங்களையும் நன்கு பயின்று சீலமும் புலமையும் படைத்த பார்ப்பணர்க்கு வழங்கப்பெற்ற நிலம்.[89] இவ்வகை நிலங்களெல்லாம் பெரும்பாலும் இறையிலி நிலங்களாகவே செய்யப்படுவது வழக்கம். இவற்றை இறையிலியாகப் பெற்றவர்கள் அரசாங்கத்திற்கும் ஊர் சபைக்கும் எத்தகைய வரியும் கொடாமல் இவற்றை அனுபவித்துக் கொண்டிருக்கலாம்.

பிறிதொருவகை நிலங்கள், சில குறிப்பிட்ட காரியங்களைச் செய்தற் பொருட்டு அவற்றைச் செய்து வருவோர்க்குச் கொடுக்கப் பெற்றவையாகும். இவற்றை காணி, சீவிதம், போகம், விருத்தி, பற்று, புறம், பட்டி, முற்றூட்டு என்று அக்காலத்தில் வழங்கி வந்தனர் இவையெல்லாம் இறையிலி நிலங்களே என்பது தேற்றம்.[90]

பார்ப்பணர், அரசரிடத்தும் பிறரிடத்தும் பிரம்மதேயமாக வாங்கிய ஊரிலுள்ள நிலங்களை தம் தம் பங்கு வீதப்படி அனுபவித்துக் கொண்டு வருவது வழக்கம். அவ்வூருக்குப் பிரம்மதேயம் என்று பெயர்.[91]

சில ஊர்களில் ஒரு பகுதி தேவதானமாகவும், மற்றொரு பகுதி பிறவகுப்பினர்க்குரிய வெள்ளான் வகை நிலமாகவும் இருந்துள்ளன. வேறு சில ஊர்களில் ஒரு பகுதி பிரம்மதேயமாகவும் மற்றொரு பகுதி வெள்ளான் வகையாகவும் இருந்துள்ளன. இக்காலத்தில் சென்னையிலுள்ள வேளச்சேரி என்னும் ஊரில் ஒரு பகுதி பிரம்மதேயமாகவும், மற்றொரு பகுதி வெள்ளான் வகையாகவும் இருந்தன என்பது கல்வெட்டுகளால் புலப்படுகின்றது(A.R.E.306).

மஞ்சிக்கம்	---	தரிசு. பயிரிடப்பெறாது கிடக்கும் பரந்த நிலம்.[92] புறம் போக்கு நிலம் வரியற்ற வெற்று நிலம்.[93]

பிடாகை	---	சிற்றூர், ஒரு பெரிய நகரையோ, தலைநகரையோ சூழ்ந்துள்ள சிற்றூர்கள் பிடாகையாகும்.[94]
உழக்கு	---	காணி நிலம்.
தடி நிலம்	---	அகன்ற விளைநிலத்தை பல துண்டுகளாக வகுத்து வரப்பிட்டுப் பிரித்த நிலம்.[95]
குழி	---	நில அளவை. பன்னிரண்டடி சதுரப் பரப்புடைய நிலம் ஒரு குடியாகும். இக்குழி நாடுதோறும் மாறுபடும்.[96]
இறையிலி	---	அரசுக்குரிய இறைவரி நீக்கப் பெற்ற நிலம் நஞ்சை, புஞ்சைகளின் விளைவுகளைக் கொண்டு பெறும் வரிகளையும் அப்பகுதிகளில் குடியிருப்போர் தரும் தேவை, குடிமை முதலிய வருவாய்களையும் அரசு நீக்குதல் இறையிலியாகும்.[97]
குடி நீங்கா இறையிலி	---	குடியிருப்பு உரிமை எக்காலத்துக்கும் நீங்காத இறைவரி இல்லாத நிலம்.[98]
அமஞ்சி	---	கூலி இல்லாமல் வேலை செய்வர்.[99]

கோப்பார்த்திவெந்தராதிபதிவர்மனின் பத்தாவது ஆட்சி ஆண்டு (கி.பி.966) கல்வெட்டில் 4 தடி நிலம் என்னும் 200 குழி என்னும் 531½ காணி நிலத்தை சப்தமாத்ருக்களுக்கு நாள்தோறும் (நிசதம்) திருவமிர்து படைக்க தானமாக அளித்தனர்(A.R.E.316).

"ஸ்வஸ்தி ஸ்ரீ கொப்பார்த்திவெந்தராதிபதிவ[ர்*]ம்மற்கு யாண்டு பத்தாவது புலியூ

ர் கொட்டத்து வெளிச்செ[ரி] மஹாசபையோம் எம்மூரில் சப்தமார்ளுக்களு

க்குச்சொழநாட்டுமழநாட்டு [ம]ழ நாட்டுத் திருவெட்பூர்த்திருவெட் (ப்) பூருடையான் தெவடி

கள் அசந்தரகாலமு[ம்*] நிச்சற்படி வைத்த திருவமிர்து ஒன்று இதனுக்க இவ

ன் விலைக்கொண்டு [வை]வத்த பூமி இவ்வூர்த் தெ[ன்]கழனிப் பூதிபாக்கன்

செறு[வு த]டி நாலினாலு[ம்*] [நி][லம்*] [யிரி] [ணி] ற்றுக்குழி இரண்டெற்றிக்குழிஐஞ்ற்று இரண்டெற்றிக்குழிஐஞ் ற்று

முப்பத்தொன்றரையெ [அ] [வை*]ரக் [கா]ணியாலும் எப்பெர்ப்பட்ட இறையும்

ஒழியபணித்து இறை இழிச்சிக் குடுத்தொம் மஹா சபையொம்

இபூமி நாங்களெ கொண்டு நிசதம் ஒரு திருவமிர்து செய்விக்க [க்*]கடவொம் இஶ்ரீகொ

யிலுடைய மா[த்ரு]சிவெ[ர]ாம் கடைக்கூட்டி வெட்டுவிச்சார் க[ர*] ளியபட்டர்."[100]

ஆதித்த கரிகாலனின் நான்காம் ஆட்சி ஆண்டு (கி.பி.973) கல்வெட்டில் மஞ்சிக்கம் நிலத்தை இரண்டு நந்தா விளக்கெரிக்கவும் திருவமிர்துக்கும் சேர்த்து தானமாக அளித்தனர்

"ஸ்வஸ்தி ஸ்ரீ கொப்பரகெசரி பந்ம[ர்*]க்கு யாண்டு நான்காவது புலியூர் கொட்டத்

து வெளிச்செரி சபையொம் எம்மூர்க் காளாபடாரிக்கு அந்தராதி

த்தவல் லொரு நந்தாவிளக்கும் இரண்டு திருவமிர்துக்கு ஆக வைத்த

மஞ்சிக்கம் தென்கழன்நிக்கிழ் கழிககாட்டு பூமிக்கு கிழ்பாற்கெல்

லைய் செருப்பள்ளி நாராயணபட்டனும் குலபுத்தி நாரணக்கிரமவி

[த] தநம் உடைய பூமியின் மெற்க்கும்

தென்பாற்கெல்லை குட்டிமஞ்சுரச் சட்டய [விக்ரம] சந்மநும் இவன் தம்பியும் உடை[ய]

பூமியின் வடக்கும் மெ[ல்*]பாற்கெல்லை காலின் கிழக்கும் வடபாற்கெல்லை வ எ*"[101]

முதலாம் இராசராச சோழனுடைய பத்தாவது ஆட்சி ஆண்டு (கி.பி.995)கல்வெட்டில் வெளிச்சேரி கிராமத்தில் உள்ள தரமணி மகாதேவர்க்கு ஒரு சந்தி விளக்கெரிக்கவும், திருவமிர்து படைக்கவும் நிலத்தை தானமாக அளித்த செய்தி இக்கல்வெட்டு தருகிறது(A.R.E.304).

முதல் இராசராச சோழனுடைய புதல்வனாகிய கங்கை கொண்ட சோழன் என்னும் முதலாம் இராசேந்திர சோழனின் ஆறாவது ஆட்சி ஆண்டு (கி.பி.1018) கல்வெட்டில் இவனுடைய ஆட்சிக்காலத்தில் பிராமணர் ஊரில் இருந்த பிற வகுப்பினரின் நிலங்கள் விற்கப்பட வேண்டும் என்ற உத்தரவு நிறைவேற்றப்பட்டு வந்தது என்பதை வெளிச்சேரியிலிருந்த மற்ற வகுப்பினரின் நிலங்கள் அரசனது ஆணையின்படி அவ்வூரிலுள்ள திருத்தண்டீஸ்வரமுடையார் கோயிலுக்கு விற்கப்பட்டன என்று தண்டீஸ்வரர் கோயில் கல்வெட்டொன்று கூறுகின்றது(A.R.E.311).

இவ்வாறு நிலவுரிமைகளை மாற்றியமைக்க நேரும்போதெல்லாம் அந்நிலங்களுக்குப் பதிலாக வேறு நிலங்களையாதல் அவற்றிற்குரிய விலைப்பொருளையாதல் உரியவர்களுக்குச் சோழ மன்னர்கள் கொடுத்து வந்தனர் என்று வெளிச்சேரி கல்வெட்டு கூறுகிறது.

முதலாம் இராசேந்திர சோழனின் பத்தாவது ஆட்சி ஆண்டு (கி.பி.1022) கல்வெட்டில் வெளிச்சேரி சபையோர் 1500 குழி நிலத்தை கோயிலுக்கு விற்று 13 காசுகளைப் பெற்றனர். இந்நிலம்

இறையிலியாக மாற்றப்பட்டது. இதன் மூலம் சோழர்களின் நில உரிமைகள் இவ்வாறு தான் இருந்தது என்பதை இக்கல்வெட்டின் மூலம் அறிகிறோம்(A.R.E.305).

மூன்றாம் குலோத்துங்க சோழனின் இருபத்தைந்தாவது ஆட்சி ஆண்டு (கி.பி.1203) கல்வெட்டில் திருவான்மியூரில் உள்ள திருநாவுக்கரசு மடத்திற்கு இருபது வேலி நிலத்தை குடிநீங்கா இறையிலியாக அளித்தனர் (A.R.E.303).

"ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவநச்சக்கரவத்திகள் மதுரையும் பாண்டியந் முடித்தலையு
ங் கொண்டருளிய குலொத்துங்க சொழ தெவர்க்கு யாண்டு உமரு ஆவது செயங்கொண்ட சொழ மண்டலத்துக் குலொத்துங்க சொழ வளநாட்டுத் திருவாந்மியூர் திருநாவுக்கரைசு மடப்புறத்து
க்கு வெளிச்செரியான சினசிந்தாமணிச் சதுர்வேதி மங்கலத்துப்ப
ள்ளிக்கழனியில் செதிராய தெவர் மடப்புற இறையிலியாக இட்ட நிலம்
இருபத்து வெலிக்கும் குடிநீங்கா மடப்புற இறையிலியாக தடியுள்ளவரியெழுதி யெழுத்திட்டுக் குடுத்தொம் மஹா சபை யொம் பணியால் வெளிச்செரி உடையார் திருச்சிற்றம்பலமுடை யாந் பிச்சன் உத்தமபிரியன் எழுத்து".

இதுவே வேளச்சேரி கல்வெட்டில் வரும் வேளாண்மை பற்றிய செய்தியாகும்.

வரிகள்

வெளிச்சேரி கல்வெட்டில் இரண்டு வரிகள் குறிக்கப்பெறுகின்றன. அவை சோழர் காலத்தில் வழக்கத்திலிருந்தன. தடியுள் வரி, அந்தராயம் என்ற சொற்கள் வரியை குறிக்கபயன்படுத்தப் பெறுகின்றது.

அந்தராயம்

இவ்வூர் உள்வரி என்று பொருள் கொள்ளப் பெறுகின்றது (A.R.E.306). அரசுக்குத் தனிப்பட்ட முறையில் வரியாக வரும் வருமானம் என்று பொருளாகும். ஊர்ச்சபை நாட்டவர் போன்ற குழுக்களுக்கு அளிக்கும் வரி அந்தராயமாகும்.[102]

தடியுள்வரி

அகன்ற விலை நிலத்திற்கு உண்டான வரி [103] என்று பொருள் கொள்ளப் பெறுகின்றது (A.R.E.303).

ஏரி

சோழர்கள் தொண்டை மண்டலத்தின் நிலப்பரப்பு கிடைக்கும் இடங்களில் எல்லாம் ஏரிகளை வெட்டி நீர்ப்பாசன வாய்ப்புகளை உருவாக்கினர். அந்த மரப்பினைப் பின்பற்றி வேளச்சேரி பகுதியிலும் ஓர் ஏரி இருந்திருக்கிறது. அந்த ஏரியின் பெயர் *அதம்புழானழி ஏரி* என்று குறிக்கப்பெறுகின்றது (A.R.E.306).

தண்டம்

தண்டனைக்காக பணம் வசூலிக்கப்படும் அல்லது அவர்கள் நிலத்தை விற்று அவர்களுடைய தண்டனைப் பணத்தை எடுத்துக்கொண்டு மீதி பணத்தை அவர்களிடமே அளிப்பர். இத்தண்டம் வெளிச்சேரி கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது (A.R.E.306).

நாணயங்கள்

பொன்னாலும் பெரும்பாலும் செய்யப்பட்ட காசுகள் அக்காலத்தில் வழக்கில் இருந்தன. காய்ச்சி உரக்கினும் மாற்று குன்றாதது என்று அதிகாரிகளால் ஆராய்ந்து உறுதி செய்யப்பட்டதற்கு அடையாளமாகத் துளையிடப் பெற்ற

"துளைபொன்" னும் வழக்கிலிருந்தது. சோழர் கால நாணயங்கள் ***"பொன்" "காசு" "பழங்காசு" "பணம்" "மாடை" "காணம்"*** என்றும் பெயர் பெற்றிருந்தது. இனி வேளச்சேரி கல்வெட்டில் வரும் காசுகளைக் காண்போம்.

வேளச்சேரி கல்வெட்டில் ***காசு, பழங்காசு, மாடை, காணம், பணம்*** ஆகிய சிறப்பு சொற்கள் நாணயங்களைப் பற்றி குறிப்பிடுகின்றன.

காசு --- பொற்காசு, அணிகலன்களையும் நிலங்களையும் மதிப்பீடு செய்து விற்கவும் கொடுக்கவும் குறிக்கும் காசு பொற்காசாகும்.[104]

பழங்காசு --- சோழ நாட்டில் நிருபதுங்கவர்ம பல்லவன் ஆட்சியில் வழக்கிலிருந்த பொற்காசு பழங்காசாகும்.[105]

காணம் --- பொற்காசு.[106]

மாடை --- பொற்காசு, தொண்டை நாட்டில் பல்லவர் ஆட்சிக் காலம் முதலாக சோழர் காலத்திலும் வழக்கில் இருந்த பொற்காசின் பெயர்.[107]

இரண்டாம் பராந்தகனின் ஏழாம் ஆட்சி ஆண்டு (கி.பி.964) கல்வெட்டில் 200 காணத்தை (பொற்காசு) தண்டமாக (தண்டனை) கொடுத்தனர்(A.R.E.306).

"நொ[ம்] [க]ாட்டி நாரை பந்மாஹெஸ்வரரெ தர்ம்மாஸநமுதலாக தான் வெண்டிந விட

த்திலெ மெய்வெற்று வகை இவ்விருநூறு காணம் தண்டமிட ஒட்டிக்குடுத்தொ

ம் மஹாசபையொம் இப்பூமி உழக்கும் இரண்டு குடிக்கு ஸர்வ்வ பரிஹாரமா[க] ஒட்டி"[108]

இதன் மூலம் அக்காலத்தில் தண்டனைகள் இருந்தது என்றும் அத்தண்டனையை பணமாக வசூலிக்கும் வழக்கம் இருந்தது என்றும் தெரிகிறது.

முதலாம் இராசேந்திர சோழனின் பத்தாவது ஆட்சி ஆண்டு (கி.பி.1022) கல்வெட்டில் இருந்து தான் காசுகளைக் கொடையாக அளிக்கும் வழக்கம் இருந்ததை அறிகிறோம். அதனால் இவனுடைய காலத்திலிருந்து பொருளாதாரம் மேலோங்கி இருந்திருக்க வேண்டும்.

இக்கல்வெட்டில் 1500 குழி நிலத்தை கோயிலுக்கு விற்று 13 காசுகளைப் பெற்றனர் என்பதும் ப்ராமணப் பெண்மணி ஒரு நந்தா விளக்கெரிக்க 23 காசுகளைக் கொடையாக அளித்த செய்தியும் இக்கல்வெட்டு கூறுகிறது. இதன் மூலம் 1500 குழி நிலத்திற்கு 13 காசு சமம் என்று புலனாகிறது(A.R.E.305).

இரண்டாம் இராசராசனின் ஏழாம் ஆட்சி ஆண்டுக் (கி.பி.1153) கல்வெட்டில் இரண்டு சந்தி விளக்கெரிக்க காசு தானமாக அளித்த செய்தியை இக்கல்வெட்டு கூறுகிறது(A.R.E.307).

மூன்றாம் குலோத்துங்கனின் இருபத்தைந்தாவது ஆட்சி ஆண்டு (கி.பி.1203) கல்வெட்டில் இரண்டு சந்தி விளக்கெரிக்க காசு கொடையாக அளித்ததை இக்கல்வெட்டு கூறுகிறது(A.R.E.310).

மூன்றாம் இராசராசனின் இருபத்திரண்டாவது ஆட்சி ஆண்டுக் (கி.பி.1238) கல்வெட்டு, ஒரு சந்தி விளக்கெரிக்க 1 மாடை புதுக்காசில் 450 ஐ தானமாக அளித்தார்(A.R.E.313).

"றுக்கும் கைகொண்ட மாடை ஒந்றிநால் மாற்றுப்படி புதுக்காக நாநூற்று ஐம்பதும்இ

க் கொயில் சிவப்பிராமணரொம் கைக்கொண்டு சந்தி விளக்கு ஒன்றும் சந்திராதித்தவன

ர எரிப்பதாக சிலாலெகை பண்ணிக் குடுத்தொம் இக்கொயில் சிவப்ராமணரொம் ஸ்ரீமா

ஹெஸ்வர ரகைஷ".

இக்கல்வெட்டின மூலம் மாடைக்கும் புதுக்காசுக்குமிடையிலான மதிப்பீடு தரப்பெற்றுள்ளது. அந்த மதிப்பீட்டில் 1 மாடைக்கு 450 புதுக்காசு சமமாகும்.

இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனின் பதினெட்டாவது ஆட்சி ஆண்டுக் (கி.பி.1261) கல்வெட்டில் ஒரு சந்தி விளக்கெரிக்க ஒன்பது பணம் கொடுத்ததை கூறுகிறது(A.R.E.314).

"விளக்கு எழுநாழிகை எரிய வைத்த விளக்கு ஒன்றுக்கு குடுத்த ஸண

ம் ஒன்பது இப்பணம் ஒன்பதும் கைக்கொண்டு சிலாலெகை

ஸபண்ணிக் குடுத்தொம் திரு உண்ணாழிகை உடையொம் இத்தன்மம் ஸபன்

--------------*ரலெக்ஷ*"[109]

இதுவே வேளச்சேரி கல்வெட்டில் வரும் நாணயங்களை பற்றிய செய்தியாகும்.

வேளச்சேரியின் பொருளியல் வாழ்க்கை மேலோங்கி இருந்தது என்பதை மேலே கூறப்பட்டுள்ள செய்திகளின் மூலம் அறியலாம்.

அடிக்குறிப்புகள்

1. T.V. சதாசிவ பண்டாரத்தார், பிற்கால சோழர் சரித்திரம் பகுதி-1 ப.59. மணிவண்ணன், "கோயில் ஆய்வும் நெறிமுறைகளும்", ப.125.
2. மேலது, ப.59.
3. மேலது, ப.59.
4. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, தமிழ்நாட்டு வரலாறு சோழப் பெருவேந்தர் காலம், ப.109.

5. மேலது, ப.109.
6. மேலது, ப.109.
7. மேலது, ப.106
8. T.V. சதாசிவ பண்டாரத்தார், முன்.கு.நூ., ப.60.
9. மேலது, ப.60.
10. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, முன்.கு.நூ., ப.107
11. மேலது, ப.107.
12. T.V. சதாசிவ பண்டாரத்தார், முன்.கு.நூ., ப.61.
13. மேலது, ப.61-62.
14. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு முன்.கு.நூ., ப.108-109.
15. மேலது, ப.109.
16. மேலது, ப.109.
17. மேலது, ப.109.
18. T.V. சதாசிவ பண்டாரத்தார், முன்.கு.நூ., ப.71.
19. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, முன்.கு.நூ., ப.115-116.
20. T.V. சதாசிவ பண்டாரத்தார், முன்.கு.நூ., ப.73.
21. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, முன்.கு.நூ., ப.117.
22. T.V. சதாசிவ பண்டாரத்தார், முன்.கு.நூ., ப.80-81.
23. மேலது, ப.81.
24. மேலது, ப.81.
25. மேலது, ப.84.
26. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, முன்.கு.நூ., ப.125.
27. மேலது, ப.125.
28. மேலது, ப.125.
29. T.V. சதாசிவ பண்டாரத்தார், முன்.கு.நூ., ப.87.
30. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, முன்.கு.நூ., ப.127.
31. மேலது, ப.127.
32. T.V. சதாசிவ பண்டாரத்தார், முன்.கு.நூ., ப.94.

33. மேலது, ப.116.
34. மேலது, ப.116.
35. மேலது, ப.116-117.
36. மேலது, ப.117.
37. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, முன்.கு.நூ., ப.133.
38. மேலது, ப.136.
39. மேலது, ப.137.
40. மேலது, ப.138.
41. சி. கோவிந்தராசனார், சி.கோ. தெய்வநாயகம், சோழர் வரலாறு, ப.47.
42. T.V. சதாசிவ பண்டாரத்தார், முன்.கு.நூ., ப.148.
43. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, முன்.கு.நூ., ப.156.
44. மேலது, ப.235.
45. சி. கோவிந்தராசனார், சி.கோ. தெய்வநாயகம், முன்.கு.நூ., ப.61.
46. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, முன்.கு.நூ., ப.236.
47. மேலது, ப.236.
48. மேலது, ப.237.
49. மேலது, ப.248.
50. மேலது, ப.249.
51. மேலது, ப.250.
52. மேலது, ப.251.
53. மேலது, ப.252.
54. மேலது, ப.253.
55. மேலது, ப.256.
56. மேலது, ப.256-257.
57. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், ப.299.
58. சி. கோவிந்தராசனார், சி.கோ. தெய்வநாயகம், முன்.கு.நூ., ப.68-69.
59. தமிழ்நாட்டு வரலாற்றுகுழு, முன்.கு.நூ., ப.260.
60. மேலது, ப.262.

61. மேலது, ப.262.
62. மேலது, ப.262-263.
63. மேலது, ப.264.
64. மேலது, ப.339.
65. மேலது, ப.346.
66. மேலது, ப.347-348.
67. மேலது, ப.348.
68. மேலது, ப.350-351.
69. மேலது, ப.351.
70. மேலது, ப.351.
71. மேலது, ப.351.
72. மேலது, ப.351.
73. மேலது, ப.352.
74. K.A. நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள், புத்தகம்-1, பக்.201-202.
75. சி. கோவிந்தராசன், கல்வெட்டு கலைச்சொல் அகரமுதலி, ப.161.
76. மேலது, ப.161.
77. மேலது, ப.363.
78. மேலது, ப.363.
79. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, முன்.கு.நூ., ப.196.
80. சி. கோவிந்தராசன், முன்.கு.நூ., ப.360.
81. மேலது, ப.44.
82. மேலது, ப.134.
83. மேலது, ப.486.
84. மேலது, ப.177.
85. மேலது, ப.174.
86. மேலது, ப.288.
87. மேலது, ப.134.
88. T.V. சதாசிவ பண்டாரத்தார், பிற்கால சோழர் சரித்திரம் பகுதி III, ப.60.

89. மேலது, ப.60.
90. மேலது, ப.60.
91. மேலது, ப.61.
92. சி. கோவிந்தராசன், முன்.கு.நூ., ப.398.
93. மேலது, ப.76.
94. மேலது, ப.359.
95. மேலது, ப.218.
96. மேலது, ப.147.
97. மேலது, ப.61.
98. மேலது, ப.143.
99. மேலது, ப.120.
100. S.I.I. Volume-III (Part III & IV) No:191.
101. S.I.I. Volume-XIX No:97.
102. சி.கோவிந்தராசன், முன்.கு.நூ., ப.18.
103. மேலது, ப.218.
104. மேலது, ப.119.
105. மேலது, ப.345.
106. மேலது, ப.122.
107. மேலது, ப.409.
108. S.I.I. Volume-III & IV No:116.
109. S.I.I. Volume-XII No:205.

திருவிழாக்கள்

தொல்பழங்காலம் தொட்டே திருவிழாக்கள் இருந்து வந்திருக்கின்றன. அதற்கு சான்றாக அக்கால ஓவியங்களை கூறலாம். மக்கள் கூட்டு சேர்ந்த நடனம் ஆடுவது போன்ற ஓவியங்கள் உள்ளது. இது அன்றைய விழாவினை குறிக்கிறது. அதை தொடர்ந்து சங்க காலத்திலும் பல விழாக்கள் நடைபெற்றன என்பதை சங்க இலக்கியங்கள் விரிவாக கூறுகின்றன.

"மூதூர் விழாவின் றாயினும் துஞ்சாதாகும்" (அகம் 122) என்று கூறுவதால் விழா நேரத்தில் மக்கள் உறங்காமல் இருந்தனர் என்று புலப்படுகிறது.

விழாவிற்கு அக்கால அரசர்கள் பொன்னும், பொருளும் வழங்கினர். அரசியரும் கொடைகள் அளித்தனர் என்ற செய்தி கல்வெட்டில் உள்ளன. விழா நடைபெறும் பொழுது மற்ற ஊரில் இருந்து வரும் மக்களுக்காக சத்திரங்களும், விடுதிகளும் அமைத்து அன்னதானம் வழங்கினர்.

ஜாதி மத வேறுபாடியின்றி எல்லா மக்களையும் தம் ஊருக்கு வரவேற்றனர். கோயிலில் நடக்கும் விழாவில் மக்கள் அனைவரும் பங்கு பெற்ற கொடைகளும் அளித்து தம்மாலான உதவியையும் செய்தனர்.

இவ்வாறு பண்டைய காலம் முதல் இன்று வரை திருவிழாக்கள் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றன. வேளச்சேரி தண்டீஸ்வரர் கோயில், செல்லியம்மன் கோயில் மற்றும் யோக நரசிம்மர்

கோயில்களில் தற்பொழுது நடைபெறும் திருவிழாக்கள் தினசரி பூசைகள் பற்றி இனி காண்போம்.

தண்டீஸ்வரர் கோயிலின் தினசரி பூசைகள்

கால பூஜை

ஈஸ்வரனுக்கு ஆறு காலங்களிலும், அம்மனுக்கு மூன்று காலங்களிலும் பூசைகள் நடத்தப்படுகின்றன. சூரியோதயத்திற்கு முன்புள்ள மூன்றே முக்கால் நாழிகை முதல் சூரியோதய் வரை உள்ள காலமே *'உஷத்காலம்'* எனப்படும். உஷத் கால வழிபாடு காலை ஆறரை மணியளவில் நிகழும். சூரியோதயத்திலிருந்து ஏழரை நாழிகை மணியளவைக் *'கால சந்தி'* என்பர். இக்கால சந்தி வழிபாடு காலை எட்டரை மணியளவில் நடைபெறும். காலசந்தி முடிவிலிருந்து மூன்றே முக்கால் நாழிகைக் காலத்தை *'உபசந்தி'* எனவும் அதனையடுத்த ஒரு யாமப் பொழுதை *'உச்சிகாலம்'* எனவும் கணக்கிட்டுள்ளனர். இவ்வுச்சி கால வழிபாடு பதினொன்றரை மணியளவில் நடைபெறுகிறது. சூரிய அஸ்தமனத்திற்கு முன்புள்ள மூன்றே முக்கால் நாழிகை *'சாயரக்ஷை'* எனவும் இதனையடுத்த மூன்றே முக்கால் நாழிகை *'இரண்டாம் காலம்'* எனவும் இதற்கு பின் உள்ள மூன்றே முக்கால் நாழிகை *'அர்த்த ஜாமம்'* எனக் கணக்கிடப்பட்டுள்ளன. இக்கோயிலில் மாலை நான்கரை மணிக்குப் பிரதோஷ கால வழிபாடும் ஆறு மனியளவில் சாயரக்ஷையும் இரவு எட்டரை மணியளவில் அர்த்த ஜாம வழிபாடும் நடைபெறுகின்றன.

வாராந்திர வழிபாடு

இக்கோயில் வாரம்தோறும் செவ்வாய்க்கிழமையன்று தட்சிணாமூர்த்திக்கும், வெள்ளிக்கிழமையன்று கருணாம்பிகை

அம்மனுக்கும், சனிக்கிழமையன்று சனீஸ்வரருக்கும், செவ்வாய் கிழமையன்று இராகு காலத்தில் துர்கை சந்நதியில் விளக்கேற்றியும் வழிபாடுகளும் செய்கின்றனர்.

பிரதோஷ வழிபாடு

பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை நடைபெறும் வழிபாடுகளுன் பிரதோஷ வழிபாடு மிகவும் சிறப்பு வாய்ந்தது. நந்தியினுடைய செறுக்கினை அடக்குவதற்காக அவனுடைய இருகொம்புகளுக்குமிடையே சிவபெருமான் நின்று ஆடிய வேளையே பிரதோஷமாக கொண்டாடப்படுகிறது.

சிவபெருமான் நந்தியின் தலையில் நின்று ஆடியபொழுது தேவர்களும், அனைத்து தெய்வங்களும் தேவ கணங்களும் ஒன்று கூடி நின்று அந்தக் காட்சியினை அச்சத்துடனும் மகிழ்வுடனும் பார்த்தால் அவ்வேளையில் சிவபெருமானை தரிசித்தால் அனைத்து தெய்வங்களுடைய அருளும் கிட்டும் என்பதால் பிரதோஷம் மக்களை ஈர்க்கும் விழாவாக விளங்கி வருகிறது. இவ்விழா மாதத்தில் இருமுறையாக தேய்பிறை 13-ஆம் நாளன்றும், வளர்பிறை 13-ஆம் நாளன்றும் கொண்டாடப்படுகிறது. நந்தியின் ஆணவத்தை அடக்கிய சிவபெருமான் அவர்க்கு அருளும் வழங்கியதால் பிரதோஷத் திருவிழா நந்திக்குரிய விழாவாக எடுக்கப்படுகின்றது. மக்கள் தங்கள் கோரிக்கைகளை பிரதோஷ விழா முடிந்த பின்னர் நந்தியின் காதுகளில் தம் வேண்டுதல்களைக் கூறுகின்றனர். நந்தி மக்களின் கோரிக்கைகளை இறைவனிடம் கூறி நிறைவேற்றி வைப்பார் என்பது நம்பிக்கை.

இத்தகைய சிறப்பு வாய்ந்த விழா தண்டீஸ்வரர் கோயிலில் அபிஷேகங்கள் அலங்காரங்கள் ஆகியவற்றுடன் விமர்சையாக நடைபெறுகிறது. மேலும் பௌர்ணமி, சங்கடசதுர்தி, அமாவாசை, கிருத்திகை, சஷ்டி ஆகிய நாட்களிலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாதாந்திர விழாக்கள்

சித்திரை மாதம்

சித்திரை மாதத்தில் பௌர்ணமியன்றோ அல்லது அதற்கு முன்தினமோ சித்திரை நட்சத்திரம் தோன்றும். சித்திரா பௌர்ணமியன்று நான்முகனின் மேனியிலிருந்து சித்திரகுப்தன் தோன்றியதாக புராண வரலாறு கூறுகிறது. சித்திர குப்தன் மானுடர்கள் புரியும் நன்மை தீமைகளைப் பட்டியலிட்டு யமனிடம் அளிப்பதாகவும் அவற்றிற்கு ஏற்ப யமன் மறுபிறவியை நிர்ணயம் செய்வதாகவும் நம்பிக்கை நிலவுகிறது. இந்நாளில் மானுடர்கள் தங்களது பாவங்களை மன்னித்தருளுமாறு சித்திர குப்தனை ஆராதிப்பது நன்மையளிக்கும். தண்டீஸ்வரர் கோயிலில் இந்நாளில் விசேஷ வழிபாடுகளும் லட்சார்சனையும் நடைபெறுகிறது.

ஆடி மாதம்

இம்மாதம் அம்மனுக்கு உகந்த மாதம். இந்த மாதத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளிலும் பூர நட்சத்திரத்தன்று கருணாம்பிகை அம்மனுக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

புரட்டாசி மாதம்

புரட்டாசி மாதத்தில் சுக்லபட்சத்தில் துவங்கி ஒன்பது நாட்களுக்கு நவராத்திரி விழா கொண்டாடப்படுகிறது. தட்ப வெப்பத்தில் ஏற்படும் மாறுதல்களால் நோய் நொடிகள் ஏற்பட்டு மக்களைப் பாதிக்காமல் இருக்க உலக மாதாவை இந்நாட்களில் வழிபடுகிறோம். நவராத்திரி விழா அஞ்ஞான இருளை அகற்றி ஞான ஒளியை அளிக்கவல்லது. தண்டீஸ்வரர் கோயிலில் நவராத்திரி காலத்தில் ஒன்பது நாட்களுக்கு அம்மனுக்கு விதவிதமான அலங்காரங்களும் வேடங்களும் புனையப்படுகின்றது. உற்சவரும் பல்வேறு வடிவங்களை ஏற்பார்.

பொம்மைகளை வரிசையாக நிறுத்திக் கொலுவைப்பர். இரவில் அம்மனுக்கும் உற்சவருக்கும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

ஐப்பசி மாதம்

ஐப்பசி மாதம் பௌர்ணமி நன்னாளில் தண்டீஸ்வரருக்குச் சமைத்த அரிசியால் அன்னாபிஷேகம் செய்து வழிபடுகின்றனர்.

கார்த்திகை மாதம்

கார்த்திகை மாத பௌர்ணமி நாளன்று சந்திரன் கிருத்திகா நட்சத்திரத்தில் இருக்கும் நாள் கார்த்திகை தீபமாகக் கொண்டாடப்படுகிறது. பஞ்ச பூதங்களில் ஒன்றான அக்னி வடிவாக ஜோதி உருவில் ஈசன் தோன்றினார். எனவே நெருப்பை வழிபடுவதே இப்பண்டிகையின் நோக்கம். கார்த்திகை தீப திருநாளன்று தண்டீஸ்வரர் கோயிலில் அதிக அளவில் அகல் விளக்குகளை ஏற்றி இறைவனுக்குச் சிறப்பு வழிபாடு நடத்துகின்றனர். இரவில் கோயிலுக்கு வெளியே சொக்கப்பனை கொளுத்தப்படும் ஜோதி வடிவாக ஈசன் எழுந்தருளியதை உணர்த்தவே பனைமரத்தின் பகுதிகளால் உருவான சொக்கப்பனை கொளுத்தப்படுகிறது.

மார்கழி மாதம்

வானவர்களுக்கு அருணோதய காலமாகக் கருதப்படும் மார்கழி மாதம் முழுவதும் இறை தியானம், தோத்திரம் ஆகிய செயல்களில் ஈடுபட்டல் சகல நலன்களையும் பெறலாம் என ஆன்றோர் கருதுவர். இம்மாதத்தில் அதிகாலையில் துயிலெழுந்து இறைவழிபாடு செய்வதும் நோன்புகள் நோற்பதும் உகந்த செயல்களாகும். தண்டீஸ்வரர் ஆலயத்தில் இம்மாதம் முழுவதும் காலை ஐந்து மணியளவில் சிறப்பு வழிபாடுகள் நிகழும், திருவாதிரை நன்னாளில் விடியற்காலையில் ஆருத்ரா தரிசனம் கொண்டாடப்படும்

நடராஜருக்கு அபிஷேகம், சிறப்பு அலங்காரம், உலா ஆகியன நடைபெறுகின்றன.

தை மாதம்

தட்சிணாயனம் முடிந்து உத்தராயண காலம் பொங்கல் நாளன்று துவங்கும், மகர சங்கராந்தியன்று காலை ஆறுமுதல் ஏழு மணிக்குள் சூரியனின் ஒளிக்கதிர்கள் தண்டீஸ்வரரின் மீது நேரடியாக விழுந்து லிங்கத் திருமேனியை ஒளிமயமாகச் செய்து வந்தது. அண்மைக் காலத்தில் கோயிலுக்கு முன்னர் அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதால் தற்போது சூரியனின் கதிர்கள் லிங்கம் மீது விழுவதில்லை.

மாசி மாதம்

மாசி மாத தேய்பிறை காலத்தில் சதுர்தசி திதியில் திருவோணம் நட்சத்திர நாளன்று மகாசிவராத்திரி கொண்டாடப்படுகிறது. ஈசனின் அடியையும் முடியையும் தேடிச் சென்று காணமுடியாமல் திகைத்து திரும்பிய அரி அயன் ஆகியோர் முன் ஈசன் ஜோதி வடிவில் காட்சியளித்த பொழுதே மகாசிவராத்திரியாகும்.

இத்திருநாளன்று தண்டீஸ்வரர் கோயிலில் நான்கு கால வழிபாடுகள் நடைபெறுகின்றன. இதுவே தண்டீஸ்வரர் கோயிலில் நடைபெற்று வரும் திருவிழாக்களாகும்.

செல்லியம்மன் கோயில் திருவிழாக்கள்

இக்கோயிலில் இரண்டு கால பூசைகள் நடைபெற்று வருகின்றன. காலை பூசை 6-9 மணி வரை நடைபெறும். மாலை நேர பூசை 5-8.30 மணி வரை நடைபெறும்.

பௌர்ணமி பூசை

மாதந்தோறும் இக்கோயிலில் வீரபத்திரருக்கு பௌர்ணமி நாளன்று விசேஷ சிறப்பு பூசை நடைபெற்று வருகிறது. வீரபத்திரர் கன்னியரை காத்த கடவுள் என்பதால் பெண்கள் இவருக்கு பாலாபிஷேகம் செய்து வருகின்றனர். மேலும் வெற்றிலை மாலை அணிவித்து தங்களுக்கு நேர்ந்துள்ள குறைகளை சொல்லி வேண்டிக் கொள்கிறார்கள்.

சப்த கன்னியரில் ஒருத்தியான சாமுண்டியை செல்லியம்மனாக பாவித்து வழிபடுகின்றனர். சப்த கன்னியர் சன்னதியை “செல்லியம்மன் சன்னதி” என்றே அழைக்கின்றனர். செல்லியம்மன் கோயிலில் நடைபெற்று வரும் திருவிழா இது ஒன்றேயாகும்.

யோக நரசிம்மர் கோயில் திருவிழாக்கள்

இக்கோயிலில் இராஜகோபுரத்திற்கு நன்னீராட்டு விழா மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது.

பூசைகள்

இக்கோயிலில் இரண்டு கால பூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

நரசிம்மர் ஜெயந்தி

இக்கோயிலில் வைகாசி மாதம் நரசிம்மர் ஜெயந்தி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கிருஷ்ண ஜெயந்தி

இக்கோயிலில் கிருஷ்ண ஜெயந்தி பூசை வருடா வருடம் ஆடி மாதத்தில் ரோகிணி நட்சத்திரத்தில் அஷ்டமியில் நடைபெறும்.

பத்து நாள் உற்சவம்

ஆழ்வார்களுக்கு பத்து நாள் உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. இத்திருவிழா இரா பத்து, பகல் பத்து என நடைபெறுகிறது. கடைசி நாளான பத்தாம் நாளன்று உற்சவரை கோயிலில் ஊர்வலமாக கொண்டு வருவர்.

வைகுண்ட ஏகாதேசி

மார்கழி மாதத்தில் சுக்ல பட்சத்தில் வரும் ஏகாதேசிக்கு 'வைகுண்ட ஏகாதேசி' என்று பெயர். மாதத்திற்கு காயத்திரி என்றும், முக்திக்கு காசி என்றும், விரதத்திற்கு ஏகாதேசி என்றும் அழைக்கப்படுவது வழக்கம், இந்துக்கள் இப்பண்டிகைக்கு மிக முக்கியம் அளிக்கின்றனர். இத்தகை சிறப்பு வாய்ந்த வைகுண்ட ஏகாதேசி திருவிழா யோக நரசிம்மர் கோயிலில் நடைபெறுகிறது.

ஸ்ரீராம நவமி

ராமன் பிறந்த நாளை இந்துக்கள் அனைவரும் கொண்டாடுவர். இந்நாளன்று குங்குமம், சந்தனம், துளசி மாலை, பழம், வெற்றிலை, பூ இவைகளை வைத்து யோக நரசிம்மர் கோயிலில் உள்ள ராமர் படிமத்திற்கு அர்ச்சனை செய்வர். இதுவே யோக நரசிம்மர் கோயிலில் நடைபெற்று வரும் திருவிழாக்களாகும்.

துணைநூற்பட்டியல்

முதன்மைச் சான்றுகள் :

1. S.I.I. Volume - III (Part III & IV), No.191.
2. S.I.I. Volume - III & IV, No.116.
3. S.I.I. Volume - XII, No.205.
4. S.I.I. Volume - XIX, No.97.

இரண்டாம் தர சான்றுகள் :

1. அம்பை மணிவண்ணன், கோயில் ஆய்வு நெறி முறைகளும்.
2. ஆளவந்தார், ஆர்., கல்வெட்டில் ஊர்பெயர்கள்.
3. கலைக்கோவன், இரா., நளினி, மு., தளிச்சேரிக் கல்வெட்டு.
4. காசிநாதன், நடன., தமிழர் நாகரிகம்.
5. கோவிந்தராசனார், சி., தெய்வநாயகம், கோ., சோழர் வரலாறு.
6. கோவிந்தராசன், சி., கல்வெட்டு கலைச்சொல் அகர முதலி.
7. சதாசிவ பண்டாரத்தார், T.V., பிற்கால சோழர் சரித்திரம்
8. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, தமிழ்நாட்டு வரலாறு சோழப் பெருவேந்தர் காலம்.
9. நாகராசன், கரு., செங்கல்பட்டு மாவட்ட ஊர்ப்பெயர்கள்.
10. நீலகண்ட சாஸ்திரி, K.A., சோழர்கள்.
11. பிள்ளை, கே.கே., தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்.
12. மலர்விழி, வீ., சோழர் கால கட்டடக்கலையும் சிற்பக்கலையும்.
13. நாகசாமி, சந்திரமூர்த்தி, மா., தமிழக கோயிற் கலைகள்.
14. தமிழ்நாட்டு வரலாறு சோழப்பெருவேந்தர் காலம், தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு.

கல்வெட்டு வாசகம்

மாவட்டம்	: சென்னை	ஆட்சி ஆண்டு	: 5
வட்டம்	: -	வரலாற்று ஆண்டு	: கி.பி. 962
ஊர்	: வேளச்சேரி	இ.க.ஆ. அறிக்கை	: 315/1911
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: த.க.தொ. 3/114
எழுத்து	: கிரந்தங் கலந்த தமிழ்		
அரசு	: சோழர்	ஊ.க.எண்	: 2
அரசன்	: மதுரை கொண்ட கோவிராஜகேசரி (சுந்தரசோழன்)		

இடம் : புலியூர்க் கோட்டத்துக் கோட்டூர் நாட்டு வெளிச்சேரி ஊர் நிர்வாகச் சபையான ஆளுங்கணத்து உறுப்பினர் தென்னூர் தேவகுமார கிரமவித்தன் என்பவன் இவ்வூர் தண்டீஸ்வரர் கோயிலில் ஒரு நந்தா விளக்கெரிக்க 96 ஆடுகள் தானமளித்துள்ளான்.

குறிப்புரை : புலியூர்க் கோட்டத்துக் கோட்டூர்

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட கோவிராஜகேஸரி பந்மர்க்கு யாண்டு
2. ரு சாவது புலியூர் கோட்டத்து கோட்டூர் நாட்டு வெளிச்சேரி யாளுங்க-
3. ணத்தாருள் தெந்னூர் தேவகுமார க்ரமவித்தநிவூர் திருதண்டீஸ்வ-
4. ர தேவர்க்கு சந்த்ராதித்தவற் ஒரு நுந்தா விளக் கெரிப்பதற்க்கு வைத்த
5. சாவாமூவா பேராடு தொண்ணூற்று இவ்வாடு ரக்ஷிப்பார் பந்மாஹேஸ்வரர் ||-

மாவட்டம் : சென்னை		ஆட்சி ஆண்டு	: 15
வட்டம் : -		வரலாற்று ஆண்டு	: கி.பி 1009
ஊர் : வேளச்சேரி		இ.க.ஆ. அறிக்கை	: 316/1911
மொழி : தமிழ்		முன் பதிப்பு	: த.க.தொ. 3/191
எழுத்து : கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு : சோழர்		ஊ.க.எண்	: 4
அரசன் : பார்த்திவேந்திராதிவர்மன்			

இடம் : செல்லியம்மன் கோயில் தெற்குச் சுவர்.

குறிப்புரை : சோழநாட்டு மழநாட்டுப் பிரிவில் உள்ள திருவேட்பூர் என்ற ஊரைச் சார்ந்த திருவேட்ப்பூர் உடையான் தேவடிகள் என்பான் புலியூர் கோட்டத்து வெளிச்சேரியில் உள்ள சப்தமாதர்கள் (ஏழு கன்னிகையர்) வழிபாட்டிற்கு வேண்டி, இவ்வூர் மகாசபையாரிடம் விலை கொடுத்து நிலம் ஒன்றினை வாங்கித் தானமளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பாத்தி வேஷாயிபதி வருற்கு யாண்டு பத்தாவது புலியூ-
2. ர் கோட்டத்து வெளிச்சேரி மஹாஸபையோம் எம்மூர் ஸப்தமாதுக்களு-
3. க்குச் சோழநாட்டு மழநாட்டுத் திருவேட்பூர்த் திருவேட்ப்பூருடையான் தேவடி-
4. கள் சூசந்த்ரகாலமு[ம்] நிச்சற்படி வைத்த திருவமிர்து ஒன்று இதனுக்கு இவ-

5. ன் விலைகொண்டு வைத்த ஹூமி இவ்வூர்த் தென்கழனிப் பூதிபாக்கன்
6. செறுவு தடி நாலினா[லும் நிலம்] யிரினூற்றுக்குழி இரண்டேற்றிக் குழி ஐஞ்நூற்று
7. முப்பத்தொன்றரையே அரைக்காணியாலும் எப்பேர்ப்பட்ட இறையும்
8. ஒழியப் பணித்து இறைஇழிச்சிக் குடுத்தோம் மஹாஸபையோம்
9. இ ஹூமி நாங்களே கொண்டு நிசதம் ஒரு திருவமிர்து செய்விக்க கடவோம் இ ஸ்ரீகோ-
10. யிலுடைய மாஹேஸ்வரோம் கடைக்கூட்டி வெட்டுவிச்சார் காளியபட்டர்

மாவட்டம் : சென்னை		ஆட்சி ஆண்டு	: 3
வட்டம் : -		வரலாற்று ஆண்டு	: கி.பி. 1015
ஊர் : வேளச்சேரி		இ.க.ஆ. அறிக்கை	: 308/1911
மொழி : தமிழ்		முன் பதிப்பு	: -
எழுத்து : கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு : சோழர்		ஊ.க.எண்	: 7
அரசன் : முதலாம் இராசேந்திரன்			

இடம் : தண்டீஸ்வரர் கோயில் மேற்குச் சுவர்

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்து கோட்டூர் நாட்டு பிரமதேயம் வெளிச்சேரி ஆளுங்கணத்து உறுப்பினர் பத்தங்கி காளகுமார கிரமவித்தன் என்பவன் இக்கோயில் திருத்தண்டீஸ்வரர் தேவர் இறைவனுக்குத் திருநந்தா விளக்கு வைப்பதற்கு 90 ஆடுகள் கொடையளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரி வந்மரான ஸ்ரீ ராஜேந்த்ரசோழ
2. தேவற்கு யாண்டு ௩ ஆவது ஜயங்கொண்டசோழ மண்-
3. டலத்துப் புலியூர்க் கோட்டத்து கோட்டூர் நாட்டு ப்ரஹ்மதே-
4. யம் வெளிச்சேரி யாளுங்கணத்தாருள் பத்தங்கி கா-
5. ாள குமார க்ரமவித்தனேன் இவ்வூர் திருத்தண்டீஸ்வர-

6. தேவர்க்கு சந்த்ராதித்தவர் ஒரு திருநந்தா விளக்கு வைப்பதற்-
7. க்கு வைத்த சாவாமூவாப் பேராடு தொண்ணூறு இத்-
8. தர்ம ரக்ஷிப்பார் ஸ்ரீபாதம் என் தலை மேலன

மாவட்டம்	: சென்னை	ஆட்சி ஆண்டு	: 3
வட்டம்	: -	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1015
ஊர்	: வேளச்சேரி	இ.க.ஆ. அறிக்கை	: 309/1911
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: கிரந்தங் கலந்த தமிழ்		
அரசு	: சோழர்	ஊ.க.எண்	: 8
அரசன்	: முதலாம் இராசேந்திரன்		
இடம்	: தண்டீஸ்வரர் கோயில் மேற்குச் சுவர்		

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்து கோட்டூர் நாட்டு பிரமதேயம் வெளிச்சேரி திருத்தண்டீஸ்வர மகாதேவர் கோயிலில் திருநந்தா விளக்கு ஒன்று வைப்பதற்கு வேசாலி நாட்டுப் பிரிவைச் சார்ந்த ஆற்றூர் ஊரினனான நாராயணன் என்பவன் 90 ஆடுகள் தானமளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரி வந்மரான ஸ்ரீ ராஜேந்த்ரசோழ தே-
2. வர்க்கு யாண்டு ௩ ஆவது வேசாலிப்பாடி
3. . . . ஆற்றூருடையான் நாராயணன்
4. . . . ஜயங்கொண்டசோழ-
5. மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்து கோட்டூர் நாட்டு வெளிச்-
6. சேரி திருத்தண்டீஸ்வர . . . தி-

7. ருத்தண்டீஸ்வரத்து மஹாதேவர்க்கு சந்த்ராதித்தவரை
8. திருநந்தா விளக்கெரிப்பதற்கு வைத்த சாவாமூவாப் பேரா-
9. டு தொண்ணூறு இ ஜீ ப்டீ வ ந் ா ே ஹ ஸ் ர ரக்ஷை||—

மாவட்டம் : சென்னை		ஆட்சி ஆண்டு	: 18
வட்டம் : -		வரலாற்று ஆண்டு	: கி.பி 1261
ஊர் : வேளச்சேரி		இ.க.ஆ. அறிக்கை	: 314/1911
மொழி : தமிழ்		முன் பதிப்பு	: தெ.இ.க. தொ.7/205
எழுத்து : கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு : பிற்காலப் பல்லவர்		ஊ.க.எண்	: 14
அரசன் : கோப்பெருஞ்சிங்கன்			

இடம் : தண்டீஸ்வரமுடையார் கோயில் தெற்குச் சுவர்.

குறிப்புரை : சோழமண்டலத்து கீரங்குடி ஊரைச் சார்ந்த மருதுடையான் சோறன் அரியாயதணன் என்பவன் வெளிசேரி என்கிற ஜீனசிந்தாமணிச் சதுர்வேதி மங்கலத்து உடையார் திருத்தண்டீசுரமுடைய நாயனார் கோயிலில் ஏழு நாழிகை நேரம் எரியக் கூடிய சந்தி விளக்கு ஒன்று வைப்பதற்கு திருவுண்ணாழிகைச் சபையாரிடம் ஒன்பது பணம் அளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பெருஞ்சிங்க தேவற்க்கு யாண்டு ய௮–
2. வது வெளிசேரியான சிநசிந்தாமணிச் சதுவேஷ்தி மங்கலத்து
3. உடையார் திருத்தண்டீசுரமுடைய நாயனார்க்கு சோழ ம-

4. ண்டலத்து கீரங்குடிஇல் மருதுடையான் சோறன் அரிய-
5. ராயதணன் இன்னாயனார்க்குச் சந்திராதித்தவரை ஒரு சந்தி
6. விளக்கு ஏழு நாழிகை எரிய வைத்த விளக்கு ஒன்றுக்கு குடுத்தனை-
7. [யு]ம் ஒன்பது இப்பணம் ஒன்பதும் கைக்[கொண்டு] சிலாலேகைச்
8. [செய்து]க் குடுத்தோம் திருவுணாழிகை ஸஹையோம் இத்தன்மம் பன்-
9. மாஹேஸ்வரர் ரக்ஷை

✻✿✻

நிழற்படங்கள்



விமானம்

விநாயகர்

தட்சிணாமூர்த்தி

பிரம்மா

இலிங்கோத்பவர்

துர்கை

பைரவர்

துவார பாலகர்கள்

சிவகாமி அம்மன்

விநாயகர்

யோக நரசிம்மர் கோபுரம் திருவாயில்

சோழர் கால கல்வெட்டு

சோமாஸ்கந்தர்

பிரதோஷ நாயனார்

தன்மக்ஸ்வரர் கோயில் அமைப்பு

தண்டீஸ்வரர் கோயில் கிழக்கு மற்றும் மேற்கு கோபுரங்கள்





பிராமி

சாமுண்டி
(செல்லியம்மன்)

வைஷ்ணவி

வராகி

பூதவரிகள்

வீரபத்திரர்

வேளச்சேரி சிவன் கோயில்